# வருடாந்த அறிக்கை 2016

## இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| கூட்டுத்தாபனத் தகவல்கள் | 2 |
| எமது பதவியணி பற்றிய விபரம் | 3 |
| தலைவரின் செய்தி | 4 - 5 |
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | 6 - 7 |
| எமது தூரநோக்கும் செயற்பணியும் | 8 |
| செயலாற்றுகை | 9 - 33 |
| நிதிக் கூற்று | 34 - 55 |
| கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 56 - 72 |
| கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் | 73 - 85 |

## கூட்டுத்தாபனத் தகவல்கள்

### அதிகார சபையின் பெயர்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை

### சட்ட அந்தஸ்து

2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை சட்டத்தினால் தாபிக்கப்பட்டது.

### 2016 ஆம் ஆண்டிற்கான முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் பற்றிய விபரம்


| | | |
|---|---|---|
| **திரு கீர்த்தி விக்ரமரட்ன** | **தலைவர்** | **இலங்கை நிலெபறுதகு வலு அதிகார சபை** |
| **திரு எம்.ஜி.ஏ. குணதிலக்க** | உறுப்பினர் | மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சு |
| **திரு பீ.என். தமிந்த குமார** | உறுப்பினர் | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு |
| **திருமதி ஐ.ஜே. அபேரட்ன** | உறுப்பினர் | கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு |
| **திரு கே.பீ. குருகே** | உறுப்பினர் | பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு |
| **திரு டீ.வி. பந்துலசேன** | உறுப்பினர் | கமத்தொழில் அமைச்சு |
| **திரு டப்ளியூ.ரீ.எச். ருச்சிர விதான** | உறுப்பினர் | மகாவலி அமைச்சு |
| **பொறியியலாளர் ஆரியரட்ன** | உறுப்பினர் | நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சு |
| **திரு ஏ.எம்.ஆர்.ஜே.கே. ஜயசிங்க** | உறுப்பினர் | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு |
| **திரு எஸ். தர்ஷன்** | உறுப்பினர் | நிதி அமைச்சு |
| **திருமதி ஆர்.பி.ஆர். அமரசிங்க** | உறுப்பினர் | விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு |
| **திரு தமித குமாரசிங்க** | உறுப்பினர் | இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு |
| **திரு டீ.டீ. ஆனந்த நாமல்** | உறுப்பினர் | இலங்கை சக்தி முகாமையாளர்களின் சங்கம் |
| **திருமதி பர்ஷானா அனிப்** | உறுப்பினர் | நியமன உறுப்பினர் |
| **திரு திரு ஏ.எம்.சி. பெரேரா** | உறுப்பினர் | நியமன உறுப்பினர் |
| **திரு ஹிரான் அஜித் கருனாரட்ன** | உறுப்பினர் | நியமன உறுப்பினர் |
| **திரு ஜி. மகேந்திர பெரேரா** | உறுப்பினர் | நியமன உறுப்பினர் |

### 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்கள் பற்றிய விபரம்

| | | |
|---|---|---|
| **திரு எஸ். தர்ஷன்** | **தலைவர்** | **நிதி அமைச்சு** |
| **திரு எம்.ஜி.ஏ. குணதிலக்க** | உறுப்பினர் | மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சு |
| **திருமதி பர்ஷானா அனிப்** | உறுப்பினர் | நியமன உறுப்பினர் |
| **திரு எல்.கே.ஐ. சமந்த** | கணக்காய்வு அத்தியட்சகர் | கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம் |
| **திரு எஸ்.கே. மலவிசூரிய** | அவதானிப்பாளர் | மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சு |

## 2016 ஆம் ஆண்டிற்கான பதவியணி பற்றிய விபரம்

ஒப்பீட்டளவில் எமது அதிகார சபை புதியவொரு இளம் நிறுவனமாகும். இங்கு மொத்தமாக 104 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். பதவியணி பற்றிய விபரங்கள் கீழ்காணும் வரைபடத்தின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.




### பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

கட்டிடத்தொகுதி 05, 01-வது மாடி, BMICH,
பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி: 0112677445
தொலைநகல்: 0112682534
மின்னஞ்சல்: info@energy.gov.lk
இணையத்தள முகவரி: www.energy.gov.lk

## தலைவரின் செய்தி



இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தலைவர் என்ற ரீதியில் 2016 ஆம் ஆண்டின் செயற்பாடுகளினது செயலாற்றுகை மீளாய்வுக்கு இந்தச் செய்தியை விடுப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

சக்தி என்பது நாட்டின் அபிவிருத்திற்குத் தேவையான அடிப்படை நுகர்வுப் பொருட்களில் ஒன்றாகும். இலங்கையின் தேசிய சக்திக் கொள்கையும் திறமுறைத்திட்டங்களும் தேசிய மற்றும் தனியாள் உள்ளுணர்வுகளிலிருந்து சக்தியின் பாதுகாப்பில் ஒரு வலிமையான அழுத்தத்தைக் கொண்டுள்ளன. எல்லா நேரங்களிலும் சகல பிரஜைகளுக்கும் சுமக்கக்கூடிய செலவில் நம்பத்தகுந்த, தூய்மையான சக்தி கிடைக்கப்பெறும் ஒரு நிலை உருவாகும் என இந்தக் கொள்கை ஆவணம் எதிர்வுகூறுகின்றது.

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை (இ.நி.வ.அ.ச.) நாட்டில் சகல வகையான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களின் நிலைபெறுதகு பாவனையையும் மற்றும் அதிகரித்த தழுவல் நடவடிக்கைகளையும் ஊக்குவிக்கின்ற முக்கியமான அரச நிறுவனமாகும். தற்பொழுது இலங்கையின் சக்தித் துறை குறிப்பாக சுமக்கக்கூடிய விலைகளில் முழு நாட்டிற்கும் தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குதல் மற்றும் அனல் சக்தி உற்பத்திற்காக இறக்குமதி செய்யப்படும் கனிய எண்ணெய்களில் கடுமையாக தங்கியிருக்கின்ற பொருளாதாரத்தில் கடும் பாதகமான தாக்கங்கள் என்பன தொடர்பில் பல சவால்களை எதிர்நோக்கி வருகின்றது. இந்நிலையைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, அரசாங்கம் பின்வரும் திறமுறைத்திட்டங்களை வகுத்தமைத்துள்ளது:

- இறக்குமதி செய்யப்படும் கனிய எண்ணெய்க்கு ஒரு பிரதியீட்டுப் பொருளாக 2020 ஆம் ஆண்டளவில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களைப் பயன்படுத்தி 20% வீத க்றிட் மின்சாரத்தை உற்பத்தி செய்தல்.
- சக்திப் பாதுகாப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி 2020 ஆம் ஆண்டளவில் மொத்த சக்தி நுகர்வை 10% வீதத்தால் குறைத்தல்.

தற்பொழுது மொத்த மின்சார உற்பத்தியில் மேலதிகமாக 10% புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி (பு.மீ.ச.) என்ற மட்டுப்பாட்டை விஞ்சிச்செல்ல முடிந்துள்ளது. இது 2020 ஆம் ஆண்டளவில் பு.மீ.ச. சக்தியைப் பயன்படுத்தி 20% வீத மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இலக்கை உணர்த்தும் பயணத்தில் திருப்திகரமான ஒரு திருப்புமுனையை சுட்டிக்காட்டுகின்றது.

சக்தி வினைத்திறன் வாய்ந்த சேவைகள் துறையை வலுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குறுத்துகை தலையீட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றில் கவனத்தை செலுத்தி, சக்திப் பாதுகாப்புப் பிரிவில், சக்திப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 38 ஜி.வொ.ம. மின்சாரத்தையும், 14 மில்லியன் லீட்டர் உலை எண்ணெய்யையும் மற்றும் 27.2 மில்லியன் கி.கி எரி விறகுகளையும் சேமிக்க முடிந்தது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள் 4 முக்கிய பிரிவுகளில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

i. மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி - தேசிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்திப் பாதுகாப்பு இலக்குகளை உணரச்செய்வதில் நேரடியாக சம்பந்தப்படுவது இதன் குறிக்கோளாகும் .
ii. சக்திப் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் - தேசிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்திப் பாதுகாப்பு இலக்குகளை உணரச்செய்வதில் நேரடியாக சம்பந்தப்படுவது இதன் குறிக்கோளாகும்.
iii. அறிவு முகாமைத்துவம் - சக்தி உள்ளுணர்வுடைய மக்கள் சமூகத்தை உருவாக்குவதை நோக்கிய சக்தி சார்ந்த கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவது இதன் குறிக்கோளாகும்.
iv. திறமுறைத்திட்டம் - கொள்கை ரீதியான தலையீட்டு நடவடிக்கைகள், ஆ.அ. சார்ந்த தலையீட்டு நடவடிக்கைகள் என்பவற்றை அபிவிருத்தி செய்து தொழில்நுட்பம் சார்ந்த பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடுசெய்தல் மற்றும் நாட்டில் நீண்டகால நிலையான சக்தித் தாபிப்புக்கு ஆதரவளித்தல் என்பன இதன் குறிக்கோளாகும்.

சக்திப் பாவனையை சரியாக முகாமை செய்வதனூடாக சக்தியை பாதுகாக்கும் நடவடிக்கையை செய்றபடுத்தும் பொருட்டு எமக்கு நவீன தொழில்நுட்பம், சட்டவாக்க அணுகுமுறைகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, அறிவு மற்றும் விழிப்புணர்வு என்பன அவசியமாகும். அதே போன்று, சக்திப் பாவனையைப் பொறுத்த வரையில், நாட்டின் சக்திக்கான எதிர்காலத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் சுதேசிய மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களை அனுகூலமான முறையில் பயன்படுத்தும் பொருட்டு நாம் நவீன புதிய அணுகுமுறைகளைப் பின்பற்றவும் வேண்டும்.

நாட்டின் நிலைபெறுதகு சக்தி தொடர்பான பரந்த அமுலாக்கத்திற்காக விதிக்கப்பட்டுள்ள தேவையான வேலைச்சட்டகக் கண்ணோட்டத்தில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தை எண்ணிப் பார்க்கும் போது எம்மால் மகிழ்ச்சியடைய முடியும். இது எதிர்காலத்தில் நிலைபெறுதகு சக்தியின் வளர்ச்சியடைந்துள்ள ஒரு கட்டத்திற்குரிய உகந்த ஒரு அடித்தளமாகவும் விளங்கலாம். கூறப்பட்ட பின்னணியில் பார்க்கும் போது, நன்கு ஒருமுகப்பட்ட வலிமையான ஒரு விதத்தில் நாட்டில் நிலைபெறுதகு சக்தி எண்ணக்கருவை அமுலாக்குவதில் முற்றிலும் முக்கியத்துவம் பெறுவது யாதெனில் புரிந்துணர்வுடன் செயற்பாடுகளை வலுப்படுத்துவதாகும்.

நாட்டில் நிலைபெறுதகு சக்தித் திட்டங்களை முன்னெடுப்பதில் ஒத்துழைப்பை நல்கியமைக்கு மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சருக்கும், ஏனைய அக்கறையுடைய சகல தரப்புகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியை இத்தருனத்தில் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**கீர்த்தி விக்ரமரட்ன**
**தலைவர்**

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையானது (இ.நி.வ.அ.ச.) சக்தி நிலைபெறுதகு தன்மையை நோக்கி நாட்டிற்கு வழிசமைத்து அதனை அதன் பால் நகரச்செய்யும் முக்கிய தேசிய நிறுவனமாக விளங்குகின்றது. இ.நி.வ.அ.ச. 2007 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. அதன் தாபிப்பானது நாட்டின் சக்திப் பயணத்தில் முக்கியமான ஒரு திருப்புமுனையாக அமைந்தது. உலகலாவிய கவனம் சக்தியின் நியாயமான பாவனையில் படிப்படியாக ஒருமுகப்பட்டு வருவதைப் புரிந்துகொள்வதன் மூலம், நிலைபெறுதகு சக்தி முன்னெடுப்புத்திட்டங்களுக்கு இணங்க முழு நாட்டினதும் முன்னேற்றத்தை பார்க்கும் போது எம்மால் மகிழ்ச்சி அடைய முடியும். இது வரை அமுல்படுத்தப்பட்டுள்ள முன்னெடுப்புத் திட்டங்கள் எதிர்காலத்தில், குறித்த விடயத்தில் இலங்கை முதன்மை வகிக்கும் ஒரு நாடாத மாறக்கூடிய ஒரு சூழலை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி மற்றும் சக்தி முகாமைத்துவம் ஆகிய இரண்டு பெரும் முக்கிய பிரிவுகளின் கீழும் அதே நேரம் சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் அடைந்த சாதனைகளிலும், அறிவிலும், மற்றும் திறமுறைத்திட்டப் பிரிவுகளிலும் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டு, 2016 ஆம் ஆண்டு இ.நி.வ.அ.ச. சபையில் சிறந்த ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதைப் பார்க்கும் போது எம்மால் மகிழ்ச்சியடைய முடியும். நாடு ஏற்கெனவே புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களை பயன்படுத்தி மின்சார உற்பத்தியில் 10% வீதம் என்ற இலக்கை தாண்டியுள்ளது. 2016 ஆம் ஆண்டு இறுதியளவில் மொத்த மின்சக்தி உற்பத்திக் கொள்திறன் எனும் 518 மெ.வொ. அளவை அடையக்கூடிய வகையில் இந்த ஆண்டு மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களிலிருந்து 53 மெ.வொ. மின்சக்தி உற்பத்திக் கொள்திறன் சேர்க்கப்பட்டது. அதே போன்று, ஒழுங்குறுத்துகை மற்றும் வசதி சார்ந்த தலையீடுகள் போன்ற வழிகளில் செயற்படுத்தப்பட்ட சக்தி வினைத்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களினூடாகவும் அதே நேரம் கைத்தொழில், வர்த்தக, மற்றும் நியதிச்சட்ட சபைகள் மற்றும் வீட்டுத் துறை என்பவற்றிலும் செயற்படுத்தப்பட்ட அவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களினூடாவும் மின்சாரம், எரிபொருள் எண்ணெய் மற்றும் விறகுகள் என்பவற்றின் நுகர்வை அதிகளவில் குறைக்கும் குறிக்கோளை அடைய முடிந்தது. இவை தவிர, குறிப்பாக கொள்கை, திறமுறைத்திட்டம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகிய விடயங்களில் எதிர்கால ஒருமுகப்பாட்டுடன் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் எதிர்காலத்தில் குறுங்கால மற்றும் நீண்டகால அடிப்படைகளில் நோக்கெல்லையும்

மற்றும் கருப்பொருளும் அடங்கிய பிரிவுகளை மேம்படுத்தும் பொருட்டு உகந்த ஒரு சூழலுக்கு வழிவகுத்தன.

நாட்டில் நிலைபெறுதகு சக்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதில் ஒன்றிணைந்து செயற்பட்ட சகல அக்கறையுடைய தரப்புகளுக்கும் எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். நாடு சக்தி நிலைபெறுதகுதன்மையை நோக்கிய ஒரு பயணத்தில் நீண்டகாலம் பயணிக்க வேண்டியிருப்பதால், அனைத்து அக்கறையுடைய தரப்புகளிடமிருந்தும் கிடைக்கும் உதவி ஒத்தாசைகள் எமது எதிர்கால வெற்றியின் அடிப்படைத் தேவையாகும். சக்தி நிலைபெறுதகுதன்மையை நோக்கி நாட்டை நகரச்செய்வதற்கான எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்களில் உதவி ஒத்தாசைகளை நல்குமாறு அனைத்துத் தரப்புகளிடமும் பணிவாய் கேட்டுக் கொள்கின்றேன்.

**எம்.எம்.ஆர். பத்மசிறி**
**பணிப்பாளர் நாயகம்**

# எமது தூரநோக்கு

மின்சக்தி பாதுகாப்புடைய ஓர் இலங்கை என்பது எமது தூரநோக்காகும்.

# எமது செயற்பணி

அகழ்வு, ஆராய்ச்சி, வசதிகள் விநியோகம், ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி மற்றும் அதே போன்று அறிவு முகாமைத்துவம் என்பவற்றினூடாக உள்நாட்டு சக்தி மூலங்களை அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் சக்தி வளங்களை சேமிப்பதற்கும் மேற்கொள்ளப்படும் தேசிய முயற்சிக்கு வழிகாட்டுவதும், அதனூடாக இயற்கைவளங்கள், மனித வளங்கள் மற்றும் பொருளாதார வளங்கள் என்பவற்றைப் பாதுகாத்து இலங்கையின் மின்சக்திப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு வழிசமைத்தல் எமது செயற்பணியாகும்.

**இலங்கை நிலை பெறுதகு வலு அதிகார சபையின் செயலாற்றுகை அறிக்கை**

இலங்கையின் தேசிய சக்திக் கொள்கையும் மற்றும் திறமுறைத் திட்டங்களும் தேசிய மற்றும் தனிப்பட்ட ஆகிய இரண்டு கண்ணோட்டங்களிலிருந்தும் வரும் வருகின்ற சக்திப் பாதுகாப்பில் கடுமையாக வலியுறுத்தி நிற்கின்றன. குறித்த இந்தக் கொள்கை எல்லா நேரங்களிலும் எல்லா பிரஜைகளுக்கும் நம்பத் தகுந்த, சுமக்கக் கூடிய விலையில் தூய சக்தியை கிடைக்கச் செய்வதற்கு எதிர்பார்க்கின்றது.

இலங்கை நிலை பெறுதகு வலு அதிகார சபை (இ.நி.வ.அ.ச.) நாட்டில் சகல வகையான மீளப் புதுப்பிக்கத்தகு சக்திகளின் அதிகரித்த நுகர்வு மற்றும் நிலை பெறுதகு பாவனை என்பவற்றை ஊக்குவிக்கின்ற மிக முக்கியமான பிரதான அரச நிறுவனமாகும். இலங்கையின் சக்தித் துறை சுமக்கக் கூடிய விலைகளில் முழு நாட்டிற்கும் இடையறாத மின்சார விநியோகத்தை வழங்குவது தொடர்பில் குறிப்பாக தற்பொழுது பல சவால்களை எதிர்நோக்கி வருகின்றது. அனல் மின்னுற்பத்திற்காக இறக்குமதி செய்யப் படும் கனிய எண்ணெய்களில் அதிகம் நாடு தங்கியிருக்கின்ற காரணத்தால் அது பொருளாதாரத்தில் பல பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. இந்த நிலைமையைத் தவிர்த்துக் கொள்ளும் நிமித்தம் அரசாங்கம் பின்வரும் திறமுறைத் திட்டங்களை வகுத்தமைத்துள்ளது.

- இறக்குமதி செய்யப்படும் கனிய எண்ணெய்களுக்கு ஒரு பிரதியீடாக 2020 ஆம் ஆண்டளவில் புதிய மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி மூலங்களைப் பயன்படுத்தி 20% வீத க்றிட் மின்சாரத்தை உற்பத்தி செய்தல்.
- சக்திப் பாதுகாப்பு சார்ந்த நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் ஊடாக 2020 ஆம் ஆண்டளவில் மொத்த சக்தி நுகர்வில் 10% வீதம் வரை குறைத்தல்.

மொத்த மின்சார உற்பத்தியில் 10% புதிய மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி (பு.மீ.பு.ச.) என்ற வரையறையை தற்பொழுது தாண்ட முடிந்துள்ளது. இந்த நிலைமை 2020 ஆம் ஆண்டளவில் பு.மீ.பு.ச. சக்தியைப் பயன்படுத்தி 20% மின்சார உற்பத்தி இலக்கை அடையும் பயணத்தில் திருப்திகரமான ஒரு திருப்பு முனையை சுட்டிக் காட்டுகின்றது.

சக்திப் பாதுகாப்பு சார்ந்த பிரிவில், சக்தி வினைத் திறன் சார்ந்த சேவைகள் துறையை வலுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குறுத்துகை சார்ந்த தலையீட்டு நடவடிக்கைகள் என்பவற்றில் முக்கிய கவனம் செலுத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ், 38 ஜி.வொ.ம. மின் சக்தியையும், 14 மில்லியன் லீற்றர் அளவான உலை எண்ணெய்களையும், 27.2 மில்லியன் கிலோ கிராம் அளவான எரி விறகுகளையும் சேமிக்க முடிந்தது.

நிகழ்ச்சித் திட்டங்கள், கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 4 கருப் பொருள் பிரிவுகளில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

- மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி – தேசிய மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி இலக்குகளை அடைவதில் நேரடியாக சம்பந்தப்படுவது இதன் குறிக்கோளாகும்.

  (விஷேட கருப் பொருள்: REACT - மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி நடவடிக்கைகள்)

- சக்திப் பாதுகாப்பு மற்றும் சக்தி முகாமைத்துவம் - தேசிய மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி இலக்குகளை அடைவதில் நேரடியாக சம்பந்தப்படுவது இதன் குறிக்கோளாகும்.

(விஷேட கருப் பொருள்: **EnMaP** - சக்தி முகாமைத்துவத் திட்டம்)

- அறிவு சார் முகாமைத்துவம் – சக்தியை மதித்து உணரக் கூடிய ஒரு சமூகத்தை நோக்கி சக்தி தொடர்பான கல்வி சார் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது இதன் குறிக்கோளாகும்.

  (விஷேட கருப் பொருள்: **SEEK** - சக்தி சார்ந்த அறிவின் ஊடான நிலைபெறு தகு சக்தி)

- திறமுறைத் திட்டம் - நாட்டில் நீண்ட கால நிலைபெறு தகு சக்தியை தாபிப்பதற்கு உதவும் பொருட்டு கொள்கை சார்ந்த தலையீட்டு நடவடிக்கைகளை வகுத்தமைத்தல், அதே நேரம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (ஆ.அ.), தலையீடுகள், தொழில் நுட்பம் சார்ந்த பேச்சுவார்த்தை முதலியவற்றை மேற்கொள்ளல்.

  (விஷேட கருப் பொருள்: **SAFE** - எதிர்கால சக்திற்கான நிலைபெறு தகு பிரவேசம்)

2016 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான விபரங்கள் பின்வரும் பிரிவிவுகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

**செயலாற்றுகை - 2016**

<table>
<tr><th>இலக்கம்</th><th>செயற்பாடு பற்றிய விபரங்கள் (அடைந்த பெரும் சாதனைகள்)</th></tr>
<tr><td></td><td>மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி (REACT)</td></tr>
<tr><td>1</td><td><u>வளங்கள் ஒதுக்கீடு மற்றும் அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகள்</u><br><br>இ.நி.வ.அ.ச. சுதேசிய மீ.பு. சக்தி வளங்களை வர்த்தக அளவிலான கருத் திட்டங்களில் அபிவிருத்தி செய்வதைத் துரிதப்படுத்தும் பொருட்டு ஒன்-க்றிட் மீளப் புதுப்பிக்கத்தகு சக்திக் கருத் திட்டங்களுக்கு தற்காலிக அங்கீகாரங்களையும் (த.அ.) மற்றும் மின் சக்தி அனுமதிப் பத்திரங்களையும் (மி.ச.அ.ப.) வழங்குகின்றது. 2016 ஆம் ஆண்டு இறுதி வரை செயற்படுத்தப்பட்ட கருத் திட்டங்கள் பற்றிய சுருக்கமான ஒரு விபரம் கீழ்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.<br>
<table>
<tr><th>மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி மூலம்</th><th>கருத் திட்டங்களின் எண்ணிக்கை</th><th>நிலையான சக்திக் கொள்ளளவுகள்</th></tr>
<tr><td>நீர் வலு</td><td>170</td><td>340 மெ.வொ.</td></tr>
<tr><td>காற்றுமூல சக்தி</td><td>15</td><td>128.45 மெ.வொ.</td></tr>
<tr><td>உயிரணுத் திணிவு சக்தி</td><td>9</td><td>28.6 மெ.வொ.</td></tr>
<tr><td>சூரிய சக்தி</td><td>5</td><td>21.36 மெ.வொ.</td></tr>
</table>
<br>2016 ஆம் ஆண்டில் மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி வளத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட மொத்த மின்சாரம் 1,169 ஜி.வொ.ம. ஆகும்.</td></tr>
<tr><td>2</td><td><u>முன்னேற்றம் பற்றிய கண்காணிப்பு</u><br>சக்தி உற்பத்தித் தரப்புகளுக்கு எந்த விதமான தாமதமும் இன்றி அவற்றின் கருத் திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும் வகையில் அவற்றுக்கு உதவுவது இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.<br>✓ PA மற்றும் EP ஆகியன வழங்கிய சகல கருத் திட்டங்களினதும் முன்னேற்ற விடயங்கள் கலாலாண்டு ரீதியாக கண்காணிக்கப்படுகின்றன. குறித்த கருத் திட்டங்களை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தலுடன் சம்பந்தப்பட்ட அத்தகைய தரப்புகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவுதல்.<br>அது தவிர, க்றிட் மின்சார முறைமையுடன் இணைந்த கருத் திட்டங்களின் செயலாற்றுகை அம்சங்கள் இந்த நிகழ்ச்சித் திட்டங்ளின் கீழ் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகின்றன.</td></tr>
<tr><td>3</td><td><u>தொழில் நுட்ப அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி</u><br><br>இ.நி.வ.அ.ச. இலங்கையில் காணப்படும் மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களை வரைபடமாக்குவதன் சாத்தியத்தில் கவனம் செலுத்தி, தொழில் நுட்ப அபிவிருத்தி மற்றும்</td></tr>
</table>

| | |
|---|---|
| | ஆராய்ச்சி சார் செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி (அனல் சக்தி மற்றும் மின் சக்தி) தொடர்பான ஒரு வழிகாட்டலை வகுத்தமைக்கும் பொருட்டு உள்ளீடுகளை வழங்கி உதவும் நோக்கில் சூரிய சக்தி, காற்றுமூல சக்தி, சிறிய நீர் வலு, உயிரணுத் திணிவுச் சக்தி, மற்றும் கடல் அலை சக்தி, விவசாயக் கழிவுகள், மாநாகத் திண்மக் கழிவுகள் என்பன பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், அனல் சக்திக் களஞ்சிய முறைமைகள் போன்ற வளர்ந்து வருகின்ற தொழில் நுட்பங்களின் நிமித்தம் சக்தி வளத் தொழில் நுட்ப மதிப்பீடுகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இது தொடர்பில் நிறைவு செய்யப்பட்ட சில செயற்பாடுகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.<br><br>✓ மூன்று புதிய காற்று சக்தி அளவீட்டுக் கோபுரங்கள் வட மாகாணத்தின் யாழ் குடா நாட்டிலுள்ள பூனாகரி, பொன்னாலை ஆகிய இடங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் கோக்கிலாய் என்ற இடத்திலும் நிர்மாணிக்கப்பட்டன.<br>✓ யாழ் குடா நாட்டினதும், வட கிழக்கு கடலோரப் பகுதியினதும் காற்று சக்தி மூல மின்னுற்பத்திக் கொள்திறனுக்கு உதவும் பொருட்டு ஒரு டெஸ்க் டொப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. மொத்தம் 345 மெ.வொ. சக்தி உற்பத்திக் கொள்திறனுடைய இருபத்து ஐந்து ஸ்தலங்கள் இனங்காணப்பட்டன.<br>✓ உயிரணுத் திணிவுச் சக்தி நிகழ்ச்சித் திட்டம் வ.மே.மா. விலங்குகள் உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் உதவியுடன் நிறைவு செய்யப்பட்டது. அண்ணளவாக 100 அலகுகள் நிறுவப்பட்டுள்ளன. |
| 4 | <u>மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி சார்ந்த சேவைகள்</u><br>கிராமிய மக்களுக்கும், வீட்டுத் துறைகளுக்கும், மற்றும் SME, விவசாயத் துறைகள் என்பவற்றுக்கும் வழங்கப்படும் சக்தி சார்ந்த சேவைகளை மேலும் மேம்படுத்தும் பொருட்டு, இ.நி.வ.அ.ச. பின்வரும் கருத் திட்டங்களின் ஊடாக தலையிட்டு வருகின்றது.<br>I. ஓப்-க்றிட் மின்சாரத் தீர்வுகள் (சுனித்தியாலோக்க) கொண்ட தேசிய க்றிட் மின்சார முறைமைக்கு பிரவேசமற்ற பிரதேசத்திற்கு மின்சார வசதிகளை வழங்குதல்.<br>II. SME துறை மற்றும் கிராமியக் கைத்தொழில் ஆகியவற்றுக்கான மீ.பு. சக்தித் தீர்வுகள்<br>III. “சூரிய பளசங்கிராமய” எனும் எண்ணக்கருவை இ.மி.ச. மற்றும் லெகோ நிறுவனம் ஆகியவற்றின் கூட்டொத்துழைப்பில் செயற்படுத்துதல்<br>IV. அடிப்படை சக்தித் தேவைகளுக்கான மீ.பு. சக்தித் தீர்வுகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் ஏற்கெனவேயுள்ள சக்தித் தொழில் நுட்பங்கள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளல் (மாகாண மட்ட உயிரணுத் திணிவுச் சக்தி நிகழ்ச்சித் திட்டம்)<br><br>2016 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட செயற்பாடுகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.<br><br>✓ கற்பிட்டி உச்சமுனைக் கிராமத்திலுள்ள வீடுகளுக்கு 167 சூரிய சக்தி மூல வீட்டு மின்சார உற்பத்தி முறைமைகள் நிறுவப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| | ✓ "ஆதிவாசி" மக்களுக்கு சக்தி வினைத் திறன் பற்றி போதிக்கும் பொருட்டு ஒரு நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. சக்தி வினைத் திறன் வாய்ந்த சமையல் அடுப்புகளும், சக்தி வினைத் திறன் வாய்ந்த LED மின் குமிழ்களும் அவர்களுக்கு அறிமுகப்படுத்தப் பட்டன.<br>✓ நீர் வலு மின்னுற்பத்தி அபிவிருத்திற்கான ஒரு பயிற்சி நிலையம் அமைக்கப்படவுள்ள இந்துரான பகுதியில் இந்துரான "பசுமைக் கிராம நிகழ்ச்சித் திட்டம்" ஆரம்பிக்கப்பட்டது. பரந்தளவில் வீப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. சக்தி வினைத் திறன் வாயந்த சமையல் அடுப்புகளும், சக்தி வினைத் திறன் வாயந்த LED மின் (2,000) குமிழ்களும் அறிமுகப்படுத்தப் பட்டன.<br>✓ தேறிய மாணி வாசிப்புத் திட்டத்தின் கீழ் சமய ஸ்தலங்களுக்கு 29 சூரிய சக்தி மின்னுற்பத்தி முறைமைகள் நிறுவப்பட்டன.<br>✓ அனுராதபுர ஸ்ரீ மஹா போதி கார் வண்டிகள் நிறுத்தும் இடத்தில் 30 சூரிய சக்தி வீதி மின் விளக்குகள் பொருத்தும் பணிகள் நிறைவு செய்யப்பட்டன.<br>✓ மாசிகளை உலர்த்தும் பொருட்டு தெவிநுவர, அம்பாந்தோட்டை, வெலிகத்த ஆகிய பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கு ஒரு செய்து காண்பிப்புக் கருத் திட்டமாக சுற்றாடல் நேயமான, விலை குறைந்த உயிரணுத் திணிவுச் சக்தி உலர்த்திகள் அறிமுகப்படுத்தப்பட்டன.<br>✓ யாழ்ப்பாண கிளிநொச்சிப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்தின் மீளப் புதுப்பிக்கத்தகு சக்திப் பேட்டையிலும், கொழும்புப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள விசாயத் தொழில் நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவகத்திலும் இரண்டு உயிரணுத் திணிவுச் சக்தி உலர்த்தி சாதனங்கள் விநியோகிக்கப்பட்டு, நிறுவப்பபட்டு, உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டன.<br>✓ "சூரிய பளசங்கிராமய" எண்ணக்கரு 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6 ஆம் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.<br>✓ க்றிட் மின்சார முறைமைக்கு இணைக்கப்பட்ட சூரிய சக்தி பிவி மின்னுற்பத்தி முறைமைக்கான இலங்கை செயன்முறை SLS1522 நியம விதிக்கோவை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.<br>✓ ஒரு சூரிய சக்தி பொட்டோவோல்டெய்க் (பிவி) முறைமையில் முதலீடு செய்வதற்கான 'வீட்டு உரிமையர்களின் வழிகாட்டல்' என்றழைக்கப்படும் ஒரு வழிகாட்டியை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br>✓ அரசாங்க நிறுவனங்களுக்கு ஸ்தலப் பரிசோதனை, தகவு திறன்கள்/கேள்வி ஆவணங்கள் தயாரித்தல், TEC விநியோகம் என்பன அடங்கலாக கூரையில் வைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மின்சார முறைமை நிறுவுகைக்கு தொழில் நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.<br>✓ சூரிய சக்தி தேறிய மாணி வாசிப்பு நடவடிக்கையில் ஈடுபடும் 50 புதிய சூரிய சக்தி பிவி சேவைகள் வழங்கும் தரப்புகள் பதிவு செய்யப்பட்டன. மொத்தம் 152 தரப்புகள் பதிவு செய்யப்பட்டன.<br>✓ வட மேல் மாகாண சபையின் சாரதிகள் மற்றும் மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதார ஊழியர்கள் ஆகியோர் அடங்கலாக சக்தி |

முகாமையாளர்கள், கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மற்றும் பொது அலுவலக ஊழியர்கள் ஆகியோருக்கான பல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் / விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.



வட மேல் மாகாண உயிரணுத் திணிவுச் சக்தி நிறுவுகை



சமய ஸ்தலங்களுக்கான சூரிய சக்தி அறிமுகம்



கற்பிட்டி தீவுகளுக்கான சூரிய சக்தி வீட்டு மின்னுற்பத்தி முறைமை



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு உயிரணுத் திணிவுச் சக்தி உலர்த்தி சாதன நன்கொடை

5

<u>நன்கொடை நிதியிடப்பட்ட கருத் திட்டங்கள்</u>

ஆசிய அபிவிருத்தி வங்கியின் சக்தி .பு.மூலம் நிதியிடப் பட்ட இரண்டு மீ (.வ.அ.ஆ) சபையின் மூலம் .ச.அ.வ.நி.அபிவிருத்திக் கருத் திட்டங்கள் இ .அந்தக் கருத் திட்டங்கள் தற்பொழுது நிகழ்ந்து வருகின்றன .முன்னெடுக்கப்பட்டிருந்தன இந்த இரண்டு கருத் திட்டங்களும் பின்வருமாறு காணப்படும் .

1. கூரையின் மேல் நிறுவி சூரிய சக்தி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கருத் திட்டம்
2. தோட்டத் துறை நுண் நீர்வலு புனமைப்பு மீள் சக்தியூட்டல் கருத் திட்டம்

**கூரையின் மேல் நிறுவி சூரிய சக்தி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கருத் திட்டம்**

இந்தக் கருத் திட்டத்தின் கீழ், இஇலங்கையில் மின்னுற்பத்தி அடிப்படையில் .ச.அ.வ.நி. பொர்ெட்டோவோல்டெய்க்கை பிரபல்லியப்படுத்தும் நோக்கில் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் சூரிய சக்தி பிவி முன்னோடிக் கருத் திட்டங்களை செயற்படுத்தி வருகின்றதுஅரச துறை ஆக்கக் . கூறு பிரதானமாக தொழில் நுட்பப் பல்கலைக்கழகங்களுக்கு வழிவகுக்குகின்ற பொறியியல் பீடங்களில் கவனம் செலுத்துகின்றதுபின்வருவன இந்தக் கருத் திட்டங்களின் கீழ் நிறைவு செய்யப்பட்ட . .செயற்பாடுகளை சுட்டிக் காட்டுகின்றன

ஆம் ஆண்டிற்கான முன்னேற்றம் பின்வருமாறு கா 2016ணப்பப்பட்டது .

- ✓ பேராதெனிய பல்கலைக்கழகம், மொரட்டுவப் பல்கலைக்கழகம், ருஹுுணுப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களில் தேசிய க்றிட் மின்சார முறைமைக்கு 200 kWp மின்சாரத்தை இணைக்கக் கூடிய கூரையின் மேல் நிறுவி சூரிய சக்தி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய நான்கு பிவி முறைமைகள் நிறுவப்பட்டன.
- ✓ தேசிய க்றிட் மின்சார முறைமைக்கு 800 kWp மின்சாரத்தை இணைக்கக் கூடிய கூரையின் மேல் நிறுவி சூரிய சக்தியின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய 11 சூரிய பிவி மின்சார முறைமைகள் தனியார் துறை நிறுவனங்களில் நிறுவப்பட்டன.



100kWp மின்சார முறைமை நிறுவுகை - ப்ரான்டிக்ஸ் கொக்கல



100kWp மின்சார முறைமை நிறுவுகை – ரீஸ் பாலியகொட



100kWp மின்சார முறைமை நிறுவுகை - மாஸ் ஹோல்டிங்ஸ், பல்லேகல



60kWp மின்சார முறைமை நிறுவுகை - மாஸ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**தோட்டத் துறை நுண் நீர்வலு புனரமைப்பு மற்றும் மீள் சக்தியூட்டல் கருத் திட்டம்**

இந்தக் கருத் திட்டத்தின் கீழ், வட்டவள ப்ளான்டேஷன் பிஎல்சி ஸ்ட்ராத்டென் எஸ்ட்டேட்டு கைவிடப்பட்ட 50kWp நுண் நீர்வலு கருத் திட்டம் புனரமைக்கப்பட்டது .



ஸ்ட்ராத்டென் எஸ்ட்டேட்டு நுண் நீர்வலு கருத் திட்டங்கள்

‘இலங்கையில் சக்தி உற்பத்தி மற்றும் இறுதிப் பாவனைத் துறை ஆகியவற்றில் நிலைபெறுதகு உயிரணுத் திணிவுச் சக்தி உற்பத்தியையும், மற்றும் நவீன உயிரியல் சக்தித் தொழில் நுட்பங்களையும், பொருத்தமான தணிப்பு நடவடிக்கைகளையும் ஊக்குவித்தல்’ என்ற தலைப்பில் UNDP/GEF/FAO நிதியிட்ட கருத் திட்டங்கள் செயற்படுத்துகைக் கட்டத்திலுள்ளனக .ச.அ.வ.நி.இ .ுறித்த இந்தக் கருத் திட்டத்திற்கான செயற்படுத்தும் ஒரு பங்காளித்துவத் தரப்பாக விளங்குகின்றது . .பின்வரும் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன

**‘நிலைபறுதகு உயிரணுத் திணிவுச் சக்தி உற்பத்தியையும் நவீன உயிரியல் சக்தித் தொழில் நுட்பங்களையும்’ ஊக்குவித்தல்’**

- 06 முன்னோடி உயிரணுத் திணிவுச் சக்தி முனையங்களுக்கான பிரேரணைகள் அழைக்கப்பட்டு 03 இடங்களுக்கான (குருனாகல், இரத்தினபுரி மற்றும் காலி) முதலீட்டுத் தரப்புகளும் தேர்ந்தெடுக்கப்பட்டன. உயிரணுத் திணிவுச் சக்தி முனையங்களை தாபிக்கும் பணிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த முதலீட்டுத் தரப்புகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த முனையங்கள் பெறுமதி சேர்க்கப்பட்ட அமைப்புகளில் உயிரணுத் திணிவு சக்தியாக தொடரும். அதே நேரம் ஒரு தகவல் பரிமாற்றல் முறைமையையும் (அதிகரித்து வரும் விநியோக இறுதிப் பாவனையாளர்). குறித்த முனையங்கள் 2017 ஆம் ஆண்டிலிருந்து இயங்கும்.
- 15 உயிரணுத் திணிவுச் சக்தித் தொழில் நுட்ப (BET) செய்து காண்பிப்புக் கருத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன (3 பாரியளவான மற்றும் 12 SMI) மேற்குறித்த எல்லா BET களுக்குமான கண்காணிப்பு, அறிக்கையிடுகை மற்றும் உறுதிப்படுத்துகை முறைமையும் அபிவிருத்தி செய்யப் பட்டது. மேலும், எதிர்காலத்தில் செயற்படுத்தப்படவுள்ள எரிபொருள் சுவிட்சிங் கருத் திட்டங்களுக்கான 12 சாத்தியவள ஆய்வுகளும் நிறைவு செய்யப்பட்டன. குறித்த

நிகழ்ச்சித் திட்டம் உயிரணுத் திணிவச் சக்தித் தொழில் நுட்பங்களுடன் சம்பந்தப்பட்ட தமது உற்பத்திகளை புத்தாக்கம் செய்வதற்கும் அதிகளவில் சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதற்கும் இயலுமான வகையில் உள்நாட்டு ஆ.அ. நடவடிக்கைகளுக்கும் தொழில் வாண்மையாளர்களுக்கும் உதவியுள்ளது.

- துணை நிதி முதலீட்டு அளவு ஏறக்குறைய 5.7 மில்லியன் அ.டொ.
- நேரடி புகை வெளியீடு குறைப்பு - 11,426 t$CO_2$/yr.

- II ஆம் கட்ட செய்து காண்பிப்புக் கருத் திட்டங்களை செயற்படுத்தும் பொருட்டு SLCF உடன் ஒ ருபு.ஒ. கைச்சாத்திடப்பட்டுள்ளது.
    - புதிய எரிபொருள் சுவிட்சிங் செய்து காண்பிப்பு கருத் திட்டங்கள் >10 (இன்று வரை 4 பாரிய மற்றும் 6 SMI கருத் திட்டங்கள்)
    - புதிய கருத் திட்டங்களைக் கொண்டு எதிர்பார்க்கப்பட்ட துணை நிதி அளவு- >அ.டொ. 2.2 மில்லியன்
    - நேரடி புகை வெளியீடு குறைப்பு >13,040 tCO2/yr



கருத்திட்டம் செயற்படுத்திய சில உயிரணுத்திணிவுச் சக்தி செய்துகாண்பிப்புகள்

- முன்னைய ஆண்டில் நடத்தப்பட்ட அடிப்படை ஆய்வுகளை உறுதிசெய்யும் பொருட்டு இரண்டு உறுதிப்படுத்துகை வேலையரங்குகள் நடத்தப்பட்டன. உசாதுணைத் தரப்பு அறிக்கைகள் தயாரித்து நிறைவு செய்யப்பட்டன.
- தற்போதைய வன முகாமைத்துவத் திட்டத்தின் குறைபாடுகள் பற்றிய உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கும், பெருந்தோட்டத் துறையில் வர்த்தக/ பாதுகாப்பு வன முகாமைத்துவத்தின் சுமுகமான செயற்படுத்துகையை உறுதிசெய்து கொள்வதற்கு பயனுள்ள செயற்படுத்துகை மற்றும் கண்காணிப்பு ஒழுங்குகளை முன்மொழிவதற்கும் என RPC களில் வன முகாமைத்துவம் பற்றிய இணைந்த சுற்றறிக்கை வரையறப்பட்டுள்ளது.

- இலங்கை நியமங்கள் கட்டளைகள் நிறுவகத்தின் உதவியுடன் நிலையாக உற்பத்தி செய்யப்படும் எரிவிறகுகள் பற்றிய இலங்கை நியமம் தயாரித்து நிறைவு செய்யப்பட்டது. அதற்கு சபையின் அங்கீகாரமும் பெறப் பட்டுள்ளது. நியமங்களை கள ரீதியில் பரிசீலிப்பதற்காக மதிப்பாய்வாளர்களை பயிற்றுவிக்கும் பொருட்டு முழுமையான மதிப்பாய்வாளர் பயிற்சி நடத்தப்பட்டது.
- 100-ஹெக்டேயர் முன்னோடி எரிவிறகுகள் வளர்ப்பு மாதிரிகள் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்டு வருகின்றன.
  - எரிவிறகு + மரம் - 50 ஹெக்டேயர்; சமுதாய எரிவிறகு பெருந்தோட்டங்கள் - 50 ஹெக்டேயர்
  - எரிவிறகுகளை வளர்க்கும் வகையில் RPC கள் மற்றும் NGO கள்/CBO கள் RRI ஆகியன தொடர்பான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.
- உயிரணுத் திணிவுச் சக்தி உற்பத்திற்கும் விநியோகத்திற்கும் தேவையான பயிற்சி மதிப்பீடு அபிவிருத்தி செய்யப்பட்டது.
- கிடைக்கக்கூடிய எரிவிறகு வளங்கள் பற்றிய களஞ்சிய மற்றும் தரவுகள் திரட்டும் பணி நிறைவு செய்யப்பட்டது.




வன பாதுகாப்பு திணைக்களம் மேற்கொள்ளும் வித்தியாசமான

முன்னோடி வளர்ப்பு மாதிரிகள் பரிசோனை

- இறுதிப் பாவனையாளர், அரசாங்க அக்கறையுடைய தரப்புகள், பெருந்தோட்டக் கம்பனிகள், நிதி நிறுவனங்கள் போன்ற தரப்புகளுக்கு தென், மத்திய, வடமேல் மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களில் வேலைரங்குகளும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் நிறைவு செய்யப்பட்டன.

**2016 வேலைத்திட்டத்தின் முக்கிய குறிப்புகள் – பிரதான செயற்பாடுகள்**

- அங்கீகாரத்தை பெற்று மீளப்புதுப்பிக்கத்தகு (ICRE) பற்றிய அமைச்சுகளுக்கு இடையிலான அதிகாரிகள் குழுவை தாபித்தல்
- உயிரணுத் திணிவுச் சக்தித் துறைக்கு உதவும் வகையில் முக்கியமான கொள்கைத் தீர்மானங்களை இனங்கண்டு அவற்றை வகுத்தமைத்தல்
- உயிரணுத் திணிவுச் சக்தி முனையங்களையும் செய்மதி விநியோக முறைமைகளையும் தாபித்தல்
- எரிவிறகுகள் விநியோகக் கைத்தொழிலுக்கான கொள்கைகளையும் ஊக்குவிப்புத் திட்டங்களையும் இயலச் செய்வது தொடர்பான சிபாரிசுகளை வரைதல்
- எரிவிறகுகள் வளர்ப்பு மாதிரிகளின் தொடர் தாபிப்பு
- நிலைபெறுதகு ரீதியில் உற்பத்தி செய்யப்படும் எரிவிறகுகளுக்கான

தகவுதிறன்களையும் சுட்டிகளையும் தாபித்தல்

- II ஆம் கட்ட தொழில் நுட்ப செய்து காண்பிப்புக் கருத் திட்டங்களின் தொடர்ச்சியும் நிறைவும்
- பயிற்சி, விழிப்புணர்வு மற்றும் ஊடக விளம்பர நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் மற்றும் தொழில் நுட்ப செய்து காண்பிப்புகள் பற்றிய ஒரு வீடியோ ஆவணத்தை நிறைவு செய்தல்

கருத் திட்டத்திற்கு **“இலங்கையில் இறுதிப் பாவனைத் துறைகள் மற்றும் மின்சக்தி உற்பத்தி ஆகியவற்றிலுள்ள பொருத்தமான நடவடிக்கை”**,

- NDC தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதை நோக்கி செயற்படுத்தப்படுகின்ற கருத் திட்டங்களில் நிதியிடும் தேவைப்பாடுகளை சமப்படுத்துவதற்கு உதவும் ஒரு நிதியிடும் பொறிமுறைக் கருத் திட்டமாக பயன்படுத்தப்படக் கூடிய தேசிய ரீதியில் எதிர்பார்க்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட பங்களுப்புகளுக்கான (INDCs) பொருத்தமான ஒரு MRV பொறிமுறைத் திட்டமாக குறித்த கருத் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டது. 2015 முதல் 2018 வரை 4-ஆண்டு கருத் திட்டத்தின் கீழான தொழில் நுட்பங்கள் இலங்கையில் NDC களுக்கு தேவையான MRV வேலைச்சட்டகத்தைத் தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் கீழ் மூன்று வகையான கருத் திட்டங்கள் தாபிக்கப்படும். அது பின்வருவன தொடர்பில் MRV வேலைச் சட்டகத்திற்கு முன்னோடிக் கருத் திட்டங்களாகப் பயன்படுத்தப்படும்.
    1. 1,000 ஆரம்பத்தில் ஐந்து மாகாணங்களில் உயிரியல் சஞ்சிகைகள்
    2. தேயிலைத் தொழிற்சாலைகளில் 1,300 உயர் வினைத்திறன் மோட்டார்கள்
    3. பற்றரி களஞ்சிய வசதியுடைய 150 சூரிய சக்தி பிவி தேறிய மாணிவாசிப்பு முறைமைகள்

- தேயிலைக் கைத்தொழிலில் உயர் வினைத்திறன் மோட்டார்களை (HEMs) நிறுவும் பொருட்டு ஆறு தொழில் நுட்ப விநியோகத் தரப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஐந்து தொழிற்சாலைகளில் 23 HEMs களும் 5 VFD களும் நிறுவி முடிக்கப்பட்டன.
- சூரிய சக்தி தேறிய மாணிவாசிப்பு முறைமைக்கான சேவை வழங்கும் தரப்புகளையும் நன்மை பெறுநர்களையும் தேர்ந்தெடுப்பதற்கு கொள்வனவு விடயங்கள் நிறைவு செய்யப்பட்டன. குருநாகல் மற்றும் கோட்டே ஆகிய பசுமை வலயங்களில் 14 முறைமைகளை தாபிப்பதன் மூலம் முதல் கட்டத்திற்கான நிறுவுகைகள் 2017 ஆம் ஆண்டு பெப்ருவரி மாத்திலிருந்து ஆரம்பிக்கப் படும்.
- உயிரணுத் திணிவுச் சக்தி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு ஐந்து மாகாணங்களில் பு.ஒ. தயரிக்கப்பட்டுள்ளன. நெறிப்படுத்தல் குழுக்களும் நியமிக்கப்பட்டன. 380-எண்ணிக்கைக்கும் அதிகமான விண்ணப்பங்கள் (திசம்பர் மாதத்திற்கு) கிடைத்திருந்தன. 291-விண்ணப்பங்கள் மீளாய்வின் நிமித்தம் தேர்ந்தெடுக்கப்பட்டன. 40-முறைமைகள் நிர்மாணிக்கப் பட்டு வருகின்றன. மேலும் வடமேல் மாகாணம், தென் மாகாணம் ஆகிய மாகாணங்களில் நிலை சார்ந்த பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. நிர்மாணிக்கப்பட்ட உயிரணுத்

திணிவுச் சக்தி முறைமைகளை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு தர உத்தரவாத முறைமையும் முறையியலும் தயாரிக்கப்பட்டன. உயிரணுத் திணிவுச் சக்தி முறைமை செயற்படுத்துகை இயக்கச் செயற்பாடு மற்றும் செயலாற்றுகைக் கண்காணிப்பு ஆகியன பற்றி 300 எண்ணிக்கைக்கும் அதிகமான விஸ்தரிப்பு உத்தியயோகத்தர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.





NAMA கருத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சில தொழில் நுட்ப

செய்து காண்பிப்புகள்

- சர்வதேச உசாதுணைக் குழுவின் இரண்டு செயற்பணிகளும் சம்பந்தப்பட்ட திறன் அபிவிருத்தி செயற்பாடுகளும் நிறைவு செய்யப்பட்டன. அதில் 17 தணிப்பு தெரிவுகளின் நிமித்தம் (RE/EE மற்றும் ஏனைய) ஆரம்ப எல்லை சார் தணிப்பு ஆகுசெலவு வளையி (MACC) பகுப்பாய்வு அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டது.

- சக்தித் துறைக்கான தணிப்புத் தெரிவுகள் நீண்டகாலப் பட்டியலுக்கான MACC பகுப்பாய்வு 2017 சனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.




- சக்தி NAMA களுக்கான தாராளமயப்படுத்தப்பட்ட கண்காணிப்பு அறிக்கையிடல் மற்றும் உறுதிசெய்தல் (MRV வேலைச் சட்டகம்) தயாரிக்கப்பட்டுள்ளது.
- தயாரிக்கப்பட்ட MRV முறையியலும் MRV வழியலகுகளும் 3 முன்னோடித் தொழில் நுட்பங்களுக்காக இனங்காணப் பட்டன - வரைவுக் கட்டத்திலுள்ளது. திறன் அபிவிருத்தி செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டன.

6

சக்திப் பேட்டை அபிவிருத்தி

புவியியல் நிலைமைகளின் காரணமாக, இலங்கையில் பல அமைப்புகளிலான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் காணப்படுகின்றன. சூரிய சக்தி மற்றும் காற்று சக்தி என்பன இவற்றுக்கு இடையில் காணப்படும் அத்தகைய சக்தி வளங்களாகும். இலங்கை புவி மத்திய கோட்டில் அமைந்திருப்பதால், அதற்கு வருடந்தோறும் சூரிய சக்தி கிடைக்கின்றது. அதே போன்று, உலர் வலய வெப்பநிலை காணப்படுவதாலும் மற்றும் இலங்கை இந்து சமுத்திரத்தில் அமைந்திருப்பதாலும் அதற்கென்றே பிரத்தியேகமான காற்று வளங்களும் அதிகமாக இருக்கின்றன. இந்த அமைப்பு சார்ந்த நிலைகள் நாட்டிற்கு அதிகளவான மீ.பு. சக்தி வளங்களை பெற்றுத் தருகின்றன.

இ.நி.வ.அ.ச. நடத்திய சூரிய சக்தி சாத்தியம் பற்றிய அண்மை கால ஆய்வு மன்னார், அம்பாறை, மொனராகல், அம்பாந்தோட்டை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களிலுள்ள 11 ஸ்தலங்களில் மொத்தம் 1,100 மெ.வொ. சாத்தியம் காணப்படுவதாக இனங்கண்டுள்ளது. மேலும், 2003 ஆம் ஆண்டில் தேசிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி ஆய்வு கூடத்தினால் (NREL) தொகுக்கப்பட்ட காற்று சக்தி வள தேசப்படங்கள் தொடர்பான ஆவணத்தின் மூலமாக கற்பிட்டிக் குடா வடக்கு பகுதியிலிருந்து மன்னார் தீவுகள் மற்றும் யாழ் குடா நாடு வரையான வடமேல் கடலோரப் பகுதிகளிலும், நாட்டின் மத்திய மாகாணத்தின் உட்புறப் பகுதியாகிய மத்திய மலைநாட்டுப் பகுதியில் அதிகளவிலும், சபரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் பாகங்களிலும் என மூன்று பிரதான பிராந்தியங்களில் சிறந்த காற்று வளங்கள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. மிகச் சிறந்த காற்று வளங்கள் சாத்தியமுடைய ஏறக்குறைய 5,000 கி.மீ.$^2$ காற்று சக்தி வளப் பிரதேசங்கள் இலங்கையில் காணப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்த காற்று வளப் பிரதேசங்களில் ஏறக்கறைய 4,100 கி.மீ.$^2$ தரைப் பகுதியில் அமைந்துள்ளன. காற்று வள நிலங்கள் இலங்கையின் மொத்த நிலப் பரப்பில் (65,600 கி.மீ.$^2$) ஏறக்குறைய 6% வீதத்தை பிரதிபலிக்கின்றது. 5 மெ.வொ. கி.மீ.$^2$ பரப்பளவு ஒன்றுக்கு 5 மெ.வொ. என்ற ஒரு

பாரம்பரிய எடுகோளை பிரயோகித்து, இந்தக் காற்று வள நிலப் பகுதி 20,000 மெ.வொ. நிலையான சாத்தியமான சக்திக் கொள்திறனுக்கும் அதிகமான கொள்திறனுக்கு உதவக்கூடும். இது வரை நிறுவப்பட்ட மொத்த சக்திக் கொள்திறன் 128 மெ.வொ. ஆகும். மற்றைய 101 மெ.வொ. சக்தி உற்பத்திப் பொறித்தொகுதிகள் நிர்மாண கட்டத்திலுள்ளன.

வட பகுதியில் ஆ.அ.வ. நிதியிட்டு அண்மையில் நிறைவு செய்யப்பட்ட காற்று வள மதிப்பீட்டுக் கருத் திட்டம் மன்னார் பிராந்தியத்தில் 375 மெ.வொ. காற்று சக்தி சாத்தியம் இருப்பதாக வெளிப்படுத்தியுள்ளது. பூனகரி 100 மெ.வொ. இற்கும் அதிகமான சக்தி சாத்தியம் காணப்படும் மற்றுமொரு ஸ்தலமாக இனங்காணப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கும் தயினார் துறையினருக்கும் நன்மைகளை தரக் கூடிய திட்டமிடப்பட்ட காற்று மற்றும் சூரிய சக்தி அபிவிருத்திகளை ஊக்குவிக்கும் நோக்கில் 'சக்திப் பேட்டைகளை' அபிவிருத்தி செய்யும் எண்ணக்கரு முதல் முதல் 2009 ஆம் ஆண்டில் இ.நி.வ.அ.ச. மூலம் முன்மொழியப்பட்டது. இந்த நிலையில், இ.நி.வ.அ.ச. வள மதிப்பீடுகளை மேற்கொண்டு, காணிகளை சுவீகரித்து, சுற்றாடல் அங்கீகாரங்களையும் ஏனைய நியதிச்சட்ட அங்கீகாரங்களையும் உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணிக்கும். இந்த சபை இறுதியாக, பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் தமது சக்தி உற்பத்திப் பொறித்தொகுதிகளை நிர்மாணிப்பதற்கு போட்டிக் கேள்வி விலை மனுக்களை அழைப்பதன் ஊடாக முதலீட்டுத் தரப்புகளைத் தேர்ந்தெடுக்கும்.

- ✓ மொனரகல் பிரதேசத்தில் 100 மெ.வொ. சூரிய சக்தி உற்பத்திப் பேட்டைக்கு சாத்தியமான மூன்று ஸ்தலங்கள் இனங்காணப்பட்டன. கொட்டியாகலவிலுள்ள ஸ்தலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. காணி சுவீகரித்தல் தொடர்பான ஆரம்ப கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டது. கருத் திட்டப் பதவியணியும் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- ✓ பூனகரி காற்று சக்திப் பேட்டை அபிவிருத்திற்கான ஸ்தலம் இனங்காணப்பட்டு உறுதிசெய்யப்பட்டது. காற்று சக்தி வள மதிப்பீடும் நிறைவு செய்யப்பட்டது.

***சக்தி வினைத்திறன் மேம்பாடு (EnMAP இன் கீழ்)***

**சக்தி முகாமைத்துவம் சார்ந்த செயற்பாடுகளை செயற்படுத்தியதன் ஊடாக ஆம் 2016 .ஆண்டில் பின்வரும் ஒட்டுமொத்த சக்தி சேமிப்புகளை அடைய முடிந்தது**

| சக்திமூலம் | மொத்த சக்தி சேமிப்பு |
|---|---|
| மின்சாரம் | 38 ஜி.வொ.ம. |
| டீசல் | 11.04 மில். லீற்றர் |
| உலை எண்ணெய் | 14 மில். லீற்றர் |
| LPG | 35 டொன்கள் |
| எரிவிறகு | 27.2 கிலோ டொன்கள் |

1

<u>சக்தி முகாமைத்துவ முறைமைகளைத் தாபித்தல்</u>

இ .ச.அ.வ.நி.ISO50001 எனும் சக்தி முகாமைத்துவ முறைமைகளை அறிமுகப்படுத்துவதன் ஊடாக வர்த்தகம், கைத்தொழில் மற்றும் வீடு முதலிய துறைகளில் சக்தியை சேமித்துப் பாதுகாப்பதற்கு உதவுகின்றது .

- ✓ ஒட்டமொத்தமாக 2016 ஆம் ஆண்டு இறுதி அளவில் தனியார் துறையில் 208 சக்தி முகாமையாளர்களுக்கும், 16 சக்தி மதிப்பாய்வாளர்களுக்கும், அரச துறையில் 400 சக்தி முகாமையாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- ✓ 18-நிறுவனங்களில் ISO50001 எனும் சக்தி மதிப்பாய்வுகள் நடத்தப்பட்டன.

2

<u>நியமங்களையும் ஒழுங்குவிதிகளையும் அறிமுகப்படுத்துதல்</u>

கைத்தொழில், வீடு மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளில் சக்தி வினைத்திறனை முகாமை செய்யும் பொருட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தி சரியான ஒழுங்குறுத்துகை தலையீட்டு நடபடிமுறைகளை வகுத்தமைப்பதற்கு இமூலம் வித்தியாசமான .ச.அ.வ.நி. .செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன




LED மின்குமிழ்களுக்கான சக்தி முத்திரை




LFL மற்றும் பலாஸ்ட்டுகள் ஆகியவற்றுக்காக பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி

| விபரம் | முன்னேற்றம் |
|---|---|
| CFL மின்குமிழ்கள் | நியமம் திருத்தப்பட்டது. திருத்தப்பட்ட நியமம் SLS நியமாக பிரசுரிக்கப்பட்டது. |
| குழாய் வடிவ ப்ளரஷென்ட் மின்குமிழ்கள் மற்றும் பலாஸ்ட்டுக்கள் | சக்தி முத்திரையிடுவதன் கட்டாய தேவைப்பாடுகள் பற்றிய ஒழங்குவிதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டன. |
| குளிரூட்டிகள் | சக்தி முத்திரையிடல் நகல் நியமம் தயாரிக்கப்பட்டு மேலும் நடவடிக்கைகளின் நிமித்தம் இலங்கை நியமங்கள் கட்டளைகள் நிறுவகத்திற்கு (இ.நி.க.நி.) அனுப்பி வைக்கப்பட்டன. |
| குளிர்சாதனப் பெட்டிகள் | குளிர்சாதனப் பெட்டிகளைப் பரிசீலிக்கும் பணி நிகழ்கின்றது. பல வர்த்தக் குறியீடுகளையும் மாதிரிகளையும் உடைய சுமார் 15 குளிர்சாதனப் பெட்டிகள் இது வரை பரிசீலிக்கப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| LED மின்குமிழ்கள் | LED மின்குமிழ்களுக்கு தன்னார்வ சக்தி முத்திரையிடும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| கணனிகள் | சக்தி முத்திரையிடும் நகல் நியமம் தயாரிக்கப்பட்டது. |

- ✓ 'இலங்கையின் கட்டிட விதிக்கோவை 2008' திருத்தப்பட்டது. இது இந்த ஆண்டு இறுதியளவில் பிரசுரிக்கப்படும்.
- ✓ 'இலங்கையில் நிலையான சக்தி வதிவிடங்களுக்குரிய வழிகாட்டல் ஆவணம்' தயாரிக்கப்பட்டது.




3 ஆலோசனை மற்றும் உசாதுணை சேவைகள்

நிகைத்தொழில் .ச.அ.வ., வர்த்தகம் மற்றும் அரச துறை ஆகிய துறைகளை சார்ந்த நிறுவனங்களுக்கு, கேள்விகளுக்கு பதிலளித்தல், வேண்டுகோளின் பேரில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் மற்றும் ISO 50001 எனும் சக்தி மதிப்பாய்வு முதலியவற்றை கவனித்தல் என்பவற்றின் ஊடாக அவற்றின் சம்பந்தப்பட்ட குறித்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவுகின்றது .

- ✓ அரசாங்க நிறுவனங்களுக்கு 11 சக்தி மதிப்பாய்வுகள் நிறைவு செய்யப்பட்டன.
- ✓ EEI (சக்தி வினைத்திறன் மேம்பாடுகள்), EAS (சக்தி மதிப்பாய்வு சேவைகள்) மற்றும் TP (தொழில்நுட்பங்களை வழங்கும் தரப்புகள்) ஆகிய வகுதிகளின் கீழ் 34 ESCO கள் பதிவு செய்யப்பட்டன. இற்றைப்படுத்தப் பட்ட ESCO பட்டியல் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டது.

4 சாதனைகள் விருது வழங்கல்

இ இலங்கைத் தேசிய சக்தி வினைத்திறன் விருது வழங்கும் திட்டத்தினூடாக .ச.அ.வ.நி. (SLNEEA) கைத்தொழில், வர்த்தகம் ஆகிய துறைகளில் சக்தி முகாமைத்துவ செயன்முறைகளை ஊக்குவிக்கின்றது .

- ✓ பிரதான அதிதியாகிய இலங்கையின் மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் பங்குபற்றலில் இலங்கைத் தேசிய சக்தி வினைத்திறன் விருது வழங்கும் வைபவம் ஆம் திகதி 24 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2016 BMICH மண்டபத்தில் நடத்தப்பட்டதுஇந்த விழாவில் மின்வலு மற்றும் . மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சரும், பிரதி அமைச்சரும் கலந்து சிறப்பித்தனர் .
- ✓ இலங்கைத் தேசிய சக்தி வினைத்திறன் விருது வழங்கும் (SLNEEA) வைபவத்தில் வழங்கப்பட்ட விருதுகள் பற்றிய விரம் :
    - ❖ தேசிய சக்தி வினைத்திறன் விருது (SLNEEA)
    - ❖ சிறந்த சக்தி சேவைகள் கம்பனி (ESCO) விருது
    - ❖ குறித்த ஆண்டின் பிரத்தியேக சக்தி முகாமையாளர் விருது
    - ❖ சக்தி துறை பிரமுகர் விருது








இலங்கைத் தேசிய சக்தி வினைத்திறன் விருதுகளை வென்றவர்கள் - 2016

5

<u>துறை சார்ந்த குறித்த சக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள்</u>

நி.வ.அ.ச. மாகாண மட்டத்தில் சக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்து செயற்படுத்த உதவுகின்றது.

6

<u>தேசிய சக்திப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்</u>

- ✓ 4 முன்-பள்ளிக்கூட ஆசிரிய ஆசிரியை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

நடத்தப்பட்டன.

- ✓ சாரணர்களுக்கு (14,500) 6 சக்திப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.
- ✓ மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியும் சக்திப் பாதுகாப்பும் பற்றி ஊடகவியலாளர்களுக்கு 9 வேலையரங்குகள் நடத்தப்பட்டன.
- ✓ நுரைச்சோலை அனல் மின்னுற்பத்தி நிலையத்திற்கும் புத்தளம் காற்றுமூல சக்தி உற்பத்தி நிலையத்திற்கும் ஊடகவியலாளர்களுக்காக 2 கள விஜயங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.



முன்-பள்ளிக்கூட ஆசிரிய ஆசிரியைகள் பபயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்





சாரணர்களுக்கான (14500) சக்திப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்

- ✓ 9,000 தம்ம பாடசாலைகளுக்கு மத்தியில் தம்ம பாடசாலை கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டன. 2000 கட்டுரைகளுல் இறுதிச் சுற்றுக்காக 100 கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.
- ✓ பாடசாலை விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.
- ✓ அரசாங்க நிறுவனங்களுக்கான பொது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்
- ✓ சக்தியை சேமிக்கும் சமையலறை பற்றிய க.பொ.த. (சா.த.) மாணவர்களுக்கான நிகழ்ச்சித் திட்டம் என்பன நடத்தப்பட்டன.





தம்ம பாடசாலை கட்டுரைப் போட்டி நூல் அறிமுகம்



சக்தியை சேமிக்கும் சமையலறை பற்றிய க.பொ.த. (சா.த.) மாணவர்களுக்கான நிகழ்ச்சித் திட்டம்


- ✓ சக்தி முகாமையாளர் குழுவுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.
- ✓ கடற்படை உத்தியோகத்தர்களுக்கு/அரச துறை நிறுவன உத்தியோகத்தர்களுக்கு சக்தி முகாமைத்துவமும் பாதுகாப்பும் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.
- ✓ NVQ தகுதியுடைய மோட்டார் டிமைன்டெர்களுக்கான மோட்டார் ரிவைன்டிங் நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது.
- ✓ சக்தி வினைத்திற் வாய்ந்த மோட்டார் ரிவைன்டிங் செயன்முறைகள் பற்றிய NVQ போதகர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.



- ✓ சக்தியைப் பாதுகாப்பது பற்றிய சிறுவர்களுக்கான DVD பாடல் நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

<table>
<tr><td></td><td>


✓ “சங்ரக்ஷ சஞ்சிகை” ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு பிரசுரிக்கப்பட்டது.<br>
✓ சுற்றாடலைப் பாதுகாத்துப் பேணுவது தொடர்பான புத்த பெருமானின் போதனைகள் பற்றிய ஒரு நூல்’ வெளியிடப்பட்டது.




</td></tr>
<tr><td></td><td>

***நிலைபெறுதகு சக்திக் கொள்கைகளையும் திறமுறைத்திட்டங்களையும் தயாரித்தல் ( SAFE இன் கீழ்)***

</td></tr>
<tr><td>1</td><td>




**சக்திச் சமநிலை 2015**

<u>சக்தித் தகவல்கள் பகுப்பாய்வு</u>


✓ தேசிய சக்திச் சமநிலை 2015 மற்றும் முக்கியமான சக்திப் புள்ளிவிபரங்கள் 2015 வெளியிடப்பட்டன.

✓ சக்திச் சமநிலை இணையத்தளம் இற்றைப்படுத்தப்பட்டது.

✓ நிலைபெறுதகு தன்மை வாய்ந்த பகுப்பாய்வு சாதனமான காபன் பூட்ப்ரின்ட்

- காபன் பூட்ப்ரின்டை கனிப்பிடும் பொருட்டு ரொட்டரி க்லப்பின் கூட்டொத்துழைப்புடன் ஒரு இணையத்தள மைய பிரயோகமும் ஒரு நடமாடும் தொலைபேசி மைய பிரயோகமும் தயாரிக்கப்பட்டன.

</td></tr>
</table>




- ✓ இறுதிப் பாவனையாளர் சக்தி நுகர்வு மதிப்பீடுகள்
  உணவுப் பெறுமானச் சங்கிலி பற்றிய ஒரு வருட கால ஆய்வு வயம்ப பல்கலைக்கழகத்தின் கால்நடைகள், கடற்றொழில்கள் மற்றும் போஷாக்கு பீடத்தினால் நிறைவு செய்யப்பட்டு அந்த ஆய்வு தொடர்பான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது




உணவுப் பெறுமான சங்கிலி மீதான சக்தி நுகர்வு மதிப்பீடு

- ✓ இறுதிப் பாவனையாளர் சக்தி நுகர்வு மதிப்பீடுகள்
  2015 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட பெற்றோல் எரிபொருள் நிலைய தரவுகள் பதிவு நடபடிமுறை உப ஒப்பந்தமாக வழங்கப்பட்டு சேகரிக்கப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்யும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



2

<u>நிலைபெறுதகு சக்தித் தொழில் நுட்ப பாதுகாப்பகங்கள்</u>

- ✓ பேராதெனிய பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தினது மின்னியல் மற்றும் இலத்திரனியல் பிரிவின் கூட்டொத்துழைப்பில் பாரியளவான சூரிய சக்தி அபிவிருத்தியில் தொழில் நுட்பத் தலையீட்டு அம்சங்களுடன் தொடர்புடைய இரண்டு முன்னேற்ற ஆராய்ச்சிக் கருத் திட்டங்களின் ஒரு ஆண்டு வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.
  - இலங்கையில் பாரியளவு பிவி அபிவிருத்தியுடைய விநியோகப் பாதுகாப்பு
  - ஒரு DC மைக்ரோ க்றிட் ஊடான பிவி இன் சக்தி வினைத்திறன் பயன்பாடு
- ✓ இ.நி.வ.அ.ச. சபையின் திருத்தியமைக்கப்பட்ட இணையத்தளம் மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் பிரதான அதிதியாக கலந்துகொண்ட BMICH மண்டபத்தில் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி நடத்தப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கான இலங்கைத் தேசிய சக்தி வினைத்திறன் வருது வழங்கும் வைபவத்தில் திறந்து வைக்கப்பட்டது.




- ✓ 2016 ஆம் ஆண்டிற்கான ஆசிய தூய சக்தி மாநாட்டில் மூன்று ஆராய்ச்சிப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

  - மரபு ரீதியற்ற மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மைய மின்னுற்பத்தியை இலங்கை க்றிட் மின்சார முறைமைக்கு ஒன்றிணைத்தல்.

  - மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலங்களைக் கொண்டு இலங்கையில் தனிப்படுத்தப்பட்ட ஒரு நாடளாவிய மின்சார முறைமைக்கான பயனுள்ள மின்சார கேள்வி சார் முகாமைத்துவம்

  - இலங்கையில் சக்தி வினைத்திறன் வாய்ந்த ஒளியேற்றல் தலையீட்டு நடவடிக்கைகள்

| | அறிவு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள் (SEEK இன் கீழ்) |
|---|---|
| 1 | <u>ஒரு சக்தி சார்ந்த கல்வி நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்தல்</u><br><br>சக்தி சார்ந்த கல்விற்கான சுயமாக உந்தப்பட்ட ஒரு முறைமையை உருவாக்கும் பொருட்டு ஆரம்ப மற்றும் இரண்டாம்நிலை பாடசாலை பாடவிதானங்களில் சக்தி சம்பந்தமான அறிவையும் மற்றும் செயற்பாடுகளையும் உள்ளீர்ப்பது இதன் முக்கிய குறிக்கோளாகும்.<br><br>✓ சக்தி சம்பந்தமான அறிவும் செயற்பாடுகளும் தரம் 10 மற்றும் தரம் ஆகியவற்றின் விஞ்ஞானப் பாட மொடியூலுக்கு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. இது புதிய பாடவிதானத்தின் கீழ் அரசாங்க பாடசாலைகளில் ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது தரம் 11 மற்றும் தரம் 7 ஆகியவற்றுக்கு 2016 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.<br><br>✓ சகல மாகாணங்களிலுமுள்ள சக்திக் குழுக்களின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு நாட்டின் சகல மாகாணங்களையும் ஒன்றிணைத்து 3 நிதி திரட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.<br>✓ அரசாங்க பாடசாலைகளிலிருந்து 3,000 விண்ணப்பங்கள் கிடைத்தன. விண்ணப்பங்களை சமர்ப்பித்த இந்தப் பாடசாலைகளில் 2,700 சக்திக் குழுக்கள் தாபிக்கப்பட்டிருந்தன. மேலும் அத்தகைய சக்திக் குழுக்கள் தாபிக்கப்பட்டு வருகின்றன.<br>✓ 'எதிர்கால கனவுகள்' எனும் கண்காட்சியும் சக்தி சார் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் மாகாண விருது வழங்கல்களும் 9 மாகாணங்களில் நடத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டன.<br><br>தமது நாளாந்த வாழ்க்கையில் சக்தியையும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியின் பயன்பாட்டையும் முகாமை செய்யும் வகையில் ஆசிரியர் – மாணவ சமூகத்தை ஈடுபடுத்தும் பொருட்டு பாடசாலை சக்திக் குழுக்கள், சக்தித் தினக் கொண்டாட்டம் மற்றும் 'சக்தி நட்சத்திர' போட்டி என்பன அடங்கலாக முழுமையான ஒரு நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டது. கல்வி அமைச்சின் செயலாளரினால் 06/2015 ஆம் இலக்க கல்விச் சுற்றறிக்கை வெளியிடப்பட்ட பின்னர், சக்தி சார் கல்வி நிகழ்ச்சித் திட்டம் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி பாடசாலைக் கல்வி முறைமைக்கு உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க, பாடசாலை சக்திக் குழுக்கள் நிகழ்ச்சித் திட்டம் 6 ஆம் தரமும் அதற்கு மேற்பட்ட தரங்களையும் உடைய சகல அரசாங்க பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப் பட்டுள்ளன. |

| | |
|---|---|
| |  <br>மாணவர்களின் ஆக்கங்கள் மதிப்பீடு |
| 2 | <u>ஒரு சக்தி சார் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்தல்</u><br>சமூகத்தில் சக்தித் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் பகிர்ந்து கொள்வதற்குமான ஒரு அறிவு பரப்பும் திறமுறைத் திட்டமாக ஒரு தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.<br><br>✓ திறன்கள் அபிவிருத்தி வேலையரங்குகள், அறிவு பரம்பல் மற்றும் பொழுதுபோக்கு, கல்வி, ‘இளைஞர் கண்காட்சி’ என்பன அடங்கலாக புத்தாக்க விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் சீகிரியவில் நடத்தப்பட்டன.<br> <br>இளைஞர்களின் கண்காட்சி’ - பங்குபற்றுநர்களுக்கான செயற்பாடுகள் |

இறுதி

## இலங்கை நிலைபேறுதகு வலு அதிகார சபையின்
## 2016 டிசெம்பர் 31ம் திகதிக்கான ஐந்தொகை

| | | 2016 | | 2015 | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா . | | மீளெடுத்துறைக்கப்பட்டதொகை | |
| **சொத்துக்கள்** | **குறிப்பு** | | | | |
| **நடைமுறை அல்லா சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | 1 | 907,714,742 | | 1,026,065,370 | |
| தொட்டுணர முடியாத சொத்துக்கள் | 2 | 14,885,933 | | 6,540,250 | |
| நிகழும் பணிகள் | 3 | 19,885,853 | | 13,744,628 | |
| முதலீடுகள் | 4 | 77,770,893 | | 74,609,163 | |
| மீளப்பெற்ற கடன் | 5 | 60,539,709 | 1,080,797,130 | _ | 1,120,959,411 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| வருமதிகள் | 6 | 21,286,085 | | 17,904,145 | |
| ஏனைய நடைமுறை சொத்துக்கள் | 7 | 49,965,177 | | 29,413,032 | |
| காசும் காசு ஒப்பரவும் | 8 | 346,032,869 | 417,284,131 | 266,066,769 | 313,383,946 |
| **மொத்த சொத்துக்கள்** | | | 1,498,081,261 | | 1,434,343,357 |
| **ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | | | | |
| **ஒப்புரவு** | | | | | |
| திரண்ட நிதி | 9 | 22,100,336 | | 22,100,336 | |
| தேறிய மிகைகள் | | 94,275,311 | | 88,848,196 | |
| பிற்போடப்பட்ட மானியம் | 10 | 881,213,250 | | 985,822,817 | |
| இலங்கை நிலபெறுதகு வலு நிதியம் | 11 | 293,257,237 | | 205,446,714 | |
| நிலைப்பெறுதகு பினை நிதியம் | | 81,935,978 | 1,372,782,112 | 76,591,020 | 13,788,009,083 |
| **நடைமுறை அல்லா பொறுப்பு** | | | | | |
| பணிக்கொடைப் பொறுப்பு | | 16,844,582 | | | |
| ADB கடனுக்கான (L2892 SRI ) CENEIP | | 45,659,709 | | _ | |
| ADB கடனுக்கான ( L2733 SRI ) SPSSP | | 16,900,356 | 79,404,647 | _ | 12,005,755 |
| **நடைமுறை பொறுப்பு** | | | | | |
| ஏனைய கொடுமதிகள் | 12 | 38,242,131 | | 37,429,298 | |
| குறுங்கால நிதியேற்பாடுகள் - கணக்காய்வு கட்டணங்கள் | | 2,822,636 | | 2,222,636 | |
| காணி சுவீகரித்தல் பேரிலான தேறிய வைப்பு | | 4,829,735 | 45,894,502 | 3,876,585 | 43,528,519 |
| **ஒப்புரவு மற்றும் பொறுப்புக்களின் மொத்தம்** | | | 1,498,081,261 | | 1,434,343,357 |

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைக்காகவும் அதன் சார்பாகவும்**

**தலைவா (நிதி )** **பணிப்பாளர் நாயகம்** **தலைவர்**

முகாமைத்துவ சபை அங்கத்தவர்
முகாமைத்துவ சபை அங்கத்தவர்

## இலங்கை நிலைபேறுதகு வலு அதிகார சபையின்
## 2016 டிசெம்பர் 31ம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

| | 2016 | | 2015 | |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| **இயக்கச் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | | | |
| குறித்த ஆண்டிற்கான மிகைகள் | 5,427,116 | | 52,419,277 | |
| ***சீராக்கங்கள்*** | | | | |
| நட்டம் | 157,454 | | | |
| உத்தரவாத நிதியத்திற்கு மாற்றப்பட்ட நிதி கழிக்கப்பட்ட மானியம் ( கிடைத்த நிதிகளுகடகாக ) | (123,361,618) | | (159,394,219) | |
| சக்தி நிதியத்திற்கு மாற்றப்பட்ட நிதி | (38,573,814) | | | |
| சேவைப் பணிக்கொடை நிதியேற்பாடு | 5,621,087 | | 1,305,150 | |
| தேய்மானம் | 123,361,618 | | 159,394,219 | |
| | (27,368,157) | | 53,724,427 | |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்களிலுள்ள ( அதிகரிப்பு / குறைவு ) | (23,934,085) | | (3,387,148) | |
| நடைமுறைப் பொறுப்பு ( அதிகரிப்பு / குறைவு ) | 2,365,983 | | (9,820,362) | |
| இயக்கச் செயற்பாடுகளிலிருந்து ஈட்டிய காசு | (48,936,259) | | 40,516,917 | |
| இயக்கச் செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசு | | (48,936,259) | | 40,516,917 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | | | |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (5,168,444) | | (50,887,934) | |
| தொட்டுணர முடியாத சொத்துக்கள் | (8,345,683) | | (5,643,450) | |
| நிகழும் பணி | (6,141,226) | | (6,805,978) | |
| FD & TB இல் முதலிடப்பட்டுள்ள முதலீடுகள்/ வட்டி | 3,161,729 | | (3,537,146) | |
| காசுக் கொடுப்பனவுகள் - முதலீட்டாளர்கள் | (60,539,709) | | _ | |
| முதலீட்டுச் செயற்பாடுகளில் பயன்பட்டை தேறிய காசு | | (83,356,791) | | (66,874,508) |
| **நிதியீட்டு செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | | | |
| பிற்போடப்பட்ட மானியம் | 18,752,051 | | 17,510,403 | |
| இலங்கை நிலபெறுதகு வலு நிதியம் | 126,384,337 | | (26,899,008) | |
| திரண்ட நிதி | _ | | _ | |
| நிலபெறுதகு வலு உத்தரவாத நிதியம் | 5,344,958 | | 3,269,392 | |
| பண மீள் கொடுப்பனவு -வெளிநாட்டு உதவியாளர்கள் | 62,560,064 | | _ | |
| பணிக்கொடைக் கொடுப்பனவு | (782,260) | | _ | |
| நிதியீட்டு செயற்பாடுகள் பயன்பட்டை தேறிய காசு | | 212,259,150 | | (6,119,213) |
| **காசும் காசு ஒப்புரவுகளிலுமுள்ள தேறிய அதிகரிப்பு** | | 79,966,100 | | (32,476,804) |
| **குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள காசும் காசு ஒப்பரவுகளும்** | | 266,066,769 | | 298,543,573 |
| **குறித்த ஆண்டு இறுதியிலுள்ள காசும் காசு ஒப்பரவுகளும்** | | 346,032,869 | | 266,066,769 |

## இலங்கை நிலைபேறுதகு வலு அதிகார சபையின்

## 2016 டிசெம்பர் 31ம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று

| | குறிப்பு | 2016 | 2015 |
|---|---|---|---|
| | | ரூபா . | மீளெடுத்துறைக்கப்பட்டதொகை |
| **வருமானம்** | | | |
| செயற்பாடுகளுக்கான / நிகழ்ச்சித்திட்ட செலவுகளுக்கான மூலதன மானியம் | 13 | 41,247,949 | 27,910,521 |
| FARDF (17) | | 1,000,000 | |
| கழிக்கப்பட்டு பிற்போட்ட மானியம் | 14 | 123,361,618 | 159,394,219 |
| மீண்டெழும் திறைசேரி மானியம் | | 83,416,663 | 85,160,000 |
| UNDP - சுற்றாடல் அமைச்சு | | | |
| UNDP - மகாவலி அபிவிருத்தி அமைச்சு | | 530,000 | 3,968,047 |
| வருமான மானியம் - ஆ.அ.வ.G0303 (Clean Energy Network Efficincy Improment Project - CENEIP) | | 50,002,360 | |
| வருமான கடன் - ஆ.அ.வ.2733 SRI(Sustainable power sector support project - SPSSP ) | | 923,854 | 2,865,301 |
| UNDP NAMA கருத்திட்ட மானியம் | | 2,036,947 | 39,000 |
| UNDP - உயிரணுத் திணிவுச் சக்திக் கருத்திட்ட மானியம் | | 2,691,954 | 506,070 |
| அனுசரனை LTL Holdings | | 6,547,053 | |
| ஏனைய வருமானம் | 15 | 133,349,512 | 139,044,099 |
| **மொத்த வருமானம்** | | **445,107,910** | **418,887,257** |
| **செலவு** | | | |
| கருத்திட்டம்/ செயற்பாடு சார்ந்த செலவுகள் | 16 | (166,460,446) | (79,546,833) |
| சம்பளங்களும் கொடுப்பனவுகளும் | 17 | (89,359,231) | (76,761,267) |
| பிரயான, வாழ்க்கைப்படிச் செலவுகள் | 18 | (1,553,237) | (713,053) |
| வழங்கள் | 19 | (4,472,982) | (5,227,728) |
| பராமரிப்புச் சார்ந்தச் செலவுகள் | 20 | (8,583,142) | (7,607,804) |
| ஒப்பந்தம் சார்ந்த செலவுகள் | 21 | (35,931,662) | (29,190,036) |
| தேய்மானம் சார்ந்த செலவுகள் | 22 | (123,361,618) | (159,394,219) |
| ஏனைய நடைமுறைச் செலவுகள் | 23 | (8,921,899) | (8,035,388) |
| **குறித்த ஆண்டிற்கான செலவுகள்** | | **(438,644,217)** | **(366,476,328)** |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | | (879,123) | 8,348 |
| நட்டம் | | (157,454) | |
| **மிகை / (பற்றாக்குறை )** | | **5,427,116** | **52,419,277** |

இறுதி

## இலங்கை நிலைபேறுதகு வலு அதிகார சபையின்
## 2016 டிசெம்பர் 31ம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று

| தேய்மானம் | திரண்ட நிதி | தேறிய மிகை / பற்றக்குறை | பிட்போடப்பட்ட மானியம் | இலங்கை நிலபெறுதகு வலு நிதியம் | நிலபெறுதகு வலு உத்தரவாத நிதியம் | மெத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா . | ரூபா . | ரூபா . | ரூபா . | ரூபா . | ரூபா . |
| **2014.12.31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 22,100,336 | 36,428,918 | 1,127,706,633 | 232,345,722 | 73,321,629 | 1,491,903,239 |
| 2015 ஆம் ஆண்டுக்கான அதிகரிப்பு / குறைவு | _ | 52,410,929 | (141,883,817) | (26,899,008) | 3,269,392 | (113,102,504) |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | | 8,348 | | | | 8,348 |
| **2015.12.31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 22,100,336 | 88,848,195 | 985,822,817 | 205,446,714 | 76,591,020 | 1,378,809,082 |
| 2016 ஆம் ஆண்டுக்கான அதிகரிப்பு / குறைவு | _ | 6,463,693 | (104,609,567) | 87,810,523 | 5,344,958 | (4,990,393) |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | | (879,123) | | | | (879,123) |
| நட்டம் | | (157,454) | | | | (157,454) |
| **2016.12.31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | **22,100,336** | **94,275,311** | **881,213,250** | **293,257,237** | **81,935,978** | **1,372,782,112** |

5 தொடக்கம் 17 வரையான பக்கங்களில் காணப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்த நிதிக்கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாக விளங்குகின்றன.

## 2016.12.31 ஆம் திதிற்கான நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புகள்

### 1. கூட்டிணைந்த தகவல்கள்

### 1.1 பொது

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை (நி.வ.அ.ச.) 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. இந்த சபை கொழும்பு 07 என்ற முகவரியிலுள்ள ப.ச.ஞா.மா.ம. மண்டபத்தின் 05 ஆம் இலக்கக் கட்டிடத்தொகுதியில் அமைந்துள்ளது.

1985 இன் 02 ஆம் இலக்க சக்திப் பாதுகாப்பு நிதியச் சட்டமானது (ச.பா.நி.) 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகர சபைச் சட்டத்தினால் நீக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதிற்கான ச.பா.நி. சகல சொத்துக்களும் பொறுப்புக்களும் 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆம் திகதி செயல்வலுப்பெறும் வகையில் தானாகவே நி.வ.அ.ச. சபைக்கு மாற்றப்பட்டன.

இ.நி.வ.அ.ச. சபையின் கீழ் இயங்கி வந்த ஒளியேற்றலுக்கான பிராந்திய நிலையம் (ஒ.பி.நி.) மின்வலு சக்தி அமைச்சிலிருந்து கிடைத்த அறிவுரைகளின்படி இலங்கை மின்சார சபைக்கு மாற்றிக்கையளிக்கப்பட்டது. அதற்கிணங்க, குறித்த ஒ.பி.நி. சொத்துக்களும் மற்றும் பொறுப்புகளும் 2012 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் இ.மி.ச. சபைக்கு மாற்றப்பட்டதுடன் அந்த நிலையத்தின் ஊழியர்களும் அவ்வாறே அன்றைய தினம் மாற்றப்பட்டனர்.

### 1.2 அதிகர சபையின் முக்கிய செயற்பாடுகள்

மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களை அபிவிருத்தி செய்வதற்கும், சக்தி அபிவிருத்திப் பிரதேசங்களைப் பிரகடனப்படுத்துவதற்கும், சக்தி வினைத்திறன் மற்றும் சக்திப் பாதுகாப்பு ஆகிய நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கும், நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கும், சக்திப் பாதுகாப்பையும், சக்தியின் நம்பத் தகுதன்மையையும், சக்தி விநியோக ஆகுசெலவு பயனையும் மற்றும் தகவல் முகாமைத்துவத்தையும் மேம்படுத்துவதற்கும் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை தாபிக்கப்பட்டுள்ளது.

### 1.3 அதிகார சபையின் நிதியங்கள்

2007 இன் 35 ஆம் இலக்க இ.நி.வ.அ.ச. சட்டத்தின் பிரகாரம், 3 நிதியங்களை இயக்கி நிருவகிப்பதற்கு இ.நி.வ.அ.ச. தேவைப்படுத்தப்படுகின்றது. அத்தகைய நிதியங்கள் பின்வருமாறு காணப்படும்:

#### 1.3.1 அதிகார சபை நிதியம்

ஆரம்ப மூலதனத்தையும், சக்தி அனுமதிப்பத்திரக் கட்டணங்களையும், கடன்களையும், குத்தகைகளையும், வாடகைகளையும் மற்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய வருமதிகளையும் வைப்புச் செய்யும் பொருட்டு இந்த நிதியம் நிருவகிக்கப்படுகின்றது. அதிகார சபை குறித்த சட்டத்தின் பிரகாரம் அதிகாரத்தத்துவங்களைப் பிரயோகித்து தனது தொழிற்பாடுகளையும் கடமைகளையும் மேற்கொண்டு நிறைவேற்றும் போது அதிகார சபைக்கு ஏற்படும் செலவுகளை ஈடுசெய்வதற்கு அத்தகைய நிதியிலிருந்து அத்தகைய செலவுகளுக்கான சகல நிதிகளும் செலுத்தப்படுதலும் வேண்டும்.

### 1.3.2 இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியம்

திரண்ட நிதியிலிருந்து கிடைக்கும் ஆரம்ப மானியத்தையும், அரச கட்டணங்களையும், செஸ்வரி வருமானத்தையும், தொழில் சேவைகளுக்கான கட்டணங்களையும், குத்தகை வாடகைளிலிருந்து கிடைக்கும் நிதிகளையும், விண்ணப்பக் கட்டணங்களையும், காபன் சொத்துக்களை நிருவகிப்பதற்காக கிடைக்கின்ற கட்டணங்களையும் வைப்புச் செய்யும் பொருட்டு இந்த நிதியம் நிருவகிக்கப்படுகின்றது.

மீளப்புதுப்பிக்கத்தகு சக்திப் பாதுகாப்புப் பொறித்தொகுதிகளுக்கான மானியங்கள், சக்தி வினைத்திறனுடைய மின்னுபகரணங்களையும் தொழில்நுட்பங்களையும் ஊக்குவிப்பதற்கான மானியங்கள், எரிபொருட்களை நகர்த்துவதற்கான மானியங்கள், சக்தி விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செலவுகள் மற்றும் சக்திப் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான ஊக்குவிப்பு நிதிகள் என்பவற்றுக்கு இந்த நிதியத்திலிருந்து செலவுகள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.3.3 நிலைபெறுதகு சக்தி உத்தரவாத நிதியம்

சக்தி வினைத்திறன் தொடர்பான கருத்திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றும் பொருட்டு கடன் வசதிகளுக்காக விண்ணப்பிக்கும் முதலீட்டுத் தரப்புகளின் சார்பாக உத்தரவாதமளிப்பது இந்த நிதியத்தின் நோக்கமாகும். குறித்த சட்டத்தின் பிரகாரம், திரண்ட நிதியிலிருந்து கிடைக்கும் ஆரம்ப மூலதனம், வருடாந்த தவணைக் கட்டணங்கள், வழங்கப்படும் உத்தரவாதங்களுக்கான வட்டிகள், அதிகார சபையின் நிதியத்திலிருந்து கிடைக்கும் நிதிகள் என்பன இந்த நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

### 1.4 ஊழியர்களின் எண்ணிக்கை

2016.12.31 ஆம் திகதிற்கான ஊழியர்களின் எண்ணிக்கை - 104

### 2.1 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றிய சுருக்கம்

### 2.1.1 கணக்குகள் தயாரித்தல் அடிப்படை மற்றும் இணக்கப்பாடு பற்றிய கூற்று

2016 திசம்பர் 31 ஆம் திகதிற்கான இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் (இ.நி.வ.அ.ச.) ஐந்தொகை, வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, ஒப்புரவு மாற்றம் பற்றிய கூற்று மற்றும் கணக்குகளுக்கான குறிப்புகள் என்பன இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கும் அதே நேரம் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கும் இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

இ.நி.வ.அ.ச. நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ஆகுசெலவின் வரலாற்று ஆகுசெலவு அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமானவிடத்து, கணக்கீட்டுக் கொள்கைகள் கணக்குகளுக்கான அடுத்து வருகின்ற குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.1.2 ஒப்பீட்டுப் புள்ளிவிபரங்கள்

நடைமுறை நிதியாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளிலுள்ள மாற்றங்களை உறுதிசெய்யும் பொருட்டு ஒப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் சீராக்கப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டிற்கான ஒப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் குறிப்பு 24 இன் பிரகாரம் மீளெடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### 2.2.1 - அரசாங்க மானியங்கள் மற்றும் மானிய உதவி வெளிப்படுத்துகை தொடர்பான கணக்கீடு

அரசாங்க மானியங்கள், மூலதன மானியங்கள் மற்றும் மீண்டெழும் மானியங்கள் என இரண்டு வகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஊழியர்களின் சம்பளங்கள், கட்டிட வாடகைகள் முதலியன போன்ற மீண்டெழும் செலவுகளை ஈடுசெய்வதற்கு மீண்டெழும் மானியம் பயன்படுத்தப் படுகின்றது. நிகழ்ச்சித்திட்டங்களுக்கான (செயற்பாடுகள்) செலவுகளையும் மற்றும் நிலையான சொத்துக்களின் கொள்வனவுக்கான செலவுகளையும் ஈடுசெய்வதற்கு மூலதன மானியம் பயன்படுத்தப்படுகின்றது. செயற்பாடு/நிகழ்ச்சித்திட்டம் சார்ந்த செலவுகளில் மீண்டெழும் மற்றும் மூலதன செலவுகள் அடங்குவதால் அத்தகைய செலவுகள் மூலதன மானியத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன.

நிலையான சொத்துக்களின் கொள்வனவுக்காகப் பயன்படுத்தப்படும் அரசாங்க மூலதன மானியங்கள் சொத்துக்களின் பயனுள்ள பாவனை காலத்தின் முறையான நியாயமான ஒரு அடிப்படையில் வருமானமாக இனங்காணப்படுகின்ற பிற்போடப்பட்ட வருமானமாகக் கருதப்படுகின்றன.

செயற்பாடுகள்/நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றுடன் தொடர்பான மானியங்கள் செயற்பாடுகள் /நிகழ்ச்சித்திட்டங்கள் சார்ந்த செலவுகளுக்கான மூலதன மானியம் என்ற தலைப்பின் கீழ் வருமானக் கூற்றில் கடனாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### 2.2.2 - வெளிநாட்டு உதவிக்கான கணக்கீடு

இ.நி.வ.அ.ச. பல வெளிநாட்டு உதவி கருத்திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றுகின்றது. கடன்கள் மற்றும் மானியங்களின் வடிவில் ஆ.அ.வ. மற்றும் UNDP ஆகியவற்றிலிருந்து பெரும்பாலான உதவி பெறப்படுகின்றது. எவ்வாறயினும், இ.நி.வ.அ.ச. இன் பரிந்துரையின் பேரில் CBSL மற்றும் ஆ.அ.வ. ஆகியவற்றால் நேரடியாக விநியோகங்கள் மற்றும் கடன்கள் ஆகியவற்றுக்கு பணம் செலுத்தப்படுகின்றது. நிதிக் கூற்றுக்களில் அவை காட்டப்பட்டுள்ளன.

### 2.2.3 - நீண்டகால முதலீடுகளுக்கான கணக்கீடு

முதலீடுகள் அரசாங்கத்தின் திறைசேரி உண்டியல்களிலும் தேசிய சேமிப்பு வங்கி வைப்புகளிலும் வைப்புச்செய்யப்பட்டு ஆகுசெலவில் எடுத்துரைக்கப்படுகின்றன. குறித்த ஆண்டு இறுதியில் நிலையான வைப்புக்களிலுள்ள முதலீடுகளிலிருந்தும் மற்றும் திறைசேரி உண்டியல்களிலிருந்தும் கிடைக்க வேண்டிய வட்டித் தொகைகள் அந்தந்த நிதியத்திற்கு வரவுவைக்கப்படுகின்றன. ஆனால் முதலீடு மாத்திரம் அடுத்துவரும் ஆண்டில் உண்மையான வட்டி கிடைத்த பின்னர் மாத்திரம் பற்று வைக்கப்படுகின்றது.

### 2.2.4 - வருமான இனங்காணல்

வருமானம், சக்தி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், மின்சார விற்பனை, பயிற்சிப் பாடநெறிக் கட்டணங்கள், கண்காட்சிகளிலிருந்தும் கருவிசாதனங்களின் வகையிலிருந்தும் கிடைக்கும் வருமானம் மற்றும் ஏனைய வருமானம் என்பவற்றைப் பிரதிபலிக்கின்றது.

சக்தி நிலைபெறுதகு உத்தரவாத நிதியத்திலிருந்து கிடைக்கும் வட்டியின் பாகம் வருமானமாக கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் மற்றொரு பாகம் மீளமுதலீடு செய்யப்பட்டுள்ளது. நிதியத்திற்கு வருமானத்தை ஈட்டுவதற்கு / பராமரிப்பு ஆகுசெலவை ஈடுசெய்வதற்கு அந்த நிதிப் பாகம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 2.2.5 - இடைநேர் பொறுப்புக்களும் இடைநேர் சொத்துக்களும்

2008 மார்ச் மாதம் 31 ஆம் திகதிய அமைச்சரவையினது தீர்மானத்தின் பிரகாரம் மரபுரீதியற்ற மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்தித் தரப்புகளிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக மதிப்பிடப்பட்ட 897 மில்லியன் ரூபா தொகையான ஒரு நிதியை இ.நி.வ.அ.ச. இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டும். CESS ஊடான சம்பாத்தியங்கள், அரச கட்டணங்கள் முதலியவற்றிலிருந்து அல்லது திறைசேரியிலிருந்து நிதிகள் கிடைக்காவிட்டால், தற்பொழுது இந்தக் கொடுப்பனை செலுத்தித்தீர்ப்பதற்கு இ.நி.வ.அ.ச. சபையிடம் எந்த வருமான வழியும் கிடையாது. இவை பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு காணப்படுகின்றன. ஆகையால், இது ஒரு இடைநேர் பொறுப்பாக மாத்திரம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

2.2.5 - இ.நி.வ.அ.ச. தனது அம்பாந்தோட்டை சூரிய மின் உற்பத்தி பொறித்தொகுதிகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தை இ.மி.ச. சபைக்கு மாத அடிப்படையில் விற்பனை செய்கின்றது. ஆனால் 2015 இன் கடைசி சில மாதங்களில் விற்பனை செய்த மின்சாரத்திற்கான கொடுப்பனவு மாத்திரம் 2016 ஆம் ஆண்டு மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் தலையீட்டின் பின்னரே செலுத்தப்பட்டது.

## 2.3 சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

### 2.3.1 ஆகுசெலவும் விலைமதிப்பீடும்

நிலையான சொத்துக்கள் குறைந்த திரண்ட ஆகுசெலவு தேய்மான அடிப்படையில் எடுத்துரைக்கப்படுகின்றன. நிலையான சொத்துக்களுக்கான தேய்மானத்திற்கான ஏற்பாடு நேர் நிரல் முறையியலைப் பயன்படுத்தி கணிப்பிடப்படுகின்றது.

### 2.3.2 நிலையான செத்துக்களின் அகற்றல்

முறிந்து விழுந்த உடப்பு காற்று சக்திக் கோபுரம் தேவையான அங்கீகாரத்தை பெற்ற பின்னர் மீள்விலைமதிப்பீடு செய்யப்பட்டு பதிவழிக்கப்பட்டுள்ளது.

### 2.3.3 தேய்மானம்

நிலையான சொத்துக்களின் தேய்மான வீதங்கள் அந்த சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பாவனை காலத்தின் அடிப்படையில் காணப்படும். திருத்தத்திற்கு உட்படவும் கூடும். தற்போதைய வீதங்கள் பற்றிய கீழே தரப்பட்டுள்ளன.

**ஆண்டிற்கான தேய்மான வீதம் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

| விடயம் | தேய்மான வீதம் |
|---|---|
| தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் | 25% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| புகைப்படப் பிரதியெடுக்கும் இயந்திரம் | 25% |
| கணனிகள் | 33.33% |
| மின்சாரப் பொருட்கள் | 25% |
| வாசிகசாலைப் புத்தகங்கள் | 20% |
| சக்தி உபகரணங்கள் | 33.33% |
| கண்காட்சி உபகரணங்கள் | 25% |
| காற்று சக்திக் கோபுரங்கள் | 20% |
| கட்டிடங்கள், நிர்மாணங்கள் | 5% |

***சூரிய சக்தி/சிறிய நீர்வலு கருத்திடடங்கள் :***

| | |
|---|---|
| A. சூரிய சக்திப் பலகைகள் | 5% |
| B. உருக்கு நிர்மாணங்கள் | 10% |
| C. கட்டிடங்கள் | 5% |
| D. சுவிட் ஜியர் | 20% |
| E. உட்திணி சாதனங்கள் | 20% |
| F. மின்மாற்றிகள் | 5% |
| G. மின்சார இலத்திரனியல் சாதனங்கள் | 33% |
| I. துப்புரவேற்பாடு, ஈயக்கம்பி பொருத்துக்கள் | 5% |
| J. கேபெல்கள் | 20% |
| K. தளபாடங்கள், பொருத்துக்கள், அலுவலக உபகரணங்கள் | 25% |
| L. கருவி சாதனங்கள் | 33% |
| M. இயந்திராதிகள் | 20% |
| H. ஏனையவை | 20% |

### 2.4 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

#### 2.4.1 பணிக்கொடை

பணிக்கொடைக்கு உரித்துடைய சகல ஊழியர்களுக்கும் அந்தந்த ஊழியர் தொடர்பில் குறித்த நிதியாண்டிற்கான கடைசி மாத சம்பளத்தின் அடிப்படையில் அரை மாத சம்பளத்திற்கு சமனான ஒரு தொகை பணிக்கொடைக்கென ஒதுக்கப்படுகின்றது.

#### 2.4.2 ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி.

ஊழியர்கள் அந்தந்த நியதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைய ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. ஆகியவற்றுக்கு பங்களிக்க உரித்துடையவர்களாவர். இ.நி.வ.ச. ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. ஆகியவற்றுக்கு செலுத்தும் அத்தகைய பங்களிப்புத் தொகை முறையே 12% மற்றும் 3% ஆகிய வீதங்களில் காணப்படும்.

#### 2.4.3 மகாவலிக் காணி

அம்பாந்தோட்ட சூரிய சக்திப் பேட்டைக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட 50 ஏக்கர் அளவான மகாவலிக் காணி இன்னும் விலைமதிப்பீடு செய்யப்படவில்லை. ஆகையால், அந்தக் காணி கணக்குகளில் ஒரு சொத்தாக உள்ளடக்கப்படவில்லை.

#### 2.4.4 பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம்

இந்த நிதிக் கூற்றுக்கள் அதிகார சபையின் பணிப்பாளர்கள் சபையினால் 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1 :

**ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்**

**நிலையான சொத்துக்கள்**

| விபரம் | 31.12.2015 ஆம் திகதியிலுள்ள மீதி ரூபா . | 2016 இல் கொ /வு செய்த சொத்துக்கள் | மறுமதிப்பீடு அளவு ரூபா . | 2016 ஆண்டின் அகற்றல்கள் ரூபா . | 31.12.2016ல் அதிகார நிதிய த்தின் மீதி ரூபா | 31.12.2016ல் மீள் சக்தி நிதிய த்தின் மீதி ரூபா | 31.12.2015 ஆம் திகதியிலுள்ள மீதி ரூபா . |
|---|---|---|---|---|---|---|---|
| காணிகள் | 45,856,451 | – | | | | 45,856,451 | 45,856,451 |
| கட்டிடங்கள் | – | – | | | | | – |
| தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் | 19,420,184 | 185,286 | | | 19,605,470 | | 19,605,470 |
| மோட்டார் வாகனங்கள் | 52,266,495 | – | | | 52,266,495 | | 52,266,495 |
| புகைப்படப் பிரதியெடுக்கும் இயந்திரம் | 2,994,191 | – | | | 2,994,191 | | 2,994,191 |
| கணனிகள் | 33,258,570 | 362,700 | | | 33,621,270 | | 33,621,270 |
| மின்சாரப் பொருட்கள் | 429,197 | – | | | 429,197 | | 429,197 |
| வாசிகசாலை நூல்கள் | 1,438,352 | – | | | 1,438,352 | | 1,438,352 |
| சக்தி உபகரணங்கள் | 89,142,935 | 2,440,452 | | | 91,583,387 | | 91,583,387 |
| காற்று சக்தி கோபுரங்கள், உபகரணங்கள் | 46,482,873 | 1,237,429 | 444,421 | -925,921 | 47,238,802 | | 47,238,802 |
| குளிர்சாதனப்பெட்டி பரிசோதனை ஆய்வுக்கூடம் | 42,165,337 | – | | | 42,165,337 | | 42,165,337 |
| **<u>சூரிய சக்தி மற்றும் சிறிய நீர்வலு கருத்திட்டங்கள்</u>** | | – | | | | | – |
| A. சூரிய சக்திப் பலகைகள் | 660,106,452 | – | | | 660,106,452 | | 660,106,452 |
| B. உருக்கிலான நிர்மானங்கள் | 222,261,738 | – | | | 222,261,738 | | 222,261,738 |
| C. கட்டிடங்கள் | 131,017,606 | – | | | 131,017,606 | | 131,017,606 |
| D. சுவிட்ச் ஜியர் | 13,973,767 | – | | | 13,973,767 | | 13,973,767 |
| E. உற்திணிசாதணங்கள் | 79,091,306 | – | | | 79,091,306 | | 79,091,306 |
| F. மின்மாற்றிகள் | 45,753,626 | – | | | 45,753,626 | | 45,753,626 |
| G. மின்சார இலத்திரனியல் பொருட்கள் | 31,257,940 | 361,100 | | | 31,619,040 | | 31,619,040 |
| I. துப்புரவேற்பாடும் குழாய் பொருத்துகளும் | 166,473,900 | 25,575 | | | 166,499,475 | | 166,499,475 |
| J.கேபெல்கள் | 100,224,571 | – | | | 100,224,571 | | 100,224,571 |
| K. தளபாடங்கள், பொருத்துக்கள், அலுவலக உபகரணங்கள் | 3,014,584 | – | | | 3,014,584 | | 3,014,584 |
| L. கருவிகள் | 14,243,433 | 5000 | | | 14,248,433 | | 14,248,433 |
| M. இயந்திராதிகள் | 4,001,375 | 46,000 | | | 4,047,375 | | 4,047,375 |
| H. ஏனையவை | 60,039,664 | – | | | 60,039,664 | | 60,039,664 |
| கண்காட்சி உபகரணங்கள் | 354,853 | – | | | 354,853 | | 354,853 |
| UNDP கருத்திட்டங்களின் நிலையான சொத்துக்கள் | 19,500 | 504,800 | | | 524,300 | | 524,300 |
| | **1,865,288,900** | **5,168,342** | **444,421** | **-925,921** | **1,824,119,291** | **45,856,451** | **1,869,975,742** |

**தேய்மானக் கணக்கு**

| விபரம் | தேய்மான வீதம் % | 2015 ஆம் ஆண்டிற்கான தேய்வு | 31.12.2015 திகதியிலுள்ள மீதி (ரூ) | 2016 ஆம் ஆண்டிற்கான தேய்வு | 2016 ஆண்டுக்கான அகற்றல் (ரூ) | 31.12.2016 திகதியிலுள்ள மீதி (ரூ) | 31.12.2016 ல் தேறிய புத்தக பெறுமதி (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| காணிகள் | 0 | | | | | – | 45,856,451 |
| கட்டிடங்கள் | 5 | | | | | – | – |
| தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் | 25 | 2,379,666 | 15,790,951 | 2,472,572 | | 18,263,523 | 1,341,947 |
| மோட்டார் வாகனங்கள் | 20 | 1,158,245 | 47,361,824 | 1,247,215 | | 48,609,039 | 3,657,456 |
| புகைப்படப் பிரதியெடுக்கும் இயந்திரம் | 25 | -438,462 | 1,811,405 | 281,070 | | 2,092,475 | 901,716 |
| கணனிகள் | 33.33 | 3,099,306 | 28,414,885 | 1,828,688 | | 30,243,573 | 3,377,697 |
| மின்சாரப் பொருட்கள் | 25 | 52,682 | 314,754 | 52,682 | | 367,436 | 61,761 |
| வாசிகசாலை நூல்கள் | 20 | 71,175 | 493,153 | 203,408 | | 696,561 | 741,791 |
| சக்தி உபகரணங்கள் | 33.33 | 7,041,829 | 89,244,037 | 2,238,248 | | 91,482,285 | 101,102 |
| காற்று சக்தி கோபுரங்கள், உபகரணங்கள் | 20 | 9,648,214 | 39,239,109 | 6,433,908 | -324,046 | 45,348,971 | 1,889,831 |
| குளிர்சாதனப்பெட்டி பரிசோதனை ஆய்வுக்கூடம் | 20 | 8,433,067 | 16,288,527 | 8,433,067 | | 24,721,594 | 17,443,743 |
| **<u>சூரிய சக்தி மற்றும் சிறிய நீர்வலு கருத்திட்டங்கள்</u>** | | – | | | | – | – |
| A. சூரிய சக்திப் பலகைகள் | 5 | 33,024,410 | 148,732,470 | 33,025,517 | | 181,757,987 | 478,348,465 |
| B. உருக்கிலான நிர்மானங்கள் | 10 | 22,226,174 | 98,859,540 | 22,226,174 | | 121,085,714 | 101,176,024 |
| C. கட்டிடங்கள் | 5 | 6,444,377 | 28,443,536 | 6,560,293 | | 35,003,829 | 96,013,777 |
| D. சுவிட்ச் ஜியர் | 20 | 2,794,753 | 13,782,344 | 191,421 | | 13,973,765 | 2 |
| E. உற்திணிசாதணங்கள் | 20 | 15,732,456 | 71,561,272 | 7,081,112 | | 78,642,384 | 448,922 |
| F. மின்மாற்றிகள் | 5 | 2,287,681 | 10,236,139 | 2,287,681 | | 12,523,820 | 33,229,806 |
| G. மின்சார இலத்திரனியல் பொருட்கள் | 33.33 | 3,770,899 | 30,169,921 | 1,121,099 | | 31,291,020 | 328,020 |
| I. துப்புரவேற்பாடும் குழாய் பொருத்துகளும் | 5 | 8,323,695 | 36,772,641 | 8,324,143 | | 45,096,784 | 121,402,691 |
| J.கேபெல்கள் | 20 | 20,044,914 | 88,759,497 | 11,454,590 | | 100,214,087 | 10,484 |
| K. தளபாடங்கள், பொருத்துக்கள், அலுவலக உபகரணங்கள் | 25 | 442,990 | 2,989,541 | 12,539 | | 3,002,080 | 12,504 |
| L. கருவிகள் | 33.33 | 47,340 | 14,050,642 | 54,977 | | 14,105,619 | 142,814 |
| M. இயந்திராதிகள் | 20 | 800,275 | 2,589,530 | 756,753 | | 3,346,283 | 701,092 |
| H. ஏனையவை | 20 | 12,007,933 | 52,962,987 | 7,004,694 | | 59,967,681 | 71,983 |
| கண்காட்சி உபகரணங்கள் | 25 | 500 | 354,725 | 128 | | 354,853 | – |
| UNDP கருத்திட்டங்களின் நிலையான சொத்துக்கள் | | – | | 69,637 | | 69,637 | 454,663 |
| | | **159,394,119** | **839,223,430** | **123,361,616** | **-324,046** | **962,261,000** | **907,714,742** |

**தொட்டுணர முடியாத சொத்துக்கள்**

| விபரம் | 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொ /வு செய்யப்பட்ட செத்துக்கள் | 31.12.2015 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொ /வு செய்யப்பட்ட செத்துக்கள் | 31.12.2016 ஆம் திகதியிலுள்ள நிலுவை |
|---|---|---|---|---|
| கணனி மென்பாகங்கள் | 2,085,000 | 2,085,000 | 8,345,683 | 10,430,683 |
| தரவுகளும் தகவல்களும் | 3,558,450 | 3,558,450 | 896,800 | 4,455,250 |
| | 5,653,450 | 5,653,450 | 9,242,483 | 14,885,933 |

குறிப்பு 3 : நிகழும் பணிகள்

| | 31.12.2016 | 31.12.2015 |
|---|---|---|
| மீளப்புதுப்பிக்கதகு சக்தி மதிப்பீடு | 2,377,000 | 2,377,000 |
| ADB quantum Leap - WRA (wind force) | 2,299,935 | 2,299,935 |
| Energy Efficiency Utilization of pv thru DC Micri grid | 442,000 | 442,000 |
| அலுவலக கட்டிடத் தொகுதி | 3,936,978 | 668,893 |
| பரொட்டோடைப் மின்சார வாகனம் | 7,956,800 | 7,956,800 |
| காற்று சக்தி அளவீட்டுக் கோபுரங்கள் - சாம்பூர் | 130,550 | _ |
| காற்று சக்தி அளவீட்டுக் கோபுரங்கள் - நாடுகுடா | 1,775,025 | _ |
| Clean Energy Network Efficiency Project | 15,788 | _ |
| Revision of code for Energy Efficiency Building Practi: | 951,778 | _ |
| | 19,885,854 | 13,744,628 |

குறிப்பு 4 : முதலீடுகள்

நிலையான வைப்புகள் (பொரல்ல தேசிய சேமிப்பு வங்கி)

| முதலீடு செய்யப்பட்ட திகதி | முதிர்ச்சித் திகதி | முதலீட்டு வீதம் | வைப்புப் பதிவிலக்கம் | 31.12.2016 ம் திகதிக்கான வைப்பு | 31.12.2015 ம் திகதிக்கான வைப்பு |
|---|---|---|---|---|---|
| 21.09.2011 | 21.09.2015 | 11.00% | 2-0061-05-10416 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011 | 21.09.2015 | 11.00% | 2-0061-05-10432 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011 | 21.09.2015 | 11.00% | 2-0061-05-10408 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011 | 21.09.2015 | 11.00% | 2-0061-05-10343 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011 | 21.09.2015 | 11.00% | 2-0061-05-10335 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011 | 21.09.2015 | 11.00% | 2-0061-05-10378 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011 | 21.09.2015 | 11.00% | 2-0061-05-10386 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011 | 21.09.2015 | 11.00% | 2-0061-05-10327 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011 | 21.09.2015 | 11.00% | 2-0061-05-10319 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011 | 21.09.2015 | 11.00% | 2-0061-05-10297 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011 | 21.09.2015 | 11.00% | 2-0061-05-10289 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011 | 21.09.2015 | 11.00% | 2-0061-05-102262 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011 | 21.09.2015 | 11.00% | 2-0061-05-10254 | 1,200,000 | 1,200,000 |
| 25.09.2011 | 21.09.2015 | 11.00% | 2-0061-04-12376 | 450,000 | 450,000 |
| 05.10.2011 | 05.10.2015 | 11.00% | 2-0061-03-09834 | 2,894,453 | 2,894,453 |
| 02.05.2014 | 02.05.2015 | 8.50% | 2-0061-09-60845 | 9,039,590 | 8,540,000 |
| 20.10.2014 | 20.10.2015 | 11.00% | 2-0061-09-49981 | 448,169 | 423,400 |
| | | | | 28,432,212 | 27,907,853 |

மக்கள் வங்கி தலைமை அலுவலகத்தில் முதலீடு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள் -

| முதலீடு செய்யப்பட்ட திகதி | முதிர்ச்சித் திகதி | முதலீட்டு வீதம் | வைப்புப் பதிவிலக்கம் | 31.12.2016 ம் திகதிக்கான வைப்பு | 31.12.2015 ம் திகதிக்கான வைப்பு |
|---|---|---|---|---|---|
| 18.01.2011 | 17.01.2017 | 7.00% | LKB00615C156 | 15,585,004 | 14,807,605 |
| 09.07.2011 | 11.07.2017 | 10.00% | LKB00314J011 | 33,753,677 | 31,893,706 |
| | | | | 49,338,681 | 46,701,311 |

| | | |
|---|---|---|
| மொத்த தொகை | 77,770,893 | 74,609,164 |

## குறிப்பு 5

**மீளப்பெற்ற கடன்**

| | | 31.12.2016 | 31.12.2015 |
|---|---|---|---|
| ADB கடன் (L2892/93 SRI) சம்பத் வங்கி | | | |
| Clean Energy Network Efficiency Improvement Project | | | |
| ஒரேன்ஜ் பீல்ட் - கடன் | 2,793,000 | | |
| மிஹமி க்லோத் - கடன் | 2,425,500 | | |
| டீ5 எஸ்கேப் - கடன் | 1,485,000 | | |
| எம்.ஜே.எப்.டீஸ் - கடன் | 2.763,600 | | |
| ஏசியா பயிக் - கடன் | 2,523,900 | | |
| மிஹமி க்லோதின் - கடன் | 5,656,500 | | |
| எஸ்.ஜீ.ஜோசப் மற்றும் சகோதரர்கள் | 4,649,809 | | |
| எம்.ஜே.எப்.டீஸ் - கடன் | 6,448,400 | | |
| மவுன்ட் எலீசா டீ பக்டரி - கடன் | 2,718,000 | | |
| ஏசியா பயிக் - கடன் | 2,523,900 | | |
| மீசன் & கம்பனி | 3,450,000 | | |
| லயிட் ஹவுஸ் ஹொட்டல் | 2,991,900 | | |
| ஏசியா பயிக் இன்டஸ்டியல்ஸ் - கடன் | 3,365,200 | | |
| எஸ்.ஜீ.ஜோசப் - கடன் | 1,862,000 | 45,659,709 | _ |
| ADB கடன் (L2892/93 SRI) தேசிய அபிவிருத்தி வங்கி | | | |
| நிலைப்பெறு சக்திப் பிரிவிற்காக பயன்படுத்தப்படும் திட்டங்கள் | | | |
| எம்பிலிபிட்டியப்லான்டெஷன் - கடன் | 7,110,000 | | |
| வட்டவலை ப்லான்டெஷன் - கடன் | 7,770,000 | 14,880,000 | _ |
| | | 60,539,709 | |

## குறிப்பு 6 வருமதிகள்

| | | |
|---|---|---|
| நிலையான வைப்புக்கள் மீது கிடைக்க வேண்டிய வட்டி | 1,104,643 | 701,875 |
| திறைசேரி உண்டியல்கள் மீது கிடைக்க வேண்டிய வட்டி | 2,688,109 | 1,609,523 |
| மின் உற்பத்தி - ஹம்பந்தோட்டை / இந்துரானை | 8,691,945 | 13,109,742 |
| இலங்கை மின்சார சபை - ஆர்.சீ.எல். கூலி | 8,033,271 | _ |
| கிடைக்க வேண்டிய ஊழிய வருமானம் | 2,382 | 2,382 |
| இறைவரித் தினைக்களத்திருந்து வரும் VAT கடன் | 280,458 | 2,071,868 |
| உள்நாட்டு பயிற்சி நிபழ்ச்சித் திட்டம் (தொங்கு) | 443,309 | 348,381 |
| | 6,309 | 24,715 |
| ஹெரிடன்ஸ் அவுன்கல்ல | 35,659 | 35,659 |
| | _ | _ |
| | 21,286,085 | 17,904,145 |
| **மொத்த தொகை** | 38,779,418 | 33,496,892 |

**குறிப்பு 7 ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்**

**முற்பனங்கள் / மீள்ளிக்க வேண்டிய வைப்புக்கள்**

| | 31.12.2016 | 31.12.2015 |
|---|---|---|
| CFL கடன் | | |
| சக்தி நிதியத்திலிருந்து அதிகாரசபை நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய தொகை | 12,176,162 | 14,586,777 |
| மருத்துவக் காப்புறுதி | 500 | 500 |
| எரி பொருட்களுக்கான வைப்பு | 186,500 | 186,500 |
| ஹம்பந்தோட்டை இ.மி.ச வைப்பு | 52,000 | 52,000 |
| இந்துரானை இ.மி.ச வைப்பு | 62,500 | 62,500 |
| தொலைப்பேசிக்கான வைப்பு | 351,048 | 351,048 |
| தொலைப்பேசிக்கான வைப்பு - மொபிட்டெல் | 2000 | 2000 |
| SWRDB ஞாபகார்த்த நிதிய வைப்பு | 340,429 | 284,280 |
| நீர் வழங்கள் சபை வைப்பு | 2,500 | |
| நிகழ்ச்சித்திட்டங்களுக்கான முற்பனங்கள் | 190,093 | 27,990 |
| ஹம்பந்தோட்டை விடுதி வாடகை வைப்பு | 132,000 | 132,000 |
| Spring water pvt ltd வைப்பு | 3,500 | 3,500 |
| W.D.J.S ஒனில் வைப்பு | 2,100,000 | _ |
| மீனவர் அமைச்சு - தெற்கு மாகான சபை | 1,800,000 | 1,800,000 |
| அமெரிக்கா ப்ரிமியம் வோட்டர் வைப்பு | 23,000 | 23,000 |
| தேசிய இளைஞர் மன்ற வைப்பு | 40,000 | 40,000 |
| J.R. ஜயவர்த்தன கலாவார நிலைய வைப்பு | 5,000 | 5,000 |
| இலங்கை தேசிய வைத்தியசாலை முற்பனம் | 475,000 | 475,000 |
| வடமேல் மாகாண விலங்குகள் பராமரிப்புத் திணைக்கள முற்பனம் | 26,777 | 26,777 |
| ஹம்பந்தோட்டை மாவட்ட செயலக முற்பனம் | 23,992 | 2,199,668 |
| கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவக முற்பனம் | 97,680 | 97,680 |
| மகாவலி றீச் ஹோட்டல் முற்பனம் | 231,388 | 231,388 |
| ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பழ்கலைக்கழக முற்பனம் | 700,000 | 700,000 |
| இலங்கை ரூபவாயினிக் கூட்டுத்தாபன முற்பனம் | 150,000 | 150,000 |
| பானதுறை நகர சபை முற்பனம் | 24,725 | _ |
| விஷுவல் வியாபார அமைப்பு | 510,622 | _ |
| ரன்ஜித் ருவான் விஜேவர்தன முற்பனம் | 108,000 | _ |
| இ.மி.ச முற்பனம் - சூரிய வெவ | 100,750 | _ |
| இலங்கை நிதியம் முற்பனம் | 97,000 | _ |
| W.D.J.S ஒனில் வைப்பு, நிகழ்ச்சி முகாமைத்துவப் பிரிவு | 2,578,450 | _ |
| பிரதேச செயலாளர் காரியாளய முற்பனம் - ருவான்வெல்ல | 256,360 | _ |
| N.C.P.கல்வித் திணைக்களம் - அநுராதபுரம் | 2,000,000 | _ |
| அரச நிர்வாக அமைச்சு - முற்பனம் | 84,150 | _ |
| மாகாண கல்வித் திணைக்களம் - ஊவா - முற்பனம் | 1,253,150 | _ |
| மாகாண கல்வித் திணைக்களம் - கிழக்கு - முற்பனம் | 1,323,300 | _ |
| மாகாண கல்வித் திணைக்களம் - வடக்கு - முற்பனம் | 1,618,300 | _ |
| மாகாண கல்வித் திணைக்களம் - வட மேற்கு - முற்பனம் | 1,120,850 | _ |
| பௌத்த கலாச்சார மையம் - முற்பனம் | 280,122 | _ |
| மாகாண கல்வித் திணைக்களம் - மத்திய - முற்பனம் | 1,976,480 | _ |
| மாகாண கல்வித் திணைக்களம் - தெற்கு - முற்பனம் | 2,156,715 | _ |
| மாகாண கல்வித் திணைக்களம் - சப்ரகமுவ - முற்பனம் | 1,122,542 | _ |
| அரச அச்சகம் - முற்பனம் | 2,365,000 | _ |
| மாகாண கல்வித் திணைக்களம் - மேற்கு - முற்பனம் | 776,750 | _ |
| சுகததாச பண்டார மற்றும் சகோதரர்கள் - முற்பனம் | 64,260 | _ |
| பீ.எம்.ஐ.சீ.எச். முற்பனம் | 75,000 | _ |
| | 39,064,595 | 21,437,608 |

**சுழற்சி நிதி**

| | 2016 | 2015 |
|---|---|---|
| இடர் கடன் | 10,864,008 | 7,925,100 |
| விஷேட முற்பணம் | 4,585 | 4,585 |
| விழா முற்பணம் | 31,989 | 45,739 |
| | 10,900,582 | 7,975,424 |
| | **49,965,177** | **29,413,032** |

**குறிப்பு 9 : திரண்ட நிதி**

சக்திப் பாதுகாப்பு நிதியத்தின் ( ச.பா.நி ) 2007 செப்டெம்பர் 30 ஆம் திகதியிலிருந்து திரண்ட நிதி 2007 ஒக்டோபர் 01 ஆம் திகதி இலங்கை நிலைபேறுதகு வலு அதிகார சபைக்கு (இ.நி.வ.அ.ச) மாற்றப்பட்டது. அந் நிதியில் பின்வருவன உள்ளடங்கும் :

| | | |
|---|---|---|
| 2007 செப்டெம்பர் 30 ஆம் திகதியிலிருந்து திரண்ட நிதி | 7,076,392 | 7,076,392 |
| ஆரம்ப மூலதனம் | 5,000,000 | 5,000,000 |
| மூலதன மானியம் - மின்வலு சக்தி அமைச்சு | 5,761,145 | 5,761,145 |
| UNDP மூலதன மானியம் | 3,612,560 | 3,612,560 |
| நன்கொடை மானியம் - உணவு விவசாய நிறுவனம் | 650,239 | 650,239 |
| | 22,100,336 | 22,100,336 |

**குறிப்பு 10 : பிற்போடப்பட்ட மானியம்**

| | **2016** | **2015** |
|---|---|---|
| மூலதன மானியம் 2008 | 33,770,435 | 33,770,435 |
| மூலதன மானியம் 2009 | 11,955,533 | 11,955,533 |
| வெளிநாட்டு மானியம் 2009 - ஜப்பான் | 24,165,380 | 24,135,380 |
| மூலதன மானியம் 2010 - ஹம்பந்தோட்டை சூரிய சக்திப் பேட்டை | 46,693,991 | 46,693,991 |
| கழிக்கப்படாத மூலதன மானியம் | 10,646,819 | 10,646,819 |
| வெளிநாட்டு மானியம் 2010 - ஜப்பான் | 11,419,569 | 11,419,569 |
| மூலதன மானியம் 2011 - இந்துரானை சிறிய நீர்வலுக் கருத்திட்டம் | 15,523,945 | 15,523,945 |
| கழிக்கப்படாத மூலதன மானியம் இந்துரானை MHP | 68,798,341 | 68,798,341 |
| வெளிநாட்டு மானியம் 2011 - ஜப்பான் | 1,155,016,402 | 1,155,016,402 |
| கொரியா | 191,097,075 | 191,097,075 |
| பிற்போடப்பட்ட மானியம் - வெளிநாட்டு மானியம் - 2012 ஆ.அ.வ | 15,082,346 | 15,082,346 |
| திறைசேரி மூலதன மானியம் - 2012 | 23,581,236 | 23,581,236 |
| பிற்போடப்பட்ட மானியம் - 2013 ஆ.அ.வ | 43,416,071 | 43,416,071 |
| பிற்போடப்பட்ட மானியம் -KOIKA - 2013 | 35,662 | 35,662 |
| திறைசேரி மூலதன மானியம் / FARDF - 2013 | 41,873,961 | 41,873,961 |
| மூலதன மானியம் 2014 | 20,487,827 | 20,487,827 |
| மூலதன மானியம் 2015 | 14,655,015 | 14,655,015 |
| மூலதன மானியம் 2016 | 18,752,051 | |
| கழிக்குக : | | |
| பிற்போடப்பட்ட வருமானம் - 2016 | -123,361,618 | |
| பிற்போடப்பட்ட வருமானம் - 2015 | -159,394,219 | -159,394,219 |
| பிற்போடப்பட்ட வருமானம் - 2014 | -162,919,374 | -162,919,374 |
| பிற்போடப்பட்ட வருமானம் - 2013 | -168,752,494 | -168,752,494 |
| பிற்போடப்பட்ட வருமானம் - 2012 | -161,579,648 | -161,579,648 |
| பிற்போடப்பட்ட வருமானம் - 2011 | -63,412,336 | -63,412,336 |
| **முன்னைய ஆண்டுகளின் பிற்போடப்பட்ட வருமானம் -** | -26,338,720 | -26,338,720 |
| | **881,213,250** | **985,822,817** |

| குறிப்பு 11 : | 31.12.2016 | 31.12.2015 |
|---|---|---|
| **இலங்கை நிலபெறுதகு வலு நிதியம்** | | |
| RE வருமானம் | 349,270,722 | 234,856,712 |
| கருவிசாதனங்களை வாடகைக்கு விடுதலும் சக்திக் கணக்காய்வும் | 24,927,402 | 23,657,099 |
| சேமிப்பு கணக்கு மீதான வட்டி -தே.சே.வ | 47,758,836 | 36,591,569 |
| WHT வரி | -726,127 | -258,884 |
| நிகழ்ச்சித்திட்டங்களுக்கான / சக்தி நிதியத்தின் செயற்பாடுகளுக்கான மீளப்பெறுகைகள் | -80,974,096 | -42,400,282 |
| காரியாளத்திற்காக கொள்வனவு செய்த நிலத்திற்கான மீளப்பெறுகைகள் | -47,000,000 | -47,000,000 |
| இ.வ சேமிப்பு கணக்கிலுள்ள ஆரம்ப செலவு நிலுவை | 500 | 500 |
| | 293,257,237 | 205,446,714 |

**குறிப்பு 12 : ஏனைய கொடுமதிகள்**

| | 31.12.2016 | 31.12.2015 |
|---|---|---|
| நிலபெறுதகு சக்தி நிதியம் | _ | |
| சக்தி நிதியத்திலிருந்து அதிகாரசபை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை | 12,176,162 | 14,586,777 |
| சுவிட்ச் ஏசியா கட்டுப்பாட்டுக் கணக்கு (A/C) | 4,548,176 | 4,548,176 |
| மின்வலு சக்தி அமைச்சு | 500 | 500 |
| திரண்ட செலவுகள் | 11,645,917 | 11,579,596 |
| வழங்கப்படாத காசோலைகள் | 173,696 | 121,271 |
| புதுப்பிக்கதகு சக்தி சோலர் பதிவு கட்டண கொடுமதிகள் | 295,860 | |
| பண்டாரநாயக்க நினைவக நிதியம் ( BMICH ) | | 2,146,796 |
| மகாவலி அபிவிருத்தி மற்றும் சூழல் அமைச்சு | 470,000 | |
| UNDP - NAMA திட்டம் | 1,036,803 | |
| UNDP - Biomass திட்டம் | 1,970,834 | |
| **கடன்கள்** | | |
| மீளப்புதுப்பிக்கதகு சக்தி - E நெட் சொலூஷன்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட் | 1,667,500 | 1,667,500 |
| சக்தி உபகரண கொள்வனவு E நெட் சொலூஷன்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட் | 326,025 | 326,025 |
| பிடித்து வைத்தல் தொகை | 3,167,807 | 1,614,807 |
| நாரஹேன்பிட்ட தேசிய சந்தை | 99,405 | 99,405 |
| ஏனைய கடன்கள் | | -1 |
| **நானாவிதக் கடன்கள்** | | |
| இலங்கை சுங்கத் திணைக்களம் | 310,748 | 310,748 |
| SEA நலன்புரிச் சங்கம் | 442 | 442 |
| **மீளளிக்கத்தகு வைப்புக்கள்** | | |
| E நெட் சொலூஷன்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட் | 10,000 | 10,000 |
| ENL கன்ஸல்டென்ட் | 150,000 | 150,000 |
| சிக்மா டெக்னொலஜி | 10,000 | 10,000 |
| ரென்கோ ரீனிவபல் எனெர்ஜி கம்பனி (ப்ரைவட்) லிமிற்றட் | 30,000 | 30,000 |
| விதுல்கா கண்காட்சி | 9,256 | 9,256 |
| இலங்கைப் பெடரோலியக் கூட்டுத்தாபனம் | 54,000 | 54,000 |
| மீள்ளிக்கத்தகு வைப்பு - வாகனம் | 14,000 | 14,000 |
| ATA இன்டர்நெஷனல் | 50,000 | 50,000 |
| ருஹுணு சூரிய சக்தி முறைமைகள் | | 75,000 |
| விதுல்கா மாநாடு | 25,000 | 25,000 |
| | **38,242,131** | **37,429,298** |

**குறிப்பு 13 : கருத்திட்ட செலவுகளுக்கான மூலதன மானியம்**

| | 2016 | 2015 |
|---|---|---|
| திறைசேரியிலிருந்து கிடைத்த மூலதன மானியம் | 60,000,000 | 42,565,536 |
| FR 295(1) இன் கீழுள்ள மற்றல் கொடுப்பனவுகள் | | |
| கழிக்குக : | | |
| நிகழும் பணி | 4,341,226 | 6,805,978 |
| தொட்டுணர முடியாத சொத்துக்கள் | 9,242,438 | 113,450 |
| நடைமுறை ஆண்டுக் காலப்பகுதியில் கொள்வனவு செய்த | 5,168,342 | 7,735,587 |
| மூலதனச் சொத்துக்கள் | **41,247,949** | **27,910,521** |

**குறிப்பு 14 : கழிக்கப்பட்டு பிற் போடப்பட்ட மானியம்**

| | | |
|---|---|---|
| நடைமுறை ஆண்டிற்கான தேய்மானம் | 123,361,618 | 159,394,219 |
| முன்னைய ஆண்டிற்கான தேய்மானம் | | |
| | **123,361,618** | **159,394,219** |

**குறிப்பு 15 : ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| சக்தி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 57,407,265 | 31,813,385 |
| நிலையான வைப்பு மீதான வட்டி | 237,635 | 1,207,403 |
| SAARC சக்தி நிலையம் | | |
| இடர் கடன் வட்டி | 391,525 | 389,555 |
| விஷேட முற்பன வட்டி | 2,202 | 3,110 |
| ஹம்பந்தோட்டை மின்னுற்பத்திக் கருத்திட்டத்திட்டத்திலிருந்து கிடைக்கும் வருமானம் | 33,404,790 | 42,049,876 |
| இந்துரான நீர்வலு மின்னுற்பத்திக் கருத்திட்டத்திட்டத்திலிருந்து கிடைக்கும் வருமானம் | 1,335,492 | 3,559,824 |
| சக்தி முகாமையாளர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 64,954 | 359,250 |
| விதுல்கா கண்காட்சி (அனுசரனை) | | |
| விதுல்கா கண்காட்சி (கொட்டகைகள்) | | |
| சுவிட் ஏசியா நிகழ்ச்சித்திட்டம் | | |
| சக்தி முகாமையாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கள் | | |
| ஏனைய வருமானம் | 1,644,335 | 429,021 |
| காணி கொள்வனவுக்காக சக்தி நிதியத்திலிருந்து கிடைக்கும் வருமானம் | | 47,000,000 |
| சக்தி நிதியத்திலிருந்து கிடைக்கும் வருமானம் | 38,573,814 | 12,057,675 |
| வரிவிதிக்கத்தகு வருமான வரி மீது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | | |
| காற்று சக்தித் தரவுகள் வருமானம் | | |
| மின்குமிழ்கள் பரிசோதனை | | 175,000 |
| செயல்திறன் சோதனை கட்டணம் | 287,500 | |
| | **133,349,512** | **139,044,099** |

**குறிப்பு 16 :**

| **மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி** | **2016** | **2015** |
|---|---|---|
| 1 வள ஒதுக்கீடும் அபிவிருத்தியும் | 883,505 | 551,826 |
| 2 முன்னேற்றம் பற்றிய கண்காணிப்பு | 1,026,650 | 210,453 |
| 3 தொழிநுட்ப அபிவிருத்தியும் ஆராய்ச்சியும் | 1,809,305 | 1,762,389 |
| 4 மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி சார்ந்த சேவைகள் | 31,902,188 | 10,280,995 |
| 5.1 நன்கொடை நிதியிடப்பட்ட கருத்திட்டம் | 2,990,724 | 3,106,625 |
| 5 நன்கொடை நிதியிடப்பட்ட கருத்திட்டம் UNDP bio mass proj | 2,691,954 | 4,388,732 |
| 5.5 நன்கொடை நிதியிடப்பட்ட கருத்திட்டம் ( Clean Energy Network Efficiency Project ) | 51,635,867 | 3,185,627 |
| 5.5 நன்கொடை நிதியிடப்பட்ட கருத்திட்டம் -அந்நிய செலாவணி நட்டம் /(இலாபம்) | -24,365 | 39,000 |
| 5.6 NAMA | 2,036,947 | |
| 6 அம்பந்தோட்டை RE ஸ்தல இயக்கச் செயற்பாடு | 8,851,875 | 6,766,182.00 |
| 7 இந்துரானை RE ஸ்தல இயக்கச் செயற்பாடு | 1,834,814 | 1,597,884 |
| | | – |
| | 105,639,464 | 31,889,713 |

**சக்தி முகாமைத்துவம்**

| | 2016 | 2015 |
|---|---|---|
| 1 சக்தி முகாமைத்துவ வட்டங்கள் | 10,907,130 | 6,939,616 |
| 2 நியமங்களும் ஒழுங்குவிதிகளும் | 2,321,326 | 611,912 |
| பச்சைக் கட்டிட நிகழ்ச்சி 1-7 | 530,000 | |
| பச்சைக் கட்டிட நிகழ்ச்சி 1-15 | _ | |
| 3 ஆலோசனைகளும் உசாத்துனைகளும் | 73,904 | 72,862 |
| 4 சாதனைகளுக்கான விருது வழங்கள் | 8,965,350 | 7,319,577 |
| 5 துறை சார்ந்த விஷேட நிகழ்ச்சித் திட்டங்கள் | 1,456,034 | 1,711,166 |
| 6 ஆரய்ச்சியும் அபிவிருத்தியும் | 7,125 | 2,098,844 |
| 7 முன்னோடிக் கருத்திட்டங்களின் தாபிப்பு | _ | 780,263 |
| 8 சக்திக் கணக்காய்வு | | 2,598,873 |
| ஆலோசனை சேவைகள் | 408,439 | |
| 9 கேள்வி பக்க முகாமைத்துவம் | 1,873,823 | |
| | 26,543,131 | 22,133,113 |

**அறிவு முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| 1 கல்வி நிகழ்ச்சித்திட்டம் | 22,886,248 | 9,994,530 |
| 2 தொடர்பாடல் நிகழ்ச்சித்திட்டம் | 3,772,951 | 4,812,136 |
| | 26,659,199 | 14,806,666 |

**திறமுறைசார்ந்த செயற்பாடுகள்**

| | | |
|---|---|---|
| 1 சக்தித் தரவுகள், தகவல்கள் தொகுப்பும் வெளியீடும் | 1,392,336 | 1,944,284 |
| 2 நாடளவிய எரிபொருள் நிலைய மதிப்பாய்வு | 21,604 | 6,721,053 |
| 3 வீட்டுத் துறை மின்சக்தி கேள்வி அம்சங்கள் | | 911,334 |
| 4 சக்திக் கொள்கை ஆராய்ச்சி பற்றிய வேலையரங்குகள் | | 1,140,670 |
| ஆரய்ச்சியும் அபிவிருத்தியும் | 4,477,600 | |
| இறுதி பயனர் சக்தி ஆய்வு | 1,497,122 | |
| நிலைபேறுதகு சக்தி முன்முயற்சி | 229,990 | |
| | 7,618,652 | 10,717,341 |
| **மொத்த கருத்திட்ட செலவுகள்** | **166,460,446** | **79,546,833** |

**மீண்டெழும் செலவுகள்**

குறிப்பு 17 : சம்பளங்களும் கொடுப்பனவுகளும்

| | | |
|---|---|---|
| ஊழியர்களுக்கான சம்பளம் | 48,257,110 | 46,665,650 |
| வாழ்க்கைப்படிக் கொடுப்பனவுகள் | 8,556,600 | 8,751,600 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் | | 5,839,872 |
| ஊ.சே.நி. 12% | 7,387,725 | 6,654,047 |
| ஊ.ந.நி. 3% | 1,845,834 | 1,663,161 |
| மேலதிகநேர மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுகள் | 5,450,447 | 3,700,950 |
| பணிக்கொடை | 5,621,087 | 1,305,150 |
| இடைக்கால கொடுப்பனவு | 4,590,000 | |
| மருத்துவக் காப்புறுதி | 1,574,988 | 1,490,837 |
| சொந்த வாகனப் பயன்பாடு | 1,920,000 | 690,000 |
| எரிபொருள் கொடுப்பனவு | 2,260,440 | |
| தொழில்முறை கொடுப்பனவு | 1,895,000 | |
| | **89,359,231** | **76,761,267** |

**குறிப்பு 18 : பிரயாண மற்றும் வாழ்க்கைச் செலவுப் படி**

| | **2016** | **2015** |
|---|---|---|
| உள்நாட்டுப் பிரயாணம் | 603,260 | 559,522 |
| வெளிநாட்டுப் பிரயாணம் | 949,977 | 153,531 |
| | **1,553,237** | **713,053** |

**குறிப்பு 19 : வழங்கல்கள்**

| | | |
|---|---|---|
| அச்சீடு, காகிதாதிகள், அலுவலகப் பொருட்கள் | 1,124,947 | 1,329,229 |
| எரி பொருள், உராய்வுநீக்கி எண்ணெய்கள் | 3,277,015 | 3,764,224 |
| ஏனையவை - செய்திப் பத்திரிகைகள், நானவித சேவைகள் | 71,020 | 134,275 |
| | **4,472,982** | **5,227,728** |

**குறிப்பு 20 : பராமரிப்பு சார்ந்த செலவுகள்**

| | | |
|---|---|---|
| வாகனங்களின் பராமரிப்பு, காப்புறுதி, அனுமதப் பத்திரக் கட்டணங்கள் | 7,652,188 | 7,084,759 |
| அலுவலக உபகரணங்களின் பங்களிப்பு | 832,454 | 430,170 |
| கட்டிட நிர்மானங்களின் பராமரப்பு | 98,500 | 92,875 |
| | **8,583,142** | **7,607,804** |

**குறிப்பு 21 : ஒப்பந்த சேவைகள்**

| | | |
|---|---|---|
| அலுவலக வாடகைகள், வாடகைக் கட்டணங்கள் | 30,519,070 | 25,174,703 |
| தபால் மற்றும் தொலைத்தொடர்புக் கட்டணங்கள் | 3,800,935 | 2,613,004 |
| போக்குவரத்து | 1,011,657 | 802,329 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 600,000 | 600,000 |
| | **35,931,662** | **29,190,036** |

**குறிப்பு 22 :தேய்மானம் சார்ந்த செலவுகள்**

| | **2016** | **2015** |
|---|---|---|
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 2,472,572 | 2,379,666 |
| மோட்டார் வாகனங்கள் | 1,247,215 | 1,158,245 |
| புகைப்படப்பிரதியெடுக்கும் இயந்திரம் | 281,070 | 373,223 |
| கணனிகள் | 1,828,688 | 3,099,306 |
| மின்சாரப் பொருட்கள் | 52,682 | 52,682 |
| வாசிகசாலை நூல்கள் | 203,408 | 71,175 |
| சக்தி உபகரணங்கள் | 2,238,250 | 7,041,829 |
| காற்று சக்திக் கோபுரங்கள் | 6,433,908 | 9,648,214 |
| குளிர்சாதனப் பெட்டிகள் பரிசோதனை ஆய்வுக்கூடம் | 8,433,067 | 8,433,067 |
| ஹம்பந்தோட்டை மற்றும் இந்துராளை சக்திப் பேட்டை | 100,100,993 | 127,947,897 |
| கண்காட்சி உபகரணங்கள் | 128 | 500 |
| UNDP கருத்திட்டத்திற்கான நிலையான சொத்துக்கள் | 69,637 | |
| | **123,361,618** | **159,394,219** |

**குறிப்பு 23 : ஏனைய மீண்டெழும் செலவுகள்**

| | 2016 | 2015 |
|---|---|---|
| அலுவலக மற்றும் ஏனைய நானாவித செலவுகள் | 1,447,355 | 2,255,581 |
| பத்திரிகை விளம்பரங்கள் | 587,220 | 246,186 |
| காப்புறுதி | 34,103 | 32,966 |
| மொழிப்பெயர்ப்புக் கட்டனங்கள் | 101,863 | 41,721 |
| சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் | 882,400 | 465,000 |
| சிற்றுண்டிச் செலவுகள் | 576,842 | 506,147 |
| தொழிலாளர் கட்டனங்கள் | | |
| நலனோம்புக் கட்டனங்கள் | | |
| உள்நாட்டு / வெளிநாட்டுப் பயிற்சிக் கட்டனங்கள் | 2,155,091 | 3,213,688 |
| வங்கிக் கட்டனங்கள் | | 27,388 |
| விதுல்கா பொது விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் | | |
| தேசத்தைக் கட்டியெழுப்பல் வரி (தே.க.வ) | 3,137,024 | 1,246,711 |
| தீராத பற்றுக்கள் | | 25,700 |
| | **8,921,898** | **8,035,388** |

குறிப்பு 24

<u>முன்னைய ஆண்டுகளின் மீளெடுத்துறைப்பு</u>

| | (பற்று)/வரவு |
|---|---|
| 1. செயற்பாடுகள் - சக்தி முகாமைத்துவம் | 177,600 பற்று |
| கொடுமதிகள் | 177,600 வரவு |
| ( பல் ஊடக கமரா கொள்வனவு - விதுல்கா 2015 ) | |
| 2. காரியாளய கட்டிட வாடிகை | 1,969,196 பற்று |
| BMICH வாடகை கொடுப்பனவு | 1,969,196 வரவு |
| ( 2015 இற்கான காரியால வாடகை 2016 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்படுகின்றது) | |
| 3. ஊழியர் பயிற்சி | 27,941 பற்று |
| ஊழியர்களின் மூலம் வர வேண்டியவை | 27,941 வரவு |
| ( 2015 இல் 2 ஊழியர்களது பயிற்சி நிறைவு செய்யப்படுகின்றது) | |
| 4. திரண்ட தேய்மானம் - புகைப்படப்பிரதியெடுக்கும் இயந்திரம் | 811,685 பற்று |
| தேய்மானம் - புகைப்படப்பிரதியெடுக்கும் இயந்திரம் | 811,685 வரவு |
| ( முன்னைய ஆண்டுக்கான தேய்மானம் சரி செய்யப்படுதல் ) | |
| 5. சக்தி நிதியத்திலிருந்து மீளப் பெற்றவை | 47,000,000 பற்று |
| சக்தி நிதியத்திலிருந்தான வருமானம் | 47,000,000 வரவு |
| ( காணிக் கொள்வனவிற்காக மீளப்பெறப்பட்டது) | |
| 6. சக்தி நிதியத்திலிருந்து கிடைக்க வேண்டியவை | 1,838,373 பற்று |
| சக்தி நிதியத்திற்கு கொடுக்க வேண்டியவை | 1,838,373 வரவு |
| ( உள்ளீட்டு வரியுடன் தொகை மாற்றப்பட்டது) | |
| 7. சக்தி நிதியத்திலிருந்தான வருமானம் | 690,729 பற்று |
| சக்தி நிதியத்திலிருந்து மீளப் பெற்றவை | 690,729 வரவு |
| ( வெளியீட்டு வரிக்கு மாற்றி மாற்றப்பட்டது) | |
| | **52,515,524** |

මගේ අංකය
எனது இல.
My No. } பீஓச/ச/எஸ்எல்எஸ்சஏ/எப்எஸ்/2016/04

මබේ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 2018 பெப்ரவரி 15 திகதி

தலைவர்,

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை,

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு சக்தி அதிகாரசபை சட்டத்தின் 50(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைபெறுதகு வலு அதிகாரசபையினால் அதற்கான அலுவலகக் கட்டிடமொன்று நிர்மானிப்பதற்காக நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் ரூபா 45,856,451 தொகை (ரூபா 4,856,451 இற்கான வரியும் உட்பட) செலவிடப்பட்டு 2015 ஆண்டின் போது காணி ஒன்று கொள்வனவு செய்திருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்தக் காணி நிதி நிலைமைக் கூற்றில் குத்தகைக் காணி ஒன்றென வேறாக காட்டப்பட்டிருக்காததுடன் 2016 திசெம்பர் 31 திகதி வரை காணியின் பெறுமதியை கிரமமாகக் குறைத்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) காணியை குத்தகைக்கு எடுப்பதற்காக வலு நிதியத்திலிருந்து பெற்றிருந்த ரூபா 47,000,000 இற்கான தொகை மூலதனப் பெறுவனவு என இன்றி வருவாய் பெறுவனவு ஒன்றென இனங்கண்டு 2015

ஆண்டிற்கான நிதி செயலாறுகைக் கூற்றில் ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக அவ் ஆண்டிற்கான மிகை ரூபா 47,000,000 தொகையினால் மிகையாக கணக்கிடப்பட்டிருந்தது.

(iii) காணி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பெறுமதி கூட்டிய வரியின் பெறுமதி ரூபா 2,698,675 தொகை எனினும் வலு நிதியத்திற்கு ரூபா 5,020,368 தொகை வரவு வைக்கப்பட்டமையால் அந்த நிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 2,321,693 இனால் குறைவாக கணக்கிடப்பட்டுள்ளது.

(iv) 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது அந்த கட்டிடத்திற்கான வரைபு தயாரிப்பதற்கான செலவுகளை மேற்கொள்வதற்காக ரூபா 3,936,978 தொகை வலு நிதி முதலீட்டு கணக்கில் இருந்து அகற்றியிருந்த போதிலும் அதனை நிதியக் கணக்கிற்கு வரவு வைக்காமையினால் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதியக் கணக்கின் மீதி அதே பெறுமதியினால் மிகை கணக்கிடப்பட்டிருந்தது.

(v) வலு நிதியத்திலிருந்து ரூபா 47,000,000 தொகையினை அகற்றியிருந்த போதிலும் காணி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவு ரூபா 45,856,451 தொகை ஆகக் காணப்பட்டமையால் மேலதிகமாக அகற்றப்பட்ட ரூபா 1,143,549 தொகை நிதியத்திற்கு திருப்ப செலுத்த வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) ஹம்பாந்தொட சூரிய சக்தி உத்தியானத்திற்காக 2011 ஜுலை 28 திகதி மகவெலி அதிகாரசபையிலிருந்து உரித்தாக்கப்பட்டிருந்த 50 ஏக்கர் காணி மீளாய்வாண்டின் போதும் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது திறைசேரியில் இருந்து அரச மானியம் என கிடைத்திருந்த ரூபா 60,000,000 இற்கான தொகையில் நிகழ்ச்சித் திட்டன் செலவுகளுக்காக ரூபா 42,144,744 தொகை நிதி செயலாற்றுகை கூற்றில் வருமானம் என இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 41,247,949 தொகை மாத்திரம் வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) சாட்டப்பட்டிருக்காத ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடனின் கீழ் செயற்படுத்தப்படும் நீண்டு நிலைக்கக்கூடிய வலுத்துறை 2 ஆம் கட்ட செயற்திட்டம் மற்றும் தூய்மையான வலு மற்றும் வலை செயற்திறனை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 62,560,065 தொகைக்கான கடனை, செலுத்தும் பொறுப்பினை அதிகார சபைக்கு சாட்டியிருக்காத போதிலும் அதிகாரசபையினால் நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் கீழ் நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

## 2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வலு நிதியத்தின் மீதி ரூபா 293,257,237 தொகையாக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு முதலீட்டு மீதி ரூபா 306,628,315 தொகை ஆகக் காணப்பட்டமையால் ரூபா 13,371,078 இற்கான வித்தியாசத்தினை இணக்கஞ் செய்து தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,231,353 தொகை பிணை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 1,136,900 தொகை செலவு வைக்கப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 94,453 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

## 2.4 நிகழக்கூடிய பொறுப்புக்கள்

2008 மார்ச் 21 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை மின்சாரசபை வழமையல்லாத புத்தாக்க மின் வலு அபிவிருத்தி செய்வோருக்கு புதிய கட்டண முறையினை அமுல் நடத்தியிருந்தது. அதன் பிரகாரம் “cost based tariff” முறையின் கீழ் கிரயத்தில் 90 சதவீதம் இலங்கை மின்சார சபை மேற்கொள்வதற்கும் மீதியாகிய 10 சதவீதம் நிலைபெறுதகு அதிகாரசபையினால் மீளளிப்பு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த தீர்மானத்தின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலைபெறுதகு வலு அதிகார சபையினால் இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 897,025,999 இற்கான தொகை நிதிக்கூற்றுக்களில் நிகழத்தகு பொறுப்புக்களின் கீழ் வெளிப்படுத்தியிருந்த போதிலும் அத் தொகையினை தீர்ப்பதற்காக நிகழ்ச்சித் திட்டமொன்று அதிகாரசபையினால் தயாரித்திருக்கவில்லை.

## 2.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) Regional Centre for Lighting நிலையத்திற்காக இலங்கை மின்சார சபையில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 8,033,270 இற்கான தொகை 2017 செப்டம்பர் 27 திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு, பெறவேண்டிய கணக்குகளில் உள்ளடங்கியுள்ள ஒரு வருடத்தை விட மிகைத்த மற்றும் 4 வருடங்களை விட குறைந்த காலப்பகுதி தொடர்பாக பெற வேண்டிய ரூபா 565,688 இற்கான மீதி மற்றும் வெளிசாராருக்கு வழங்கியிருந்த ரூபா 3,480,844 இற்கான முற்பணம் மற்றும் மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் முக்கியமான 4 செயற்பாடு செயற்திட்டங்களுக்காக வழங்கியிருந்த ரூபா 16,397,978 இற்கான முற்பணத் தொகையும் 2016 திசெம்பர் 31 திகதி வரையும் தீர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அட்டுறுச் செலவுகள் என கணக்குகளில் காட்டப்பட்டிருந்த ரூபா 11,645,917 தொகையில் ரூபா 7,269,482 தொகை 5 வருடங்களை விட கூடிய காலம் முதலும் ரூபா 352,704 தொகை 4 வருட காலம் முதலும் முன் கொண்டுவரப்பட்டு காணப்பட்டதுடன் இத்தொகையை தீர்ப்பதற்காக அல்லது அதற்காக வேறு பொருத்தமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு அதிகாரசபை மீளாய்வாண்டு இறுதிவரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.6 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

"சுவிச் - ஏசியா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஐரோப்பிய சங்கத்தினல் கிடைத்திருந்த ரூபா 7,334,354 இற்கான தொகையில் ரூபா 3,135,202 தொகை 1994 ஜுன் 04 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக 2010 மற்றும் 2011 ஆண்டுகளின் போது அதிகாரசபையின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் திறந்தொழில் படி என செலுத்தப்பட்டிருந்தது. சட்டரீதியல்லாத இந்தக் கொடுப்பனவை குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடம் அல்லது அதற்குப் பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்காக அமைச்சு செயலாளரினால் 2012 திசெம்பர் 03 திகதி வழங்கிய கட்டளையினை 2017 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.7 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 2007 இன் 35 ஆம் இலக்க நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டம் | |
| 46(3) ஆம் பிரிவு | வலு நிதியத்தின் குறிக்கோளுக்கு முரணாக நிலைபெறுதகு வலு அதிகாரசபைக்கு அலுவலகக் கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக காணி ஒன்று கொள்வனவு செய்வதற்காக மற்றும் கட்டிடத்திற்கான வரைபு தயாரிப்பதற்காக 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளின் போது கூட்டுத்தொகை ரூபா 50,936,978 தொகை அதிகாரசபையினால் அந்த நிதியத்தின் முதலீடுகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை | |
| II ஆம் அத்தியாயத்தின் 13.7 ஆம் பிரிவு மற்றும் VII ஆம் அத்தியாயத்தின் 12.2.6 ஆம் பிரிவு | நியமனம் வழங்கும் அதிகாரியினால் உரிய முறையில் நியமனங்கள் வழங்கப்படாமல் இருக்கும் போது மற்றும் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் இன்றி 2013 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை பதில் கடமைப் படியாக கூட்டுத்தொகை ரூபா 2,180,886 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதிகாரசபையின் சொத்துக்கள் தொடர்பாக பண்டக் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | கூட்டுத்தொகை ரூபா 1,869,975,742 தொகைக்கான சொத்துக்களுக்கான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று சுற்றறிக்கையின் பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை | ரூபா 14,885,933 தொகை பெறுமதியான கணனிகள், துணைக்கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் 2016 ஆம் ஆண்டிற்கான வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்திருக்கவில்லை. |
| (எ) | 2008 ஜுலை 28 ஆம் திகதிய பீஈடீ/50 ஆம் இலக்கம் மற்றும் 2015 மே 22 திகதிய பீஈடீ/2015/01 இலக்க பொது முயற்சி சுற்றறிக்கை | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி மற்றும் சுற்றறிக்கைக்கு முரணாக உயர்ந்த பதவிகளில் பதில் கடமை மேற்கொள்ளும் 06 உத்தியோகத்தர்களுக்கு 2013 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை எரிபொருள் படிகளாக ரூபா 2,600,000 தொகை மற்றும் 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் 03 பிரிவுத் தலைவர் பதவிகளுக்காக போக்குவரத்து படி என ரூபா 1,650,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. செலுத்தப்பட்டிருந்தது. |

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் நிதி விளைவுகள் ரூபா 6,463,693 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 52,410,929 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் நிதி விளைவுகளில் ரூபா 45,947,236 இற்கான குறைவடைதல் அவதானிக்கபட்டது. முன்னைய ஆண்டின் போது மூலதனப் பெறுவனவுகள் என கிடைத்திருந்த ரூபா 47,000,000 தொகை வருவாய்ப் பெறுவனவுகள் என இனங்காணப்படல் மேற்கூறிய கீழடைதலுக்கு முக்கியமாக காரணமாகியிருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது இடையராத மிகையொன்றினை பெற்றிருந்த போதிலும் 2012 மற்றும் 2013 ஆண்டுகளிடையே 71 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. அதன் பிரகாரம் ஊழியர் ஊதியம், அரசுக்குச் செலுத்த வேண்டிய வரி மற்றும் பெறுமானத் தேய்வினை கணித்த பின்னர் அதிகாரசபையின் பங்களிப்பு 15 சதவீதத்திற்கான அதிகரிப்பு ஒன்றினையும் காணக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும் 2014 ஆண்டின் போது 2013 இற்கு ஒப்பாக 5 சதவீதம் பங்களிப்பில் குறைவடைதல் அவதானிக்கப்பட்டதுடன் 2015 ஆண்டின் போது 2014 ஆண்டிற்கு ஒப்பாக 17 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் பிரகாரம் அதிகாரசபையின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருவனவாகும்.

(i) வலு பாதுகாப்பு தன்மையை முன்னேற்றும் குறிக்கோளுடன் மீள் வலுப்படுத்தக்கூடிய வலு வளங்களை இனங்காணல், மதிப்பீடு செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

(ii) வீட்டுக்குரிய, வியாபார, விவசாயம் சார், போக்குவரத்து, கைத்தொழில் மற்றும் வேறு ஏதேனும் பொருத்தமான துறையொன்றில் பயன்படுத்துவதற்காக வலுவினை பயன்படுத்துவது தொடர்பாக வலு

செயற்திறனை முன்னேற்றல் மற்றும் வலு பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் இனங்காணல் மற்றும் முகாமை செய்தல் மற்றும்

(iii) கொள்கைகளை முன்னேற்றுவதன் மூலம் வலுவினை விநியோகித்தல் தொடர்பாக பாதுகாப்புத் தன்மை, நம்பத்தகு தன்மை மற்றும் கிரய பயன்தரு தன்மையை மேம்படுத்துதல் மற்றும் ஆகக் குறைந்த பொருளாதார கிரயத்திற்கு தனது குறிக்கோள்களை செயற்படுத்துவதற்காக போதியளவு நிதியங்கள் காணப்படுவதனை உறுதி செய்தல்.

மேற்கூறிய குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வலு கணக்காய்வு

------------------------------

இலங்கையில் வலு சேவை வழங்கும் ஒரே அரசு நிறுவனம் என்ற வகையில் நிலைபெறுதகு வலு அதிகாரசபைக்கு வலு வினைத்திறனுள்ள சேவைகள் வழங்கல் (Energy Auditing and Energy efficiency improvement) தொடர்பாக நேரப் பொறுப்பொன்று காணப்பட்டமையினால் அதிகாரசபைக்கு சொந்தமாக பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள் உட்பட தேர்ச்சியுடைய பதவியணியொன்று மற்றும் பாரிய அளவான அளவை உபகரணங்கள் காணப்பட வேண்டுமெனினும் இந்த வலுச் சேவை பிரிவில் கடமையாற்றும் பதவியணியினர் மீளாய்வாண்டின் போது தொழில்நுட்ப அலுவலர் ஒருவர் வரை குறைத்திருத்தல் மற்றும் 2008 மற்றும் 2010 ஆண்டுகளின் போது கொள்வனவு செய்திருந்த அளவை உபகரணங்களை பயன்படுத்தும் காரணத்தினால் சேவை வழங்குதல் குறைவடைந்திருந்தது.

(ஆ) நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான மீதொட்டமுள்ளயில் 3.5 ஏக்கர் காணியில் திண்மக் கழிவுப் பொருளினால் 10 மெகாவொட் மின் உற்பத்தி செய்யும் செயற்திட்டமொன்றிற்காக Western Power தனியார் கம்பனிக்கு 2014 மே 23 ஆம் திகதி அனுமதிப்பத்திரம் (EP – 325530) வழங்கியிருந்த போதிலும், அவ் அனுமதிப்பத்திரத்தின் 02 வருட செல்லுபடியாகும் கால இறுதியில் அதாவது 2016 மே 22 திகதி வரையும் குறிப்பிட்ட செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. திண்மக் கழிவுப் பொருள்களை அகற்றும் பிரச்சினைக்கு பரிகாரம் ஒன்றாக இவ்வாறான செயற்திட்டங்களை துரிதமாக செயற்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட பின்னர் அதிகாரசபையினால் போதியளவு மேற்பார்வை மேற்கொண்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

நிறுவனத்திற்கு அல்லது செயற்திட்டத்தை பிரேரித்தவரினால் கட்டுப்படுத்த முடியாத காரணிகளான மின் உற்பத்தி நிலையம் நிர்மாணிப்பதற்காக திட்டமிட்டிருந்த காணியை பெற்றுக் கொள்ளும் போது குடியிருப்பாளர்களின் எதிர்ப்புக்கள் போன்ற நிலைமைகளை தீர்க்கப்படும் வரை ஆக்கபூர்வமான முன்னேற்றமொன்றினை எதிர்பார்க்க முடியாதென தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

(இ) 2007 இன் 35 ஆம் இலக்க நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 21.1 பிரிவின் பிரகாரம் சூரிய சக்தி உற்பத்தி முறைமையை இறக்குமதி செய்து பொருத்தும் கம்பனிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்தல் மற்றும் அவை தரமானதாகவும் நம்பிக்கை வைக்கக் கூடிய நிலைமையில் செயற்படுகின்றனவா எனவும் பரிசோதனை மேற்கொள்ளல் நிறுவனத்தின் செயற்பாடு ஒன்றாகக் காணப்பட்ட போதிலும் அனுமதிப்பத்திரம் பெற்ற கம்பனிகளினால் இறக்குமதி செய்து பொறுத்தியிருந்த சூரிய சக்தி உற்பத்தி செய்யும் முறைமைகளின் தரத்தின் தன்மை மற்றும் சேவை வழங்குதல் தொடர்பாக போதியளவு பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 10 காற்றுமாணி கோபுரங்கள் நிர்மாணிப்பதற்காக தனியார் கம்பனி ஒன்றுடன் 2008 ஜுலை 14 திகதி உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்துடன் அந்நிர்மாண வேலைகள் ஒரு வருடத்துள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. அவ்வாறாயினும், 2012 ஆண்டளவில் நிர்மாண வேலை பூர்த்தி செய்திருந்த 09 காற்றுமாணி கோபுரங்களில் தரவுகளை சேகரிக்கும் போது கோபுரங்களில் உபகரணங்கள் செயற்படாமையால் தரவுகளை சேகரிப்பதற்காக குறிப்பிட்ட நிலையங்களுக்கு செல்லாமையால் சில கோபுரங்களில் இடையறாது தரவுகள் பெற்றிருக்கவில்லை. மேலும் இந்த தரவுகளைப் பயன்படுத்தி காற்று வலு வள வரைபடங்கள் மற்றும் வரைபுகள் தயாரித்தல் முடிவாக்கியிருக்கவில்லை.

(உ) 2011 ஆண்டின் போது வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணமாக ரூபா 416,875 தொகை கொடுப்பனவு செய்து உபகரண கிரயம் மற்றும் சீரிடுதல் கட்டணமாக கூட்டுத்தொகை ரூபா 1,410,250 தொகை செலவிடப்பட்டிருந்த ஒரு காற்றுமாணி கோபுரத்தின் நிர்மாணவேலை இடை நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2017 செப்தெம்பர் 30 திகதி வரை அந்த நிர்மாண வேலையை பூர்த்தி செய்வற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ஆறு வருடங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்திருந்த உபகரணங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படல் மற்றும் சீரிடுதல் கட்டணத்தை திருப்பி அறவீடு செய்தல் தொடர்பாக கணக்காய்வில் சிக்கல் நிலையிலுள்ளது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்திற்காக தலைமை அலுவலகம் ஒன்று நிர்மாணிப்பதற்காக 30 வருட குத்தகை அடிப்படையில் 2015 ஜூன் 22 திகதி ரூபா 45,856,451 தொகை செலவிடப்பட்டு நகர அபிவிருத்தி அதிகாரசபையில் இருந்து காணி ஒன்று பெற்றிருந்தது. சட்ட ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளாமல் குத்தகை உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் 2 வருடங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு இயலாத போது குத்தகை ஆதனத்தின் உரிமை குத்தகையாளருக்கு கிடைக்கும் என நிபந்தனை ஒன்று உட்படுத்தப்பட்டிருந்தது. எனினும் 2017 செப்தெம்பர் 30 திகதி அளவில் 2 வருடங்ளை மிகைத்திருந்த போதிலும் கட்டிடத்தின் வரைபுகள் தயாரிக்கும் விடயம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 25 திகதி ஓய்வு பெற்றிருந்த சிரேஷ்ட முகாமையாளர் ஒருவருக்கு பணிக்கொடையாக ரூபா 782,260 தொகை செலுத்தியிருந்ததுடன் அதற்காக 2016 ஏப்ரல் 25 திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்குப் புறம்பாக சீராக்கல் படியும் கூட்டிக் கணித்திருந்தமையால் ரூபா 94,990 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) நிலைபெறுதகு வலு அதிகாரசபையினால் ஆரம்பம் முதல் சம்பள மாற்றங்கள் மேற்கொள்ளும் போது ஏற்பட்டிருந்த தவறுகள் தொடர்பாக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை 2012 பெப்ரவரி 03 திகதி அதிகாரசபைக்கு சமர்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் குறிப்பிடப்பட்டிருந்த விதப்புரைகள் நிறுவனத்தினால் இது வரை செயற்படுத்தியிருக்கவில்லை. இவ் அறிக்கையின் பிரகாரம் 2007 அக்தோபர் 01 திகதி முதல் 2011 செப்தெம்பர் 30 திகதி வரை சுற்றறிக்கைகளுக்கு புறம்பாக மிகையாகச் செலுத்தப்பட்ட ரூபா 2,171,760 இற்கான சம்பளங்கள் மற்றும் படிகளை குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்யும் படி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் அமைச்சின் செயலாளரினால் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக அதிகாரசபையினால் நடவடிக்கை ஒன்று எடுத்திருக்கவில்லை.

(ஈ) பிரோடோடயிப் மூன்று மின் வாகனங்களை திருத்தம் செய்தல்

2007 செப்தெம்பர் 28 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் 18 மாதங்களுக்குள் மூன்று பிரோடோடயிப் வாகனங்களை திருத்துவதற்காக 2007 ஆண்டின் போது வெளிசாராருக்கு

ரூபா 7,956,800 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 செப்தெம்பர் 30 திகதி வரை ஒரு வாகனத்தையேனும் திருத்துவதற்காக திருத்தம் செய்யும் நிறுவனத்திற்கு முடியாதிருந்ததுடன், 8 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 03 வாகனங்களையும் திருத்துவதற்கு அல்லது செலுத்தியிருந்த பணத்தை திரும்ப பெறுவதற்காக சட்டரீதியாக உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) "சிவிச் - ஏசியா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிடைத்து அவற்றில் மீதியாகிய காணப்பட்ட ரூபா 4,548,176 தொகை, 2011 ஆம் ஆண்டு முதல் மக்கள் வங்கியில் நடைமுறை கணக்கு ஒன்றிலும், வலு நிதியத்திற்கு உரிய ரூபா 150,000,000 தொகையை விட மிகையான தொகையொன்று பல வருட காலம் முதல் அரச வங்கி ஒன்றின் சேமிப்புக் கணக்குகளில் ஒன்றிலும் எதுவித முதலீட்டு விடயங்களுக்கும் பயன்படுத்தப்படாமல் வைப்புச் செய்யப்பட்டு காணப்பட்டது.

(ஆ) அதிகாரசபைக்குச் சொந்தமான கப் வண்டியொன்று சுமார் 2 ½ வருட காலம் முதல் விளைவற்று காணப்பட்டதுடன் இந்த வாகனத்தை திருத்துவதற்காக அல்லது அகற்றுவதற்காக 2017 செப்தெம்பர் 30 திகதி வரையும் உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

## 4.4 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜூன் 02 திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரசபைக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அதிகாரசபைக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 136 தொகையாக இருந்ததுடன் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளவாறான பதவியணியினர் 103 ஆகும். அதன் பிரகாரம் 3 பணிப்பாளர் பதவிகள், 4 பிரிவுத் தலைவர் பதவிகள் மற்றும் 12 முகாமைத்துவ பதவிகள் உட்பட 33 பதவியணி வெற்றிடங்கள் காணப்பட்டது.

2007 ஆண்டு முதல் இது வகை அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை பயன்படுத்தி அதில் சிறு மாற்றங்கள் மேற்கொண்டு திருத்திய அமைப்பு கட்டமைப்பொன்று தயாரித்து முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்புவதற்காக மின்சக்தி மற்றும் மீள்புத்தாக்க வலு அமைச்சிற்கு அனுப்பியிருப்பதாக தலைவர் அறிவித்திருந்தார்.

(இ) மேற்கூறியவாறு வெற்றிடமாகக் காணப்பட்ட மூன்று பணிப்பாளர்கள் மற்றும் பிரிவுத் தலைவர்கள் 4 இல் 03 பேருக்காக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் 11 ஆம் அத்தியாயம் 13.1(ஆ) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்குப் புறம்பாக நிலையான பதவியின் நியமன அதிகாரி ஆகிய பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி அதிகாரசபையின் தலைவரினால் பதில் கடமையாற்றும் பதவிக்காக நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.5 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த வளங்கள்

பிரிவுத் தலைவர் (தொழில்நுட்ப மேம்படுத்தல்) மற்றும் பதில் கடமை பணிப்பாளர் (வியூகம்) பதவியாற்றும் உத்தியோகத்தர் 2016 பெப்ரவரி 15 திகதி மின்சக்தி மற்றும் மீள் புத்தாக்க வலு அமைச்சின் பணிப்பாளர் (தொழில்நுட்ப) பதவிக்கு 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு புறம்பாக அமைச்சரின் அங்கீகாரம் இன்றி ஒரு வருட காலத்திற்கான முழு கால அடிப்படையில் விடுவிக்கப்பட்டு கணக்காய்வுத் திகதியாகிய 2017 மே வரை அவருக்கு அதிகாரசபையினால் ரூபா 1,404,828 இற்கான சம்பளம் வழங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்பித்தல்

2007 அக்டோபர் 02 திகதிய பீஈடீ/45 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்குகளை சமர்பித்தலில் முகாமைத்துவத்தின் பொறுப்பு தொடர்பான கூற்று நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தியிருக்கவில்லை.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 ஜுன் 02 திகதி பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

## 5.3 செயற்திட்ட நடவடிக்கைத் திட்டம்

வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டம், நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் போது ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 280,421,124 தொகையில் ரூபா 111,236,670 தொகை எனப்படும் சுமார் 40 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயல்நடவடிக்கை திட்டத்தில் காணப்பட்ட செயற்பாடுகள் செயற்திறமையுடன் மேற்கொள்ளப்பட்டு எதிர்பார்த்த குறிக்கோள்கள் போதியளவானதாக நிறைவேற்றுவதற்காக அதிகாரசபைக்கு இயலாதுள்ளது.

## 5.4 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது தலைமை உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இன்மை காரணமாக கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் போதியளவு கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதீட்டின் மூலம் மூலதனச் செலவுகளுக்காக ரூபா 6,000,000 தொகைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 2,549,041 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மூலதன ஏற்பாடுகளில் ரூபா 3,450,959 தொகை அதாவது 58 சதவீதம் குறிப்பிட்ட விடயங்களுக்காகப் பயன்படுத்தியிருக்கவில்லை. பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் மீதியாகவுள்ள ஏற்பாடுகளையும் பயன்படுத்தி கட்டிடங்கள் மற்றும் காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 4,238,165 இற்கான செலவொன்று என மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவுகள் தொடர்பாக பாதீட்டுச் செலவுகளுடன் உள்ளவாறான செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 9 செலவு விடயங்கள் தொடர்பாக 17 சதவீதம் முதல் 161 வரையான கணிசமான அளவு முரண் ஒன்று அவதானிக்கப்பட்டமையானது பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகார சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கணக்கீட்டு நியமங்களை கடைபிடிக்காமை, விடுபாடுகள், இணக்கமின்மைகள் காணப்படல்.<br>(ii) பல்வேறு செலவுத் தலைப்புக்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு இயலுமான முறையில் கணனி மயப்படுத்திய பேரேடுகளை அறிமுகப்படுத்தாமை. |
| (ஆ) நிதிக் கட்டுப்பாடு | விளைவற்ற காசு மீதிகள் காணப்படல். |
| (இ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறவேண்டிய தொகைகளைத் தாமதமின்றி சேகரித்துக் கொள்ளாமை. |
| (ஈ) மனித வள முகாமைத்துவம் | அதிகாரசபையின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக பங்களிப்பு மற்றும் அளவின் பிரகாரம் மனித வளங்கள் செயற்திறனுடன் முகாமைத்துவப் படுத்தியிருக்காமை. |
| (உ) செயற்திட்டங்களை அமுல் நடத்துதல் | செயற்திட்டங்களின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக செயற்திட்ட விடயங்களை திட்டமிட்டவாறு செயற்திறனுடனும் தாமதமின்றியும் செயற்படுத்தாமை. |
| (ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு | தத்துருவமாக தயாரிக்கப்பட்ட நிதிக் |

கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்காமை.

(எ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(i) ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி கணித்தல், ஆவணப்படுத்தல், முறைப்பிரகாரம் நடைபெறாமை மற்றும் அவை அதிகார சபையின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக செயற்திறனுடன் பயன்படுத்தாமை.

(ii) பழைய அளவை உபகரணங்களை புதிதாக்குவதற்கு அல்லது பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளவற்றை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்காமை.

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் 2016 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கொடுக்கல்வாங்கல்கள் பற்றி கணக்காய்வாளர் அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்காய்வு அறிக்கை தொடர்பான பதில்கள்**

2 நிதிக் கூற்றுக்கள்

2.2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ)

I. இந்தக் காணி 2017 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் ஒரு குத்தகைக் காணியாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் காணிக்கான தேய்மானம் கணிப்பிடப்பட்டுள்ளது.

II. குறித்த காணியை குத்தகைக்குப் பெறும் பொருட்டு சக்தி நிதியத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூ. 47,000,000.00 தொகை 2015 ஆம் ஆண்டில் மிகை வருமானமாக கணக்குகளில் பதியப்பட்டுள்ளது. இதன் விளைவாக அந்த ஆண்டின் பெறுமானம் ரூ. 47,000,000.00 தொகையால் மிகைத்துக் காட்டப்பட்டுள்ளது. அதனால் இந்தத் தவறு ஏற்பட்டுள்ளது. இதனை எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்குதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

III. குறித்த காணி தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்ட செலவுப் பட்டியலில் VAT பெறுமானமாக ரூ. 5,020,368.00 பதியப்பட்டுள்ளது. இது கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகையால், நிலுவை குறைவாகக் காட்டப்படவில்லை என்பது எமது அபிப்பிராயமாகும்.

IV. இந்த விடயம் சீராக்கப்பட்டுள்ளது.

V. எதிர்வருகின்ற ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மதிப்பீட்டுப் பெறுமானம் சரியான முறையில் 2017 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் உள்ளடக்கப்பட்டு மேலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ)

| | |
|---|---|
| மொத்த அரசாங்க மானியச் செலவு - 2016 | 60,000,000.00 |
| நிறைவு பெறாத பணிகள் (WIP) | 4,341,226.00 |
| கட்புலனாகாத சொத்துக்களின் கொள்வனவு | 9,242,483.00 |
| நிலையான சொத்துக்களின் கொள்வனவு | 5,168,342.00 |
| மொத்தம் | 41,247,949.00 |

ஆகையால் குறித்த அந்த செயலாற்றுகைக் கூற்றில் வருமானம் எனக் கண்டறியப்பட்ட ரூ. 41,247,949.00 சரி என்பது எமது அபிப்பிராயமாகும்.

ஈ) தவணைக் கட்டணத்தில் கடனைச் செலுத்தும் பொறுப்பு இந்த அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், எமது அதிகார சபைக்கு உரிய கட்டங்களில் கட்டுப்பாட்டு அதிகாரம் (Controlling Power) வழங்கப்பட்டுள்ளதால் அது நடைமுறையால்லாத

சொத்தாகவும் அதே நேரம் நடைமுறையல்லாத பொறுப்பாகவும் இனங்காணப்பட்டுள்ளது.

2.3. விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

(அ) 2017 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சக்தி நிதியத்தின் நிதி நிலுவை சரியான முறையில் கணக்கீடு செய்யப்பட்டு குறித்த அந்த வித்தியாசத்திற்கான காரணம் பற்றி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

(ஆ) திறைசேரி உண்டியல்களிலும் நிலையான வைப்புக்களிலும் பெறுமானம் சரியான முறையில் கணக்கீடு செய்யப்பட்டு 2017 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.4 இடைநேர் பொறுப்புக்கள்

இந்த ரூ.897,025,999 தொகையைத் தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நிதியை நாம் திறைசேரியிலிருந்து கோரியிருந்தோம். எனினும் அந்த நிதியை திரைசேரியினால் வழங்க முடியாது என 21/12/2016 ஆம் திகதிய BD/ID119/1/14/2016 கடிதத்தின் மூலம் எமக்கு தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம், மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் ஊடாக அறிவித்துள்ளது.

2.5 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) இந்த ரூ.8,033,270/= ஐ இலங்கை மின்சார சபையினால் எமது அதிகார சபைக்கு மீளளிப்புச் செய்யுமாறு குறிப்பிட்டு 2017/09/09 ஆம் திகதி ஒரு கடிதம் இலங்கை மின்சார சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும், இலங்கை மின்சார சபை அந்த நிலுவைத் தொகையை இன்னும் மீளளிப்புச் செய்யவில்லை. இதற்கு முன்னைய ஆண்டுகளில் இவ்வாறு பல கடிதங்கள் திறைசேரியினாலும் மற்றும் அமைச்சினாலும் விநியோகிக்கப்பட்டுள்ளன. எனினும், இலங்கை மின்சார சபை அந்தக் கடிதங்களின் பிரகாரம் செயற்படவில்லை. இது தொடர்பாக கௌரவ அமைச்சருக்கு அறியப்படுத்தி, அவரினூடாக இதனைத் தீர்த்துக் கொள்வதற்கு நேரிடும்.

ஆ) இந்தக் கிடைக்க வேண்டிய நிலுவைகளில் அதிகமானவை பிற நிறுவனங்களிலிருந்து சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக செய்த மீளளிக்கக்கூடிய (Refundable) வைப்புகளாகும். ஆகையால், அத்தகைய சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் வரை அந்த மீளளிப்புத் தொகையை பெற முடியாது. இது பற்றி எமது காலப் பகுப்பாய்வில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எஞ்சிய நிலுவைகளில் அதிகமானவை சக்தி தொடர்பான கல்வி சார் கருத் திட்டங்களுக்காக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்களாகும். அத்தகைய சேவைகளை அவை எமது அதிகார சபைக்கு வழங்கியிருந்தாலும், அத்தகைய சேவைகள் தொடர்பான செலவுகளைக் குறிப்பிட்டு, அவற்றை ஒரு சில மாகாண சபைகள் தீர்ப்பனவு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. அயினும், 2016/12/31 ஆம் திகதிற்கான நிலுவையிலிருந்து ரூ.20,789,010/= தொகை ஏற்கெனவே தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது.

இ) 2016/12/31 ஆம் திகதியிலிருந்த அட்டுறு செலவு ரூ.11.6 மில்லியன் தற்பொழுது ரூ.5.9 மில்லியன் வரை குறைவடைந்துள்ளது. இதில் ரூ. 1.36 மில்லியன் செலுத்தப்பட்டிருப்பது 2012

முதல் 2015 ஆம் ஆண்டு வரை கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய அட்டுறு செலவாகும் (இதனை செலுத்தித் தீர்ப்பதற்கான உரிய செலவுப் பட்டியல் எமது நிறுவனத்திற்கு கிடைத்திருப்பது 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமாகும்)

2.6 போதிய அதிகாரத்தினால் உறுதிசெய்யப்படாதகொடுக்கல்வாங்கல்கள்

இந்த சுவிச் ஏசியா நிகழ்ச்சித் திட்ட நிதிகளிலிருந்து ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த நிதியை மீளறவிடுமாறு அமைச்சிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட ஒரு கடிதம் எமது அதிகார சபையின் நிதிப் பிரிவுக்குக் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும், இந்தக் கொடுப்பனவை நியாயப் படுத்தி, திறைசேரியின் மூலம் அனுமதித்துக் கொள்ளும் நிமித்தம் நாம் 2016/11/29 ஆம் திகதி ஒரு கடிதத்தை DMS திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளோம். 2017/03/08 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் ஏற்கெனவே எமது மேற்குறித்த கோரல் அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2016/06/21 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் பொதுத் திறைசேரி, தேசிய சம்பளங்கள், பதவியணி ஆணைக்குழுவிடமிருந்து அபிப்பிராயத்தை வினவியுள்ளதாக அறிவித்துள்ளது.

2.7 சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் ஒவ்வாமை

(அ) இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டம்

சர்வதேச சக்தி முகவர்நிலையம் சக்தி வினைத்திறனை மின்சக்தியைப் பாதுகாக்கும் ஒரு நிறுவனத்தின் உயிர் நாடி என வரைவிலக்கணம் செய்துள்ளது. அந்த எண்ணக்கருவை நாட்டினுள் வியாபிக்க செய்வதும் மற்றும் மின்சக்தியைப் பாவிக்கும் சகல துறைகளிலும் அதன் நிமித்தம் ஒரு முயற்சியை ஏற்படுத்துவதும் எமது அதிகார சபைக்கு இருக்கின்ற நான்கு பொறுப்புக்களில் ஒன்றாகும். இந்தப் பொறுப்பை நிறைவேற்றும் போது, தலையீடு சார்ந்த பல நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்ற அதிகார சபை, அவற்றினூடாக அதிகளவான அடிப்படை நன்மைகளை முதலில் மின்சக்தியைப் பாவிக்கும் தரப்புகளுக்கும், இரண்டாவதாக ஒட்டுமொத்தப் பொருளாதாரத்திற்கும் பெற்றுக் கொடுத்துள்ளது. இந்த நடவடிக்கைகளுக்கு மத்தியில் முன்மாதிரிகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பன விஷேட இடத்தை வகிக்கின்றன.

தேசிய மின்சக்திப் பாவனையில் ஏறக்குறைய 40% மின்சாரம் நுகரப் படுவது கட்டிடத் துறையிலாகும். ஆகையால், அந்தத் துறையில் சக்தி வினைத் திறனில் எமது அதிகார சபை அதிக கவனம் செலுத்தியுள்ளது. இந்தத் துறையில் மின்சக்தி வினைத் திறன் பாவனை மிகவும் ஆரம்ப மட்டத்திலுள்ளதாகவும் மற்றும் அது பெருமளவான சக்தி வீணாதலுக்கு வழிவகுத்துள்ளதாகவும் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்விலிருந்து தெரிய வந்துள்ளது. குறிப்பாக ஒரு சில காலத்திற்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட குளிகூட்டக் கூடிய கட்டிடங்கள் பெருமளவு மின்சார வீணாதலுக்கு விளைவாக அமைந்து, அதனால் வருடாந்தம் விஷேட மின்சக்திப் பாவனை 180k Wh/m2 என்ற அளவை பார்க்கிலும் விஞ்சிச் செல்லும் ஒரு போக்கு காணப்படுகின்றது. மேலும், நவீனத் தொழில் நுட்களின் பாவனையினால் இந்தப் பெறுமானத்தை 60 kWh/m2 என்ற தற்பொழுது காணப்படும் அளவில் 1/3 மடங்குக் குறைக்க முடியும் என அதிகார சபை மதிப்பிட்டுள்ளது. எனினும், இத்தகைய முன்மாதிரி வாய்ந்த கட்டிடங்கள் நாட்டில் நிர்மாணிக்கப்படாததால் நவீன கட்டிட நிர்மாணமும் நிகழ்வது மேலும் மின்சக்தி வீணாகும் விதத்திலாகும் எனவும் தெரிய வந்தள்ளது. இத்தயை நிலையை மாற்றியமைப்பதற்கு தேவையான வழிகாட்டல்களை

வழங்குவதற்கான ஒழுங்குறுத்தும் ஒரு கருத் திட்டத்தின் தேவையை அன்றிலிருந்து உணர்ந்த அதிகார சபை நிலைபெறுதகு வலு பற்றிய ஒரு சிறந்த கேந்திர நிலையத்தை (Center of Excellence in Sustainable Energy) தாபிப்பதற்கு தீர்மானித்தது. இந்தக் கேந்திர நிலையம் அதிகார சபையின் செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்படுதல், சக்தியை நுகர்கரும் ஏனைய தரப்புகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுதல், அது தலைநகரத்தை அண்மித்த பிரதேசத்தில் தாபிக்கப் படுதல் வேண்டும் என அதிகார சபை தீர்மானித்தது.

இதன் பிரகாரம் நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியின் பலனாக குறித்த காணித் துண்டை, பாராளுமன்றத்தை அண்மித்துள்ள காட்டுப் பகுதியிலிருந்து ஒதுக்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கையை எடுத்தது. இந்தக் காணி துண்டு அதிக பெறுமானத்தில் ஏனைய தரப்புகளினால் ஒதுக்கப்பட்டு, ஏதாவது தாமத்தினால் அந்தத் தரப்பு இழந்த, நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான ஒரு காணித் துண்டாகும். இந்த விடயத்தைக் கருத்திற் கொண்டு, மிகவும் விரைவில் அதனை அதிகார சபையின் நோக்கத்திற்காக பயன்படுத்த அதிகார சபை முடிவு செய்தது. இந்தக் காணித் துண்டுக்கு செலுத்த வேண்டிய நிதியை வழமை போல் திரட்டு நிதியத்திலிருந்து ஒதுக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தால், நகர அபிவிருத்தி அதிகார சபை எமக்கு வழங்கிய இந்த சொற்ப கால அவகாசத்திலிருந்து பயன் பெற முடியாது என்றிருந்ததால், மீளச்செலுத்தும் அடிப்படையில் இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியத்திலிருந்து ரூ: 50,936,978.00 செலுத்தப்பட்டு, இந்தக் காணித் துண்டு, மேற்குறித்த நோக்கத்தின் நிமித்தம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

மேலும், இத்தகைய முன்மாதிரியான நிர்மாணங்களை இலங்கையின் கட்டிடத் துறைக்கு முன்மாதிரியாகக் கொள்வதன் மூலம், அதிகார சபையின் குறிக்கோள்கள் முதலிலும், இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியத்தின் அபிலாஷைகள் குறிப்பாகவும் நிறைவேறும் எனும் விடயம் அவதானிக்கப்படுகின்றது. இத்தகைய சக்தி வினைத் திறன் வாய்ந்த கட்டிடங்களை நிர்மாணிப்பதனூடாக அண்டொன்றுக்கு 418 ஜி.வொ.ம. அளவான சக்தியை (தற்போதைய மின்னுற்பத்திச் செலவின் பிரகாரம் சுமார் ரூ. 8,360 மில்லியன் அளவில்) ஆகக்குறைந்தது சேமிக்க முடியும் என்பதும், அத்தகைய சக்திப் பாதுகாப்பு மூலங்களை ஈடுபடுத்தும் நிமித்தம் இத்தகைய முதலீடு அவசியம் என்பதும் அதிகார சபையின் அபிப்பிராயமாகும்.

(அ) தாபனவிதிக் கோவை

இந்த அதிகார சபை 2007 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டு, இயங்கி வந்திருப்பது அதன் வாரிசு நிறுவனமாகிய சக்திப் பாதுகாப்பு நிதிய ஊழியர்களின் சேவையைப் பெற்றாகும். அதிகார சபையின் முதல் பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தில் எதிர்வரும் 3 ஆண்டுகளுக்கான சபையின் செயற்பாடுகள் தொடர்பான ஒரு கூட்டிணைந்த திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு, அதற்கு அனுமதி பெறப்பட்டது. ஆயினும், அதிகார சபையின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு அவசியமான மனித வளங்களை அதிகார சபைக்கு ஈர்த்துக் கொள்ளக் கூடிய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு உரிய பிரிவுகளிலிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. கடந்த தசாப்தம் முழுதிலும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், இந்த அதிகார சபை இயங்குவது சக்திப் பாதுகாப்பு நிதியம் அதிகார சபையாக பரிவர்த்தனை செய்யப் பட்ட நேரத்தில் அதற்கு வழங்கப்பட்டுள்ள ஊழியர்கள் உள்ளீர்த்தல் திட்டத்திற்கு இணங்கவாகும். இந்தத்

திட்டத்தினாலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் இற்றைப்படுத்தப்பட்டு, அனுமதித்த பதவிப் பெயர்களைப் பயன்படுத்தியும் அதே நேரம் ஊழியர்படையை ஈடுபடுத்தியும், அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விஷேடமான பொறுப்புகள் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான மனித வளங்களை ஈர்த்துக் கொள்ள முடியவில்லை. எனவே, இந்த விடயத்தை கருத்திற் கொண்டு, அதிகார சபை அதன் சேவையில் ஏற்கெனவே ஈடுபடுத்தப்பட்டுள்ள அனுபவம் வாய்ந்த ஊழியர்களுக்கு மேலதிக பொறுப்புக்களை ஒப்படைப்பதற்கு தீர்மானித்தது. பதில் கடமை அடிப்படையில் இந்த நியமனங்கள் செய்யப்பட்டிருப்பது அதிகார சபைக்கு உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களைப் பிரயோகித்து அதன் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு தேவையான ஏனைய மனித வளங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு வேலைத் திட்டம் அதிகார சபையின் வசமில்லை என்பதாலாகும். எவ்வாறாயினும், ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம், உரிய ஆட்சேர்ப்பு நடைமுறையை அனுமதித்துக் கொள்வதற்கான ஒழுங்குகள் நிரல் அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த விடயம் நிறைவு பெற்ற உடன் இந்த நியமனங்களை முறைப்படுத்த முடியும்.

மேலும், வேறு மாற்றுவழி இல்லாததால் எடுக்கப்பட்ட இந்த தீர்மானம் அதிகார சபைக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்பது குறிப்பிட வேண்டிய விடயமாகும். அந்தப் பதவிளுக்கு தகைமைகளை அவர்கள் பூர்த்தி செய்திருந்தமை, அனுபம் பெற்றிருந்தமை, மற்றும் உண்மையில் அவர்கள் அந்த பதவிகளுக்கு பதவியுயர்வுகளை பெறும் உத்தியோகத்தர்களுக்கு ஆட்சேர்ப்பு திட்டத்தை உரிய காலத்திற்கு அனுமதித்துக் கொடுத்தமை அவர்கள் உரிய பதவிகளில் பதில் கடமை புரிவதற்கான காரணங்களாகும். இவர்கள் அவர்களின் பதில் கடமை காலத்தில் கடமைகளை சரியாக நிறைவேற்றியுள்ளனர். அவர்கள், நிஜமான பதவிகளில் அமர்த்தப்பட்டும் கூட மேலதிக கடமைகளை நிறைவேற்றியுள்ளனர். விடயம் அவ்வாறிருப்பதால், இவர்களினால் நிறைவேற்றிய மேலதிக கடமைகளுக்காக வழங்கப்பட்டுள்ள இந்த வேலை ஸ்தலக் கொடுப்பனவுகள் முதலியவற்றை மீளறவிடுவது எந்த விதத்திலும் நியாயமில்லை என்பதுடன் அவ்வாறு மீளறவிடுவதற்கு நிருவாக ரீதியில் அவகாசமுமில்லை.

(இ) நிதிப் பிரமாணக் குறிப்புகள்

கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களப் பிரதிநிதி வழங்கிய அறிவுரைகளின் பிரகாரமும் முகாமைத்துவ சபையின் அதிமதியுடனும் தற்பொழுது நிலையான சொத்துக்கள் மீள்விலைமதிப்பீடு (Re valuation) செய்யப்பட்டு வருகின்றன. இது அதிகளவில் சிரமத்தையும் மற்றும் காலத்தையும் நுகரும் விடயம் என்பதால், இந்தப் பொருட்களையும் சொத்துக்களையும் ஒரே தடவையில் விலைமதிப்பீடு செய்யுமாறு AMC சிபாரிசு செய்தது. எனினும், அமைச்சினது அறிவுரைகளின் பிரகாரம் தனியான ஒரு குழு நியமிக்கப்பட்டு, பொருட்கள் கணக்கெடுப்பு பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ஈ) நிலையான சொத்துக்கள் தொடர்பான ஒரு பட்டியல் ஆரம்பத்தில் இருந்து பேணிச் செல்லப்பட்டுள்ளது. இந்தப் பட்டியல் 2012 ஆம் ஆண்டில் இற்றைப்படுத்தப்பட்டது. இது 2015 ஆம் ஆண்டில் மீண்டும் இற்றைப்படுத்தப்பட்டது.

(உ) கணனிகள், துணைப் பாகங்கள் மற்றும் மென்பாகங்கள் என்பன அடங்கிய நிலையான சொத்துக்களின் ஒரு பட்டியலைத் தயாரிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே தயாரிக்கும் அந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ஊ) ஏற்கெனவே 2016 ஆம் ஆண்டின் ஒரு நகல் அறிக்கை கணக்காய்வாளர் அதிபதிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(எ) பதில் கடமைகள் கவனிக்கப்படும் பதவிகள் பற்றிய மேற்குறித்த விடயங்களுக்கு மேலதிகமாக இந்த உத்தியோகத்தர்களுக்கு என வழங்கப்பட்டுள்ள ஏனைய வசதிகளும் கூட அந்தப் பதவிகளுக்குரிய வசதிகளாகும். அந்தப் பதவிகளுக்குரிய பொறுப்புக்கள் நிறைவேற்றப் படுகின்ற போது அவற்றுக்கு அவசியமான வசதிகளை செய்து வழங்க அதிகார சபை கடமைப்பட்டுள்ளது. ஆகையால், இந்த மேலதிக செலவு அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படுவது எந்த விதத்திலும் நியாயமில்லை என்பதுடன் அவ்வாறு அறவிடுவதற்கு நிருவாக ரீதியில் அவகசாமுமில்லை.

4. இயக்கச் செயற்பாடு சார்ந்த மீளாய்வு

4.1 செயலாற்றுகை

(அ) சக்திக் கணக்காய்வு

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை ஆரம்பிக்கப்பட்டிருந்த நேரத்தில் சக்திக் கணக்காய்வு விடயங்கள் மேற்கொள்ளப்பட்டாலும். பின்னர் அத்தகைய சக்திக் கணக்காய்வு விடயங்களுடன் நேரடியாக சம்பந்தப்படாமல், இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள சக்தி சார்ந்த சேவைகளை விநியோகிக்கின்ற நிறுவனங்களினூடாக அத்தகைய சக்திக் கணக்காய்வு விடயங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சக்திக் கணக்காய்வின் நிமித்தம் நிதியை செலவு செய்ய இயலாத அரச நிறுவனங்களுக்கு மாத்திரம் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சயையின் மூலம் சக்திக் கணக்காய்வுச் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன.

மேலும், 2015 ஆம் ஆண்டின் வருமானமாக குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 10,198,009 தொகையில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்திப் பிரிவு வருமானம் உள்ளடங்கியிருப்பதால், சக்திக் கணக்காய்வு மற்றும் அளவீட்டு சாதன உபகரணங்கள் வாடகைக்குப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் 2015 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட வருமானம் ரூ. 1,593,608 தொகை என சீர்செய்யப் படுதல் வேண்டும்.

(ஆ) திண்மக் கழிவுகளிலிருந்து மின்சக்தியை உற்பத்தி செய்யும் நிமித்தம் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை அனுமதிப் பத்திரங்களை விநியோகித்துள்ளது. அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டதன் பின்னர், உரிய தரப்புகளிடம் முன்னேற்றம் பற்றி வினவப்பட்டது. எனினும், போதிய முன்னேற்றம் குறித்த அந்த தரப்புகளினால் எமக்கு அறிக்கையிடப்பட முடியாமல் போயிருந்தமைக்கு காரணம் இந்தத் திண்மக் கழிவுகளின் முகாமை தொடர்பில் எமது அதிகார சபையின் அல்லது கருத் திட்டத்தை முன்வைக்கும் தரப்பின் கட்டுப்பாட்டிற்கு அப்பால்பட்ட சக்தியாகும். பிரதானமாக அந்த கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி இயக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளை நிர்மாணிப்பதற்கான

காணியை எந்த ஒரு நிறுவனத்தினாலும் பெற்றுக் கொள்ள முடியாமைக்கு காரணம் குறித்த பிரதேசத்தில் வசிக்கின்ற மக்களின் கடுமையான எதிர்ப்பாகும். மேலும், இந்தக் கருத் திட்டங்களுக்கு தொழில் நுட்பங்களை அல்லது முதலீட்டு வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாது போனமைக்கும் இதுவே காரணமாகும். இந்தத் துறையில் ஏற்பட்டுள்ள சிக்கல் வாய்ந்த பிரச்சனைக்கு தீர்வுகாணப்படும் வரை வெற்றிகரமாக ஒரு முன்னேற்ற நிலையை எதிர்பார்க்க முடியாது.

(இ) ஏற்கெனவே சூரியபள சங்கிராமய நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப் பட்டு வருகின்றது. அதனுடன் தொடர்புடைய சகல வகை நியமங்களும் (Standard) தயாரிக்கப்பட்டு, அந்த நியமங்களுக்கு அமைய சூரியபள சங்கிராமய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சூரிய சக்தி முறைமைக்கான உபகரணங்களை இறக்குமதி செய்யும் போது, சிறந்த உரிய தரத்தில் காணப்படும் அத்தகைய உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூரையில் நிறுவப்படும் இந்த சூரிய சக்தி முறைமைகள் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை சட்டத்தின் 16, 18 அல்லது 21 ஆம் ஏற்பாடுகளின் எந்த ஒரு பிரிவுக்கும் உட்படாது. இவை வீட்டுக் கூரைகளில் பொருத்தக் கூடிய துணைப் பாகங்களாகும்.

எனினும், இந்த விடயம் பற்றி வினவப்படுவது மேற்குறித்த பிரிவுகளின் பிரகாரம் எனில், அவற்றுக்கு ஏற்புடைய அதிகார சபைச் சட்டத்தின் நிபந்தனைகளுக்கு இணங்க, நில மட்டத்தில் பொருத்தக் கூடிய பெரும் அளவான சூரிய சக்திக் கருத் திட்டங்களின் நிமித்தம் சக்தி அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்பது பதிலாகும். மேலும், இந்தக் கருத் திட்டங்களின் நிமித்தம் கருத் திட்ட முதலீட்டுத் தரப்புகள் அதிகளவில் முதலீடு செய்வதால், அத்தகைய தரப்புகளில் எந்த ஒரு தரப்பும் நிதிகளை வீணாக்குவதற்கு விரும்புவதில்லை. ஆகையால், அந்தத் தரப்புகள், தனியான ஒப்பந்தங்களின் கீழ், பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுடன் தரம் பற்றியும் மற்றும் பெற்றுக் கொள்ளப்படும் கடன்களை தீர்ப்பனவு செய்யும் வகையில் மின்சக்தி உற்பத்தி உறுதிசெய்யப்படுவது பற்றியுமான ஒப்பந்தங்களை செய்து கொண்டுள்ளன. ஆகையால், அத்தகைய பொருட்களின் தரம் நாம் எதிர்பார்க்கும் தரத்தில் காணப்படுவதால், மேலதிக நிபந்ததனைகள் ஏதும் விதிக்கப்படவில்லை.

(ஈ) தரவுகள் சேகரிக்கப்படும் போது சக்தி கோபுரங்களின் உபகரணங்கள் ஒரு சில சந்தர்ப்பங்களில் செயலிழப்பதால், அத்தகைய ஒரு சில கோபுரங்களிலிருந்து தொடர்ந்து தரவுகளைச் சேகரிப்பதில் இடையூறு காணப்படுகின்றது. ஏற்கெனவே, இந்தக் கோபுரங்களில் முல்லிபுரம் பிரதேசத்தில் அமைந்துள்ள காற்று சக்திக் கோபுரங்கள் அகற்றப் பட்டுள்ளன. பலாங்கொட மற்றும் கலமெட்டிய ஆகிய பிரதேசங்களில் அமைந்திருக்கின்ற காற்று சக்திக் கோபுரங்களிலிருந்து தரவுகளைச் சேகரிப்பதில் இடையூறு காணப்படுகின்றது. சீதாஎலிய, சிலாவத்துறை சூரியகந்தை மற்றும் நடுக்குடா ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள காற்று சக்திக் கோபுரங்கள் இயங்கும் நிலையிலுள்ளன. ஏனைய அத்தகைய சக்திக் கோபுரங்களையும் மீண்டும் இயங்கும் நிலைக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பலாங்கொட, கலமெட்டிய, முல்லிபுரம், சீதாஎலிய மற்றும் சிலாவத்துறை ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள காற்றுச் சக்திக் கோபுரங்களின் நிலைகளை அவதானிப்பதற்கும் மற்றும் தரவுகளை சேகரிப்பதற்கும் என கடந்த முறையே ஆகஸ்ட், ஏப்ரல், ஆகஸ்ட், யூலை, மே ஆகிய மாதங்களில் கள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதே போன்று, இந்தத் தரவுகளைப் பிரயோகித்து வரையப்படும் சூரிய சக்தி வரைபடங்கள் முல்லிபுரம், சீதாஎலிய மற்றும் நடுக்குடா ஆகிய பிரதேசங்களின் நிமித்தம் தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ளன. பலாங்கொட, கலமெட்டிய, சிலாவத்துறை ஆகிய பிரதேசங்களில் காணப்படும் சூரிய சக்தி வளங்கள் தொடர்பான வரைபடங்களைத் தயாரிக்கும் பணியும் 2017 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் அளவில் நிறைவு செய்யப்படவுள்ளது. மேலும், புத்தளம் பிரதேசத்திலுள்ள 120 மெ.வொ. சக்தி உற்பத்திக் கொள்திறனுடைய மின்னுற்பத்தி நிலையம் திட்டமிடப்பட்ட போது எமது அதிகார சபை நிர்மாணித்த முல்லிபுரம் காற்று சக்திக் கோபுரத்தின் தரவுகள் பயன்படுத்தப்பட்டன. மேலும், மன்னாரிலுள்ள 100 மெ.வொ. சக்தி உற்பத்திக் கொள்திறனுடைய மின் உற்பத்தி நிலையம் திட்டமிடப்பட்ட போது நடுக்குடா காற்று சக்திக் கோபுரத்தின் தரவுகள் பயன்படுத்தப்பட்டன.

(உ) 9 காற்று சக்திக் கோபுரங்களை நிர்மாணிக்கும் பொருட்டு இ-நெட் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட அந்த 9 காற்று சக்தி கோபுரங்களில் 8 காற்று சக்திக் கோபுரங்களின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப் பட்டிருந்தன. எனினும், கபரகல காற்று சக்திக் கோபுரத்தின் நிர்மாணப் பணிகள் மாத்திரம் நிறைவு செய்யப்படவில்லை. அந்த காற்று சக்திக் கோபுரத்தை நிர்மாணிக்கும் பொருட்டு 2011 ஆம் ஆண்டில் அதன் அத்திவாரப் பூர்வாங்கப் பணிகளுக்காகவும் மற்றும் காற்று சக்திக் கோபுரத்தின் நிர்மாணத்திற்காகவும் (Fabrication) முறையே ரூ.416,875 மற்றும் ரூ.833,750 தொகைகள் முற்பணங்களாக செலுத்தப்பட்டுள்ளன. மேலும், ரூ 576,500 நிதி செலுத்தப்பட்டு, காற்று சக்திக் கோபுரத்திற்கு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. மொத்தம் ரூ.1,827,125 தொகை செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிர்மாணப் பணிகள் 2017 ஆம் ஆண்டு மே மாதம் அளவிலும் நிறைவு செய்யப்படாதிருந்ததால், ஒரு கடிதத்தினால் அறிவிக்கப்பட்டதன் மூலம், குறித்த தரப்புக்கு வழங்கப்பட்டிருந்த குறித்த ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டது. பின்னர் எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் இந்தக் காற்று சக்திக் கோபுரத்தை வேறொரு இடத்தில் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது அவ்வாறு நிர்மாணிக்கப்படும் போது கபரகல காற்று சக்திக் கோபுரம் தொடர்பாக தயார்படுத்தப்பட்ட கோபுர நிர்மாணப் பாகங்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட உபகரணங்கள் பயன்படுத்தப்படவுள்ளன. தற்பொழுது அந்தக் காற்று சக்திக் கோபுரமும் மற்றும் அதன் உபகரணங்களும் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் பாதுகாப்பிலுள்ளன.

4.2 முகாமைத்து செயற்பாடுகள்

(அ) மூன்று மாதத்திற்குள் அபிவிருத்தி பணிகளை ஆரம்பிப்பதற்கும், இரண்டு வருடத்திற்குள் அத்தகைய அபிவிருத்தி பணிகளை நிறைவு செய்வதற்கும் இயலாது போகும் சந்தர்ப்பத்தில், குத்தகை ஒப்பந்தம் முடிவுறுத்தப்படும் என குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்பொழுது அந்த காணியில் மண்ணின் தன்மை பற்றிய ஒரு ஆய்வு நடத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. கட்டிட நிர்மாண பணிகளின் நிமித்தம் கட்டிடக் கலைஞர்கள் சங்கத்திடமிருந்து சேவைகள் பெற்றுக் கொள்ளப்பட்டு அந்த நிர்மாண பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்து காணப்படுகின்றன. குத்தகைத் தரப்பாகிய நகர அபிவிருத்தி அதிகார சபை கட்டிட அனுமதிப் பத்திரம் பற்றி கருத்திற் கொண்டு முடிவு செய்ய இல்லை என்பதால், இந்த நிபந்தனைகளை தளர்த்துமாறு அந்த அதிகார சபைக்கு எமது அதிகார சபை ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளது.

(ஆ) சேவையிலிருந்து ஒய்வுபெற்று செல்வதை முன்னிட்டு செலுத்தப் படும் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் தொடர்பான 1983 இன் 12 ஆம் இலக்க சட்டத்திற்கு இணங்க, பணிக்கொடைகள் செலுத்தப்பட்டுள்ளன. அதில் சீராக்கல் கொடுப்பனவும் உள்ளடக்கப்பட்டு கொடுப்பனவுகள் தொடர்பில் சரியாக கணக்கிடும் சூத்திரத்தை ஆராய்ந்து பார்க்குமாறு மேலதிக கணக்காய்வாளர் அதிபதியுடன் நடந்த கலந்துரையாடலின் போது அறிவுரைகள் வழங்கப்பட்டன. அதன் நிமித்தம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(இ) இந்தக் குறிப்பில் மோசடி என சுட்டிக்காட்டப்பட்ட அறிக்கை ஒரு ஓய்வுபெற்ற அதிகாரியினால், எமது பணிப்பாளர்கள் சபை அழைப்பு விடுத்ததன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கையாகும். அந்த அறிக்கை பல தவறுகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டமை அப்போது அவதானிக்கப்பட்டதன் பின்னர் அந்த அறிக்கையை ஒரு வழிகாட்டியாக கருதி தீர்மானமெடுப்பது சரியில்லை என்பது கருத்திற் கொள்ளப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆகையால். அந்த தவறுகள் அடங்கிய அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு சம்பள நிலையை நிர்ணயிப்பது பொருத்தமானதல்ல. மேலும், அதிகார சபை ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் அதன் வாரிசு நிறுவனமாக விளங்கிய சக்திப் பாதுகாப்பு நிதியத்திலிருந்த ஊழியர்களுக்கு இந்த அதிகார சபை சட்டத்தின் 69 (உ) பிரிவின் கீழ் இரண்டு மாற்றுவழித் தெரிவுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

i. அதிகார சபையில் தொழில் வழங்கப்பட்டு அந்தத் தொழிலை ஏற்ற சக்திப் பாதுகாப்பு நிதியத்தின் ஒவ்வொரு அலுவலருக்கும் மற்றும் ஒவ்வொரு ஊழியருக்கும் உரிய தினத்திற்கு முன்னர் அவரின் தொழில் தொடர்பாக அவருக்கு விதிக்கப்பட்டு இருந்த நிபந்தனைகளை விடவும் பாதிப்பற்ற அதே நிபந்தனைகளின் அடிப்படையில், இந்த அதிகார சபையில் சேவையில் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும்; இல்லையெனில்,

ii. அதிகார சபையில் தொழில் வழங்கப்பட்டாமல் அல்லது அவ்வாறு தொழில் வழங்கப்பட்டு அந்தத் தொழிலை ஏற்றுக் கொள்ளாத சக்திப் பாதுகாப்பு நிதியத்தின் ஒவ்வொரு அலுவலருக்கும் மற்றும் ஒவ்வொரு ஊழியருக்கும், சபையிடம் வினவி அமைச்சரினால் நிர்ணயிக்கப்படும் ஒரு நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படுதல் வேண்டும்.

இதன் பிரகாரம் (1)-வது மாற்றுவழிப் பிரேரணைக்கு உடன்பட்டு இந்த அதிகார சபையின் சேவையில் இணைந்த உழியர்களுக்கு அவ்வாறு உடன்பட்ட சம்பளத்தை வழங்க அதிகார சபை கடமைப்பட்டுள்ளது. ஆகையால், சம்பளப் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது பற்றிய முழுமையான ஒரு அறிக்கை பணிப்பாளர்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

(ஈ) இந்தக் கருத் திட்டம் ஒரு தெழில் நுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட ஒரு கருத் திட்டமாகும். இந்தக் கருத் திட்டத்தின் குறிக்கோளாக அமைந்தது யாதெனில் கனிய எரிபொருளில் முழுமையாக தங்கியிருக்கின்ற போக்குவரத்துத் துறையை பல்லினப் படுத்தும் நிமித்தம் இலத்திரனியல் வலுவைப் பிரயோகிப்பதற்குள்ள சாத்தியத்தை வெளிப்படுத்துவதாகும். எனினும், இந்தக் கரும

விடயம் தொடர்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தத் தரப்பு அந்த கரும பணியை நிறைவு செய்யத் தவறியுள்ளது. இது தொடர்பாக சட்டமா அதிபரிடம் அறிவுரைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. அவர் எமக்கு அறிவித்தது யாதெனில் செலவு செய்யப்பட்டிருக்கின்ற நிதியுடன் ஒப்பிடும் போது நடுத்தீர்ப்புக்கு அல்லது சட்டநடவடிக்கைக்கு சென்றால், மிகவும் அதிக அளவில் செலவாகும் என்று. அகையால், இந்தக் கருத் திட்டத்தை உரிய முறையில் வெற்றிகரமாக நிறைவு செய்வதிலுள்ள சாத்தியம் பற்றி ஆராய்ந்து பார்க்குமாறு அமைச்சின் செயலாளரினால் உரிய ஒப்பந்தத் தரப்பின் ஊடாக இந்த அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் நிமித்தம் காணப்படும் மாற்றுவழித் திட்டங்களை அறிமுகப்படுத்தும் விரிவான ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை 2 வாரங்களுக்குள் அமைச்சுக்கு ஒப்படைக்க முடியும்.

4.3 இயங்காத குறை பயன்பாடுடைய சொத்துக்கள்

(அ) பதவியணியினருக்கு செலுத்தப்பட்ட இந்த கொடுப்பனவுக்கான இணக்கப்பாட்டை கோரி மின்வலு சக்தி அமைச்சினது செயலாளரின் மூலமாக 2012-12-05 ஆம் திகதி திறைசேரிக்கு ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தின் 13 ஆம் இலக்க அறிவுரைகளின் பிரகாரமும் சுற்றாடல் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் செயலாளரினூடாகவும் 2013.01.04 ஆம் திகதி, திறைசேரியின் இணக்கப்பாட்டை கோரி ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இது பற்றிய முழுமையான விபரங்கள் அடங்கிய ஒரு கடிதமும் 2014.12.02 ஆம் திகதி சுற்றாடல் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் செயலாளரினூடாக பொது தொழில்முயற்சிகள் பற்றிய குழுவுக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரதிகள் திறைசேரிக்கும் மற்றும் கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களத்திற்கும் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், இது பற்றி விபரங்களை சமர்ப்பித்து, அங்கீகாரத்தை கோரி திறைசேரிக்கு ஒரு கடிதம் மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சினது செயலாளரின் மூலம் 2016.12.06 ஆம் திகதி குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) உங்களின் நகல் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு அதிகார சபையின் 54 - 3189 ஆம் இலக்க கெப் வண்டி இது வரை சுமார் 2 ½ வருட காலமாக இயங்காமல் இருந்து வருகின்றது. இது தொடர்பில் 2015.06.17 ஆம் திகதி Automobile Association of Ceylon நிறுவனத்திலிருந்து ஒரு மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அந்த கெப் வண்டியை பழுதுபார்ப்பது பொருளாதார ரீதியில் நன்மை அளிக்காது என்பதால் அதனை அகற்றுமாறு அந்த அறிக்கையில் சிபாரிசு செய்து அறிவிக்கப்பட்டுள்ளது.

4.4 பதவியணி நிருவாகம்

(அ) இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் குறிக்கோள்கள், கடமைப் பணிகளை நிறைவேற்றுவதற்கு உகந்த ஒரு நிறுவனக் கட்டமைப்பு மற்றும் ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான ஒரு ஆட்சேர்ப்புத் திட்டம் என்பவற்றைத் தயாரித்து அவை சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டாலும் கூட, அவற்றின் நிமித்தம் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

2007 ஆம் ஆண்டிலிருந்து இது வரை ஆட்சேர்த்துக் கொள்ளும் திட்டமும் மற்றும் நிறுவனக் கட்டமைப்புகளும் பல தடவைகளில் தயாரிக்கப் பட்டாலும், அவற்றில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக அவை நிராகரிக்கப்பட்டன. பின்னர் முகாமைத்துவ

சேவைகள் திணைக்கள ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஒருவரின் உதவியுடன் 2007 ஆம் ஆண்டு முதல் இன்று வரையுள்ள பதவி எண்ணிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, அதில் சிறு சிறு திருத்தங்களை மேற்கொண்டு அத்தகைய திருத்தங்கள் அடங்கிய ஒரு நிறுவனக் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவையின் அங்கீகாரத்திற்காக குறிப்பீடு செய்யும் பொருட்டு மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) அனுமதிக்கப்பட்ட ஒரு ஆட்சேர்ப்புத் திட்டம் இல்லாததால் நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு விவகாரங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ளன. ஆகையால், ஏற்கெனவே அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப் பட்டுள்ள குறித்த ஆட்சேர்ப்புத் திட்டம் அனுமதிக்கப்பட்ட பின்னர் சகல ஆட்சேர்ப்பு செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியும்.

(இ) கணக்காய்வு விசாரணையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு நியமிக்கும் அதிகாரி பணிப்பாளர்கள் சபை என திருத்தப்படுதல் வேண்டும். (2007 இன் 37 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் 55 (1) ஆம் பிரிவு). பணிப்பாளர் நாயகத்தின் சிபாரிசின் பேரில், பணிப்பாளர்கள் சபையின் தலைவர் என்ற ரீதியில் சபையின் தலைவர் குறித்த நியமனங்களைச் செய்துள்ளார். சிரேஷ்ட நிபுணரின் (மனித வளங்கள்) மூலம், பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் (செயற்பாடுகள்) மூலம், பணிப்பாளர்கள் நாயகத்தின் மூலம், என சிபாரிசுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன (தனியாள் கோவைகளைப் பரிசீலிக்கும் போது அதனை உறுதிசெய்து கொள்ள முடியும்).

4.5 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு பெற்றுக் கொடுத்த வளங்கள்

மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி மற்றும் மின்சக்தி வினைத் திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றின் நிமித்தம் தாபிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் அதிகார சபையான இந்த அதிகார சபை நிரல் அமைச்சுடன் நிதமும் ஒருங்கிணைந்து செயற்படுகின்றது. குறிப்பாக, சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சட்ட ஏற்பாடுகளை செயற்படுத்தும் பொருட்டு பல விதிமுறைகள், கட்டளைகள் மற்றும் மேலும் சட்ட மைய ஆவணங்கள் என்பவற்றைத் தயாரிப்பதற்கு பெருமளவான பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன. இதன் நிமித்தம் சிறந்த ஒரு மாற்று- வழியாக, அதிகார சபையின் அனுபவம், தொழில் நுட்ப விடயம் முதலிய நிருவாக விவகாரங்கள் தொடர்பில் உகந்த பரிட்சயமுடைய திரு சமில ஜயசேக்கர அவர்கள் அமைச்சுக்கு அனுவதித்தல் அடிப்படையில் தனது சேவையை வழங்குவார் என்பது அதிகார சபையின் நம்பிக்கையாகும். இந்த அலுவலர் அமைச்சின் பணிப்பாளர் பதவிற்கு (தொழில் நுட்பம்) இணைக்கப்பட்டிருந்தாலும் கூட, இந்த அதிகார சபையின் பொறுப்புப் பணிகளும் மற்றும் கடமைகளும் அந்தக் காலப் பகுதியில் அவரினால் குறையின்றி நிறைவேற்றப்பட்டமையையும் மற்றும் அதிகார சபையின் தேவைகளை அமைச்சு மட்டத்தில் மிகவும் விரைவில் நிறைவேற்றிக் கொள்வதற்கு அவர் பங்களித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இந்த அனுவதித்தல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட குறித்த நியமனம் இந்த அதிகார சபையின் விவகாரங்களுக்கு பெரிதும் துணையாக அமைந்துள்ளது என்பது அதிகார சபையின் கருத்தாகும்.

5 பொறுப்புக் கூறலும் நல்லாட்சியும்

5.1 நிதிக் கூற்றுக்களை தயாரித்து முன்வைக்கும் முகாமைத்துவத்தின் பொறுப்புக்களை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5.2 2012-2016 ஆம் ஆண்டு காலப் பகுதிற்கான ஒரு கூட்டிணைந்த திட்டம் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டது. அதன் கீழ் இனங்காணப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் நீண்ட கால நிகழ்ச்சித் திட்டங்களாக செயற்படுத்தப்பட்டன. அதன் பின்னர், கால வரையின் நிமித்தம், முந்துரிமை அளிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கி 2015-2025 எனும் பத்து ஆண்டுத் திட்டமும் தயாரிக்கப்பட்டது.

தேசிய சக்திக் கொள்கைகள் மற்றும் அவற்றை செயற்படுத்தும் முறைகள் என்பன அமைச்சினால் தயாரிக்கப்பட்டன. அவற்றுக்குப் பொருத்தமாக, குறிப்பாக நிலையான சக்தி அபிவிருத்தி தொடர்பில் சக்திக் கொள்கைகளைத் தயாரிக்கும் பொருட்டு அதிகார சபையின் அதிகாரிகளினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. சக்திக் கொள்கைகள் தயாரிக்கப்பட்டதன் பின்னர், அவற்றுக்கு இணையான வகையில் நிறுவனத்தின் கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரிப்பது குறிக்கோளாக அமைந்தது. சக்திக் கொள்கைகள் தொடர்பான நகல் ஏற்கெனவே உரிய மீளாய்வுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், கூட்டிணைந்த ஒரு திட்டத்தைத் தயாரிப்பதற்கான பணி ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

5.3 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தின் கீழ் 100 நாள் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்ட பின்னர், 2016 ஆம் ஆண்டிற்கு அதிகார சபையினால் சம்பிரதாய ரீதியில் வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. அவ்வாறிருந்தாலும், 2015 ஆம் ஆண்டு இறுதியில் நடத்தப்பட்ட பாராளுமன்றத் ததேர்தலின் பின்னர், புதிய ஒரு அமைச்சரவை நியமிக்கப்பட்டது. நிரல் அமைச்சுக்களின் அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும் புதிதாக நியமிக்கப்பட்டனர். ஆகையால், புதிய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு இணங்க, எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்களை நிர்மாணிக்கும் பணி 2016 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்டது. அது வரைக்கும் தயாரிக்கப் பட்டிருந்த 2016 ஆம் ஆண்டிற்கான வேலைத் திட்டத்தை இதனால், முழுமையாக செயற்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை.

அழைப்புகளை அடிப்படையாகக் கொண்டு புதிய உபாயத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை, அதே நேரம் மின்சக்தி வினைத் திறனை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டம் புதிய முனைப்புகளுடன் ஜனாதிபதி சிறப்புச் செயலணியின் கீழ் மறுசீரமைக்கப்பட்டமை முதலிய அம்சங்களைக் குறிப்பிட முடியும். இதன் பிரகாரம், 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிர்மாணித்த வேலை திட்டத்தை செயற்படுத்துவது பிரச்சினையாக மாறியது. ஆகையால், அந்த ஆண்டில் செயலாற்றுகை சுமாராக 40% வீத அளவில் காணப்பட்டது என்பதை குறிப்பிடுவதற்கு விரும்புகின்றேன். எனினும், குறித்த அந்த ஆண்டில் பயனுள்ள விதத்தில் எதிர்கால செயற்பாடுகளை திட்டமிட்டு நிர்மாணிக்கும் பொருட்டு இது அதிகார சபை மூலம் பயன்படுத்தப்பட்டது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

5.4 ஒரு பிரதான உள்ளகக் கணக்காய்வாளரை ஆட்சேர்த்துக் கொள்ளும் பொருட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை மாத்திரம் ஆட்சேர்த்துக் கொள்ளும் பொருட்டு 2018.06.01 ஆம் திகதி அங்கீகாரம் கிடைத்துள்ளது.

5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவன முகாமைத்துவ விடயம் தொடர்பாக ஒதுக்கப்பட்ட 6 மில்லியன் ரூபா முதலீட்டில் எஞ்சியுள்ள 3.4 மில்லியன் ரூபா அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு அவசியம் என்றிருந்த காணியைப் பெற்றுக் கொள்வதற்காக செலவு செய்யப் பட்டது. ஆகையால், இந்த நிதியில் சற்றும் மீதியாக இருக்கவில்லை.

(அ) இதில் ஓய்வூதியப் பணிக்கொடைக் கொடுப்பனவுகளை ஆண்டு ஆரம்பத்தில் சரியாக மதிப்பிட முடியவில்லை. எனினும், ஓய்வூதியப் பணிக்கொடைகள் சட்டத்தின் பிரகாரம், இது செலுத்தப்பட வேண்டும் என்பதால், இதில் ஒரு வித்தியாசம் காணப்படுகின்றது.

மேலும், வெளிநாட்டுப் பிரயாணங்கள், வெளிநாட்டுப் பபயிற்சிகள் என்பவற்றுக்கு வெளிநாட்டு அழைப்பு வாய்ப்புகள் 2016 ஆம் ஆண்டில் கிடைக்கும் என்பதால், எமது அதிகார சபையின் முன்கூட்டிய திட்டத்தின் பிரகாரம் இதனை நிறைவேற்ற முடியாது. ஆகையால், அதுவும் வரவுசெலவுத்திட்டத்துடன் வித்தியாசங்களை காட்டுகின்றது.

குறைந்த அளவில் செய்திப் பத்திரிகைகளை வாங்கியதால் அதிக நிதி எஞ்சியுள்ளது.

6 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வாளர் அதிபதியினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரிவுகள் தொடர்பில் விஷேட கவனத்தைச் செலுத்தி, அவற்றை பொருத்தமான குறிக்கோள்களும், இலக்குகளும் நிறைவேற்றப்படும் வகையில் குறிப்பீடு செய்யப்படுவதற்காகவும் மற்றும் குறித்த குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை சீர்செய்து கொள்வதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்படும். இதில் குறிப்பிடப்பட்டுள்ள கணனிப் பதிவேட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு முதல் அதனூடாக கணக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.